Reg. No. 2456.

ஆங்கீரஸ-ஆனி & ஆடி.
1932-ம் வருஷ ஜூன், ஜூலை & ஆகஸ்டு மீ




17 AUG 1932

மாலை 4. மணி 3 & 4

ஓர் செந்தமிழ்

# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

7L
,211,N29BH
N32.4.3-4
197881

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

# — — சரோஜ் நளினி — —

என்ற இச் சிறந்த நூல், இந்தியப் பெண்கள் சீர்திருத்தம்
பெற, தமது இளமையைத் துறந்தும், சுகபோகங்களை
மறந்தும், உடல், பொருள், ஆவி அனைத்தையும்
ஈந்தும் தொண்டாற்றி, இந்திய உலகத்தில்
ஒப்பற்ற புகழ் படைத்து, உடல்
மறைந்த வங்கநாட்டின் மாது
சிரோன்மணி

17 AUG 1932

## சரோஜ் நளினி தேவியாரின்

ஜீவிய சரித்திரமாகும்

இதில் அவரது அரும் பெரும் முயற்சியால் ஆரம்பிக்கப் பெற்று, சீரிய முறையில் நடைபெற்றுவரும் நிலயங்களுடன், அவர்தம் ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பெற்று உயர்ந்த முறையில் சிறந்த பணியை மிகுந்து உகந்து ஆற்றி வரும் சங்கங்கள், கைத்தொழிற் சாலைகள், கலா பீடங்கள் முதலியவற்றின் விளக்கமும் குறிப்பும் புள்ளி விபரமும் நன்கு விளக்கப்பெற் றிருக்கின்றன.

உரிமையற்று வாடும் தமிழ்நாட்டு மாதர்களுக்கு
இஃதோர் அஸ்த பூஷணம்—அருட் பிரசாதமென்றே கூறவேண்டும்.
பல சித்திரப் படங்களுடன் வெளிவருகிறது.

எதிர்பாருங்கள்! ▣ எதிர்பாருங்கள்!!

---

## போலந்து நாட்டின் சுதந்திரம்.


காவியம் (செய்யுள் நூல்)

காசி திரு. பா. ஆதிமூர்த்தி அவர்கள் இயற்றியது.

ஜான்ஸி ராணி அளவான புத்தகம்.

1½ அணு ஸ்டாம்பு அனுப்புவோருக்கு ஒரு புத்தகம் அனுப்பப்படும்.

"பாரதி" புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாலிகை.

19781

தொ. ம. எண் 600 098

## பொருள் அடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பாரதியாரின் குயில் பாட்டு ... ... | 161 |
| 2. | பல்விதம் உதவுங்கள் ... | 163 |
| 3. | பாரத நாட்டின் பண்டைக் கலைகள்:—<br>திரு. O. P. தேசிகன் அவர்கள் ... | 169 |
| 4. | ஜன நாயக ஆட்சி:—திரு. C. A. பெருமாள் அவர்கள் ... | 182 |
| 5. | கம்பரும் காந்தியடிகளும்:—<br>ஆசிரியர் திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள் ... | 187 |
| 6. | தமிழர் மணம்:—<br>பண்டித திரு. அ. கிருஷ்ணஸ்வாமி நாயுடு அவர்கள் ... | 191 |
| 7. | பர்மாவின் சரித்திரக் குறிப்புகள்:—<br>திரு. வி. நாகையா அவர்கள் ... | 192 |
| 8. | தமிழ் நாடும் புத்தகாலயங்களும்:—<br>திரு. N. வேங்கடரமணன் அவர்கள் ... | 197 |
| 9. | பூமியின் உட்பாகம்:—<br>திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B.Sc., (Hons.) ... | 204 |
| 10. | பண்டைக்காலத்து தக்ஷசிலா சர்வகலாசாலை:—<br>திரு. A. ராமசாமி அவர்கள் ... | 208 |
| 11. | 'பாரதி'யின் விகட வகுத்தல் 2... ... | 219 |
| 12. | 'பாரதி'யின் விகட வகுத்தல் 1-ன் விடையும் வழியும் ... | 221 |
| 13. | எனது ரயில்வேப் பயணம்:—<br>ஜனப். S. சையது அஹமது அவர்கள் ... | 223 |
| 14. | 'பாரதி'யின் குறுக்கெழுத்து பந்தனம் 2.... ... | 228 |
| 15. | 'பாரதி' குறுக்கெழுத்து பந்தனம் 1-ன் விடை... ... | 229 |
| 16. | பெண் கல்வி:—<br>ஸ்ரீமதி வி. எஸ். சுப்புலக்ஷிமி அம்மாள் அவர்கள் ... | 230 |
| 17. | மகா கவி ஷேக்ஸ்பியர்—திரு. S. R. A. ஐயர் அவர்கள் | 236 |
| 18. | ஆராய்ச்சி மேடை ... ... ... | 245 |
| 19. | அறிக்கை ... ... ... | 248 |
| 20. | ஆசிரியர் குறிப்புகள் ... ... ... | 249 |



ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

| மாலை 4 | ஆங்கீரஸ-ஆனி<br>1932-ஹு ஜூன்—ஜூலை | மணி 3 |
|---|---|---|


# பாரதியாரின் குயில் பாட்டு.

காதல், காதல், காதல்,
காதல் போயில் காதல் போயில்
சாதல், சாதல், சாதல். (காதல்)

1. அருளே யாநல் லொளியே,
ஒளிபோமாயின் ஒளிபோமாயின்
இருளே, இருளே, இருளே. (காதல்)

2. இன்பம், இன்பம், இன்பம்,
இன்பத்திற்கோ ரெல்லைகாணில்,
துன்பம், துன்பம், துன்பம். (காதல்)

3. நாதம், நாதம், நாதம்,
நாதத்தேயோர் நலிவுண்டாயில்
சேதம், சேதம், சேதம். (காதல்)

4. தாளம், தாளம், தாளம்,
தாளத்திற்கோர் தடையுண்டாயில்
கூளம், கூளம், கூளம். (காதல்)

5. பண்ணே, பண்ணே, பண்ணே,
பண்ணிற்கேயோர் பழுதுண்டாயின்
மண்ணே, மண்ணே, மண்ணே. (காதல்)

6. புகழே, புகழே, புகழே,
புகழுக்கேயோர் புரையுண்டாயின்
இகழே, இகழே, இகழே. (காதல்)

7. உறுதி, உறுதி, உறுதி,
உறுதிக்கேயோர் உடைவுண்டாயின்
இறுதி, இறுதி, இறுதி. (காதல்)

8. கூடல், கூடல், கூடல்,
கூடிப் பின்னே குமரன் போயில்,
வாடல், வாடல், வாடல். (காதல்)

9. குழலே, குழலே, குழலே,
குழலிற் கீறல் கூடுங்காலை
விழலே, விழலே, விழலே. (காதல்)

# பல்விதம் உதவுங்கள்.

## நாட்டின் நிலைமை




இந்திய நாட்டின் நிலைமை எப்பக்கம் நோக்கினும் விரும்பத்தக்க வண்ணமில்லையென்பதை நன்கு அறியலாம். ஏற்கெனவே உலகத்தைப் பீடித்த பணக் கஷ்டம் இந்தியாவையும் பலமாகத் தாக்கி மக்களின் மன நிலையைப் பெரிதும் மாற்றி வருகிறது. மற்றத் தேசங்களில் தொழிலற்றோரின் கணக்கைப் பிரசுரப்படுத்துவது போல், நம் நாட்டாரின் வேலையற்றோர் தொகையையும் பிரசுரிக்காதிருந்து வருவதற்கு விசேஷகாரணமில்லாமலில்லை. இந்திய அரசாங்கம் செம்மையுற்று அரசியலை நடத்தும் நாளிலேதான் மற்ற யாவும் சீர்பெறுமென நம்மவரில் பெரும்பாலோரின் எண்ணமாயிருந்து வருகின்றது. ஆயினும் அதற்காக நம் செய் கருமங்களைக் கைவிட்டு விடுவதா? என்பதே கேள்வி.

தேசத்தின் செல்வ நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வரும் போது, தொழிலற்றோரின் தொகை லக்ஷக் கணக்காகப் பெருகி வரும் போது, வியாபாரப் பொருள்களனைத்தும் ஏற்றுமதியின்றி விலை குறைந்து வரும்போது தேசத்தார் ஒருமிக்கச் சேர்ந்து ஓர் நல்ல வழியைக் கண்டு செல்வத்தைக் சட்டுப்படுத்தி பஞ்ச நிலையைத் தடுக்க வேண்டிய தவஸ்யமல்லவா?

## விளை பொருள்கள்

இந்தியாவின் விளை பொருள்களில் விசேஷமானவை நெல், கோதுமை, சணப்பு, பருத்தி, தேயிலை முதலியவைகளாகும். இவையன்றி மற்ற தானிய வகைகளும், பயறு வகைகளும், சில்லரைச் சரக்குகளும் இன்னுளைப் போன்று மிகமிக மலிவாக சென்ற 20 வருடத்திற்குப் பின்னர் குறைந்திருந்ததில்லை. இவைகளில் பலவற்றின் விலை அக்காலத்திலும் குறைவாக விற்காமல், சென்ற இரண்டு வருடங்களுக்கு

முன்னர் விற்ற விலையைப்போலவே சுமாராக இருந்து வந்தது. பணத்தை வல்லரசுகளாகிய அமெரிக்காவும் பிரஞ்சும் கட்டுப்படுத்திக்கொள்ளவே ஏற்றுமதிப் பொருள்களாகிய சணம்பு, பருத்தி, தேயிலை, நெல், கோதுமைகளின் விலை குறைந்துவிட்டதிற்கு மூல காரணமென்பதுடன், ஆங்காங்கு இப் பொருள்களில் சில அபரிமிதமாக அயல் நாட்டார் உற்பத்திசெய்து போட்டி போட்டதும் பிரதானமாகும்.

இந்தியர் அடிமைகள்; அவர்களின் ஞானமோ, சிறப்போ, செல்வமோ உலகத்தாரின் முன் சமமாகவிருக்கத் தக்கதல்லவென்று எண்ணி யிடர் செய்துவரும் மூட சிகாமணிகளின் குழுவினராகிய ஓர் சிலரின் எதிர்ப்பினால், தேச மக்கள் அல்லலுற வேண்டி யிருக்கின்றது. காப்பற்ற நிலைமையில் இந்தியர் தொழில்களையும் பிறவற்றையும் மற்றவருக்குச் சமமாகச் செய்ய முயற்சித்து வருவது ஆச்சர்யப்படத்தக்கதென்பதில் ஐயமில்லை.

இவையன்றி இந்தியருக்குற்றுள்ள துன்பம் நாளுக்கு நாள் மிகுவதாகவே யிருக்கின்றது. இந்தியாவின் நிலை, ஓர் நிலைபட எதிலும் கருத்தைச் செலுத்த முடியாமல் தயங்கித் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது மதங்கொண்ட—பேராசையுற்ற செல்வர்கள், காலமெல்லாம் வேலை வாங்கி கொழுக்கச் சம்பாதித்துக்கொண்டு, ஏழை இந்தியக் கூலிகளை இந்தியாவுக்குச் செலவு கொடுத்தனுப்பி வைத்து வருகின்றார்கள்.

ஆசைகாட்டி அழைத்துச் சென்ற இந்தியர்களை—சாண் வயிறு வளர்க்கத் தாயகம் நீங்கிய இந்தியர்களை இந்தியாவினின்றும் ஆயிரக் கணக்கான மைல் தூரமுள்ள விடத்திற்கெல்லாம் ஏற்றிச் சென்றார்கள்! கூலி வேலையே குறியாக மலேயா, சிங்கப்பூர், பினாங், மோரிஸ், பீஜி, நெட்டால், தென்னாப்பிரிக்கா, இலங்கை முதலிய இடங்களில் ரப்பர் தோட்டங்களில், ஈயச் சுரங்கங்களில், தேயிலைத் தோட்டங்களில் தம் வலியைச் செலுத்தி முதலாளிகளுக்கு மென்மேலும் கருங்காடுகளைச் செம்மைப்படுத்தி அபரிமிதமாக இலாபம் பெற உழைத்த, இவர்களுக்கோ இக் கதி? நன்மைக்குத் தீமையே பிரதிபலன் போலும்!

ரப்பர், தேயிலை, ஈயம் இவைகள் மிகுந்துவிட்டது காரணமாக வியாபாரம் நின்றுவிட்டதினால், இவ்விதம் கூலிகளை தாயகமனுப்புவ



தாக முதலாளி வர்க்கம் சமாதானம் செப்புகின்றது. இச் சமாதானத்தை இந்திய அரசாங்கமும் கௌரவமாக ஏற்றுக்கொண்டிருக்கிறது பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் ஒன்று மட்டும் அரசாங்கத்திற்கு அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

நெடுங்காலமாக மிக அதிகமாக இலாபம் பெற்றுவந்த முதலாளிகள், இந்த நெருக்கடியான காலத்தில் இவ்விதம் செய்துவிட்டதை இந்திய அரசாங்கம் ஓர் முறையில் ஒப்புக்கொண்டாலும், மறுசமயம் அவர்களுக்காக சலுகை காட்டுவது கூடாதென்பதே. கஷ்டகாலத்தில் ஒதுக்குவதும் க்ஷேம காலத்தில் விரும்புவதுமாயுள்ள நிலையற்ற முதலாளிகளின் செயல்களை முழுவதும் வெறுக்கின்றோம்.

நூற்றுக்கு நூறாக லாபத்தைச் சதாகாலமும் ஒருவரோ பலரோ எதிர்பார்த்தல் முடியாதென்பது பகிரங்கம். இவ்வித கொள்கையுற்ற முதலாளி வர்க்கத்தினர் இந்தியர்பால் சலுகையுடன் கருணையாக நடப்பதை எதிர்பார்த்தல் வியர்த்தமே.

இந்தியாவிலும் பொருள்களின் விலைவாசிகள் மிகவும் மலிவுடையதாகவே வந்துகொண்டிருக்கின்றது. இங்குக்கூட அவ்விதம் தொழிலாளர்களை நீக்கிவருவதாகச் சொல்லமுடியாது. சிலவிடங்களில் இப்பிரச்சினை எழும்புகின்றதெனினும், இதனால் பாதகம் மிகுதியும் நிகழ்ந்துவிடாது அல்லாமலும் தமது நாட்டில் வறுமையைக்கூட பிரியத்துடன் சகித்துக்கொள்ளும் இயல்பை இந்தியர்களடையலாம். ஆனால் அயல்நாடு சென்று, வேலையற்றுத் திரும்பியவர்களுக்கு யார் உதவிசெய்வது? சர்க்காரின் காப்பற்ற நிலையில் இம்மாதிரியான எதற்கும், தீர்க்கமாக நன் முடிவு காண முடியாது என்பது உண்மையே. என்றாலும் இவ் வகையான தொழிலாளர்களுக்கு ஓர் வழி வேண்டியதே. சமீபத்தில் அவர்களின் சிரமம் ஒழிய நல்வழியொன்று கிடைக்கப்பெறலாம் எனவே எதிர்பார்க்கிறோம். அதற்காக தொழிலாளர்கள் உணர்ச்சியும் முயற்சியும் உடையவர்களாக வளர்வதொன்றை நாடு விரும்பிக்கொண்டிருக்கின்றது.

## வியாபாரிகள்

இந்தியப் பொருட்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வியாபாரம் செய்துவரும் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள், இதுபோது நேர்மையாயும் திறமையாயும் நடந்து இந்திய வியாபாரத்தின்

மேன்மையைக் காக்கவேண்டியது முதன்மையான கடமையாகும். வியாபாரிகள், சீர்குலைந்திருக்கும் மார்க்கட்டுகளைத் தங்கள் முயற்சியாலேயே மேன்மைக்குக் கொண்டுவரவேண்டும். போட்டிபோடுவதும் மோசக் கருத்தும் கொள்ளாது, நேர்மையும் பக்ஷமும் காட்டி, விவசாயிகள்பாலும் தொழிலாளர்கள்பாலும் வியாபாரத்தின் தாழ் நிலையை மாற்றி உயர்த்துவார்களாக. அது ஒன்றைச் செய்வதே இன்று தேசத்திற்குச் செய்யும் சிறந்த பணியென வியாபாரிகள் மதித்து செழிப்பையும் க்ஷேமத்தையும் நாட்டில் நிலைக்கச்செய்ய முயல்வார்களாக.

## தொழிலாளிகள்—விவசாயிகள்

அரும்பாடுபடும் தொழிலாளர்களும் விவசாயிகளும் அறியவேண்டிய முதன்மையான விஷயம் இரண்டாகும். எதிலும் அவசரமாக வீழ்ந்துவிடாது தீர ஆலோசித்து நியாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது ஒன்றாகும். மற்றது ஜாதி மத பேதத்தை விடுத்து நாட்டுக்கும் மக்களுக்கும் நலம் தருமெனத் தீர்க்கமாகக் கண்டறிந்தவையைக் கைக்கொண்டு பணியாற்றுவதாம். இவை இரண்டிலும் தவறிவிட்டால் மனச் சஞ்சலமும் வாழ்வில் வெறுப்பும் தோன்றி கூடாததும், நிலையற்றதும், தீமையே பயப்பதுமாகிய படுகுழிக்குச் செல்லவே வழிகோலப்படும். இதனால் நாட்டுக்கு மாறாத பழிச் சொல்லும் சம்பவித்து பெருங் கஷ்டத்தையும் மிகுதியான நஷ்டத்தையுமே ஒருங்கு தரும். ஆகையினால், ஓர்ந்து ஓர்வழி பற்றி நன்மை தருவதற்கும்—செய்வதற்கும்—பெறுவதற்கும் முயலுவதே சாலச் சிறந்ததும் போற்றப்படுவதுமாகும் என்பதை அறிந்து, செயலில் பிரவேசிக்க வேண்டும்.

தோழர்களாகிய தொழிலாளர்கள் தமது பாஷைவாசிகள்—தமது நாட்டார் இவர்களிடத்தில் மட்டும் பற்றும் மரியாதையு முடையவர்களா யல்லாது யாவரிடத்திலும் தங்களது மேன்மைக் குணத்தையே காட்டி அனுதாபத்தை எல்லோரிடமும்பெற சங்கற்பித்துக்கொள்ள வேண்டும். தொழிலுடையார் எங்கும் எப்பொழுதும் சென்று புகழும் பொருளும் படைப்பதற்கேற்ற முறையில் வளர்ந்து வருவதே உயர்ந்த முறையாகும். அன்றியும் ஆதரவற்ற ஏழைகளாகிய தொழிலாளர்களுக்கு, தொழிலாளர்கள் அவர்கள்பால் விசேஷ கவனப் செலுத்தி அவர்களையும் தம் நிலைக்கு உயர்த்திச் சமன் செய்துவருவது சோதர நிலைமைக்கு மேலும் சிறந்த உதாரணமாகும்.



வீணான அமளிகள்—கூட்டங்கள்—செயல்களை விடுத்து, கக்ஷிப் படுகுழியில் வீழ்ந்துவிடாது, மதப் பைத்தியத்தில் உயிரிழக்காது தம் சோதரர்களைக் காக்கும் பிரதான கடமையையும், நாட்டின் நிலையான செல்வம், புகழ், ஞானம் இவற்றைச் சேர்க்கவும் வளர்க்கவுமான கடமையையும், அறிவு படைத்த தோழர்பால் சுமத்தப்பட்டிருக்கிறதை அறிவிக்கின்றோம்.

## செல்வர்கள்

கிடைத்ததைக்கொண்டு திருப்தியுறும் இந்தியரைப் பாழும் நாகரீகப் பேய் கவர்ந்து, நாளுக்கு நாள் ஒன்றை விட்டு ஒன்றை விரும்பச் செய்து, மற்ற நாட்டாரைப்போன்று சதா வறுமைக்குட் செலுத்திக் கொண்டிருக்கின்றது. செல்வத்திற்கும் கலைஞானத்திற்கும் மற்றும் உலகோர் போற்றும் ஒவ்வொரு அற்புத திறமைக்கும் உதாரணமாயிருந்த இந்தியா, தாழ் நிலையிலும் வறிஞர்களின் மனம் பயங்கரமான செயலை மட்டும் கொள்ளாமலிருக்கிறது கண்டு உவகையடைகின்றோம். உண்ண ஓர் கை உணவிற்கும்—உடுத்த ஓர் சிறு கந்தைக்கும் பஞ்சையராய்த் திரியும் எண்ணற்றோர் தொகை நாளும் பெருகாவண்ணம் நாட்டார் கவலையெடுத்துக்கொள்ளுவது அவசரமாகச் செய்ய வேண்டிய முதற் பணியென்போம். சிறப்பாக இப்பணியைச் செல்வர்களே மேற்கொள்ளவேண்டும். செல்வம் சீர்கெடாது, சீர்படவும் பெருகவும் இந் நன்முறையைக் கைக்கொண்டாலன்றி, செல்வம் செல்வமென்றே நழுவிவிடும். கால நிலையோ மக்களின் மன நிலையைச் சமாதானமின்றிச் செய்து வருகின்றதை அறிந்தேனும், செல்வர்கள் அடிப்படையான நாட்டு க்ஷேமத்தையும் அவர்களின் நலத்தையும் விரும்பி உழைக்க முன் வருமாறு அழைக்கின்றோம்.

இந்திய செல்வச் சீமான்கள், நாட்டினர் உறும் கஷ்டத்தைப் போக்க என்ன என்ன சிறந்த முறைகளையெல்லாம் கைக்கொள்ள வேண்டுமோ அவையனைத்தையும் தாமதியாது ஏற்று நலஞ் செய்ய முயற்சிக்கவேண்டும். இன்று நாட்டில் பணப் பழக்கம் குறைந்துவிட்டதினாலேயே இத்தனைக் கஷ்டத்திற்கும் காரணம். அதனை முழுதும் அகற்றப் போதுமான வன்மையற்றவர்களாகச் செல்வர்கள் எண்ணினாலும், பெரிதும் வெற்றியுற வழியில்லாமலில்லை. வியாபாரிகளுக்குத் தங்கள் பணத்தை ஈந்து வியாபாரத்தையும், விவசாயிகளுக்கு வேண்டிய முதலைத் தந்து பொருள்களை உற்பத்தி செய்தும், தொழிலாளர்களிடம் நெருங்கிப் பழகி அவர்களின் வாழ்வில் உண்மையான அனுதாபமுடையவர்களாயும்—ஆதரவு தருகின்றவர்களாயும் முன்வரும் செல்வர்களின் உதவி போற்றப்படுவதாயிருக்கின்றதை அறியவேண்டும். புகழும் செல்வமும் கிடைக்கும் சந்தர்ப்பத்தை இழக்க நமது

சீமான்கள் துணியக்கூடாதென்பதே நமது விருப்பமனைத்தும். செல்வர்களின் பணி அரசாங்கத்தின் பணியாகும். ஆனால், அரசாங்கம் இத் துறையில் பணியாற்ற இது சமயமாயில்லை. அதன் கருமங்கள் பல. அன்றியும் இதுபற்றிச் செய்யவேண்டிய வேலைகள் இந்திய சர்க்காருக்கு இங்கொன்றுமில்லையெனவே கூறிவிடலாம்.

## அறிஞர்கள்

கடாசியாக மேதாவிகளுக்கு ஓர் வார்த்தை. அதனை சுருக்கி ஈண்டுக் குறிப்பிட்டுவிட்டு இக் கட்டுரையை முடிக்கின்றோம்.

நாட்டின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இரு சாராரே உற்ற துணைவர்கள். தோழர்களாகிய தொழிலாளர்களாலும் தந்திரிகளாகிய அறிஞர்களாலும் இப் பணி முற்றுப்பெறுவதா யிருந்து வருகின்றது. இதற்கு ஆதாரம் தேச சரித்திரங்களே சான்றாக மெய்ப்பிக்கின்றன.

தோழர் நிலையோ மிகவும் மோசமானதா யிருக்கின்றது. அவர்களின் துன்பம் பயங்கரமானதாயும் பரிதாபப்படத் தக்கதாயும் வளர்ந்து வருகின்றது. அவர்களின் துணைவர்களாகிய அறிஞர்கள் மௌனம் சாதிப்பதும் ஒரு சிலர் மட்டும் உதவி நிற்பதும் தகுந்ததும் முறையுமானதல்ல. தாராளமாக ஒவ்வொரு அறிஞரும் தொழிலாளர்கள் படும்பாட்டை நாட்டார் அனைவரும் நன்கு அறியத் தமது தேர்ச்சியாலும் திறமையாலும் தெளிய விவரித்து மன மாற்றத்தையும், செல்வர்—தொழிலாளர் பிணக்கையும், வறுமையை யொழிக்க வழிகோலவும், சமரசத்தை வளர்க்கவும் முயலவேண்டும். இந்தியாவின் நிலைமையை உள்ளப்படியறியாதார் மிகவும் கவலையீனமாக இருந்து வருகின்றார்கள். இதுபற்றி மிகுதியும் வருந்த வேண்டியிருக்கின்றது. பட்டினியால் வாடும் மக்களின் துன்பம் வெடித்துவிடும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. இந்த மறைபொருளான பயங்கர காலத்தை, இந்தியச் செல்வர்களும் அறிஞர்களும் தடுக்க முடியாதபோது என்னாகும்? ஒன்றும் சொல்ல முடியாத—எண்ண முடியாத நிலையே சம்பவிக்குமென எச்சரிக்கின்றோம். செய்வதை காலம் தாழ்த்தாது செய்து அரும்பணியின் நற் பலனை நாட்டுக்காற்ற வேண்டுகின்றோம். அதுவே தேவி பாரதியின் விருப்பமென உணர்ந்து, ஆண்மையுடனும் ஆற்றலுடனும் தொண்டாற்றி, விவசாயிகளை தொழிலாளர்களை துன்பமுறுவோர்களை அன்பும் அருளும் உடைய செம்மல்களாகச் செய்யும் பணியில் சீர்திருத்தப் பெரியோர்கள் முயல்வது அவஸ்யம், அவஸ்யம்.

மாதேவி பாரதியாம் அன்னைதன் அருள் சுரக்குமாக.

---

# பாரத நாட்டின் பண்டைக் கலைகள்.

## II

(ஓர் ஆராய்ச்சி.)

திரு. O. P. தேசிகன் அவர்கள்.

(132-ம் பக்கத் தொடர்ச்சி)

### மருத்துவக்கலை

### ஆயுர்வேதம்

உலகில் வழங்கும் வைத்திய முறைகளில், ஆயுர்வேதமே மிகப் பழமை வாய்ந்ததாகும். சரித காலத்திற்கு முற்பட்ட பண்டை நாட்களிலேயே மருத்துவக் கலைகளில் ஹிந்துக்கள் விசேஷ அபிவிருத்தியை யெய்தியிருந்தனர். "ஐரோப்பிய மருத்துவக் கலையின் பிதாமகன்" என்று அழைக்கப்படும் ஹிப்போக்ரடீஸ் (Hippocrates) என்பவர், தமது வைத்திய சாஸ்திரத்தைப் பற்றிய ஞானத்தை (Materia Medica) ஹிந்துக்களிடமிருந்தே கற்றுணர்ந்ததாகத் தெரியவருகிறது. கி. மு. நான்காவது நூற்றாண்டில் கிரேக் நாட்டினர் இத் தேயத்திற்கு முதன் முதலாக விஜயம் செய்தகாலையில் ஹிந்துக்கள் சிகித்ஸா முறையில் மிகவும் சாமர்த்தியமும் அனுபவமும் வாய்ந்தவர்களாக யிருப்பதைக் கண்ணுற்றுப் பெரிதும் வியந்தனர். அதுகாலை இந்தியாவின்மீது படையெடுத்த அலெக்ஜாந்தர் சக்ரவர்த்தி, தமது நாட்டு வைத்தியர்களால் சுவஸ்தப்படுத்த முடியாத கொடிய நோய்களை சிகித்ஸை செய்யும் பொருட்டு ஹிந்து வைத்தியர்களுடைய உதவியை நாடி அவர்களையே தனது ஊழியத்தில் அமர்த்தியிருந்ததாகக் கூறப்படுகிறது. நியர்கஸ் (Nearchus) என்னும் யவன ஆசிரியர், தமது நாட்டிலுள்ள வைத்தியர்களால் பாம்புக் கடியை குணப்படுத்த முடியவில்லை யென்றும் ஆனால் அவ் விஷத்திற்குப் பரிகாரம் யாதென்பதை ஹிந்து வைத்திய சிரேஷ்டர்கள் அறிந்திருந்ததாகவும், அலெக்ஜாந்தரின் சமஸ்தானத்திற்கு சிகித்ஸைக்குக் கொண்டுவரப்

படும் விஷக் கடியால் அவதியுற்றவர்களனைவரையும் அவர்கள் சுவஸ்தப்படுத்தி, தமது அற்புத சாமர்த்தியங்களைப் பிரசித்தப்படுத்தி வந்ததாகவும் எழுதியிருக்கிறார்.

"ஹிந்துக்களின் மருத்துவ நூல்" என்னும் உயர்தர நூலையியற்றிப் பிரசித்தி பெற்ற லண்டன் கிங்ஸ் காலேஜ் ஆசிரியர் டாக்டர் ராய்ல் (Dr. Royle of the London Kings College) என்பவர், "வைத்திய சாஸ்திரத்தை முதன் முதலாகக் கண்டு பிடித்ததற்காக நாம் ஹிந்துக்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டவர்களாவோம்" என்று கூறுகிறார். ஆம்! முதன் முதலாக உலகத்திற்கு வைத்திய சாஸ்திரமென்பது இன்னதென அறிவித்தவர் ஹிந்துக்கள் தாம்!—அதை நினைவிலிறுத்திக் கொள்ளுங்கள்!

நாகரீகமும், முன்னேற்றமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாம். எனினும் நாகரீகப் பாதையில் பூர்வீக ஹிந்துக்கள் எத்தகைய உயர்ந்த அளவிற்கு முன்னேற்றமடைந்திருக்கவேண்டுமென்பதற் கத்தாட்சியாக, மனித தேகத்தின் அங்க விபாகம் (Anatomy) ஒவ்வொன்றைக் குறித்தும் கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னரே நம்மவர் நன்கறிந்திருந்தனர் என்பதைக் கவனிக்க வேண்டுகிறோம். கிருஸ்துவ சகாப்தத்தின் ஆரம்ப நாட்களில் வைத்திய சாஸ்திரத்தில் இரண சிகித்ஸைப் பிரிவில் (Surgery) அவர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். இப் பூவுலகிலே முதல் முதலாக மக்களுக்கும் மிருகங்களுக்கும், தர்ம வைத்தியசாலைகள் இந்தியாவிலேதான் நிறுவப்பட்டன. அன்பும் அருளும் நிறைந்தவரும், இராஜ்ய நிர்வாகத்திலே தம்மினும் மிக்கார் எந் நாட்டிலும், எக் காலத்திலும் இருந்ததில்லையென்று கூறக்கூடிய அத்தகைய பெரும் புகழும் ஆற்றலும் படைத்தவருமான அசோகச் சக்ரவர்த்தியால் அவை ஸ்தாபிக்கப்பட்டனவாகும். கிறிஸ்து பிறப்பதற்கு முன் பல நூற்றாண்டுகள் வரையில், இப் பூமண்டலத்தில் நமது நாடு ஒன்றிலேயே வைத்தியசாலைகள் ஏற்பட்டிருந்தன. பாடலீபுரத்திலுள்ள சிகித்ஸாசிரமத்தை நேரில் பார்வையிட்டு அதைக் குறித்து எழுதுமிடத்து பாஹியான் என்னும் சீன யாத்திரிகர், பல்வேறு ரோகங்களால் வருந்தும் பிணியாளர்களும், திக்கற்ற ஏழைகளும் இங்கே பிரதிதினமும் திரளாகக் குழுமுகிறார்கள். அவர்களை மிகவும் ஜாக்கிரதையாகவும், கருத்துடனும் கவனித்துவருகின்றனர். வியாதியஸ்தர்களைச் சிரத்தையாகக் கவனித்துவருவதன் பொருட்டு ஒரு வைத்தியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்களுக்குத் தேவையான ஆகாரமும், மருந்துகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. தவிரவும் அவர்களுடைய சௌகரியங்களனைத்தும் நன்கு கவனிக்கப்படுவதால், அவர்கள் சீக்கிரம் குணமடைந்து, வைத்தியசாலைகளை விட்டு வெளியேறுகிறார்கள்" என்று புகழ்ந்துரைக்கிறார்.



அனுபவ வைத்தியத்தில் மட்டுமேயன்றி, உலோகங்களைக் கொண்டு புடம் செய்து, ஔஷதங்களைப் பஸ்பங்களாகவும், இன்னும் பல்வேறு விதங்களாகவும் தயாரிக்கும் பழமையான முறை அவர்களிடையே நெடுநாட்களுக்கு முன் ஏற்பட்டதாகும். அதற்கத்தாட்சியாக துத்தநாகமென்பது வெகு காலத்திற்கு முன்னர் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதே போதுமானதாகும். இரத்த ஓட்டத்தைப் பற்றியோ (Circulation of blood) பிரசித்தி பெற்ற ஹார்விக்குப் . பன்னூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே அவர்கள் அறிந்துள்ளனர்.

## மருத்துவ நூலாசிரியர்களும் மருத்துவ நூல்களும்

வைத்திய சாஸ்திரத்தில் ஹிந்துக்களின் ஆராய்ச்சித் திறனையும், விஷயங்களை நுட்பமாய் கிரகிக்கும் நுண்ணிய அறிவையும், அவர்களால் இயற்றப்பட்ட அரிய நூல்களில் காணலாம். சரக ஸம்ஹிதையை யியற்றிய சரகர் கனிஷ்க மன்னன் காலத்தில் வீற்றிருந்தார். அதற்கடுத்தபடியாக பிரசித்தி வாய்ந்தவர் சுசுருதர். சுசுருத ஸம்ஹிதை என்னும் அவருடைய நூலை உலகம் முழுவதும் புகழ்ந்து போற்றுகின்றது. அவர் கிருஸ்து ஜனிப்பதற்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவராய் இருத்தல் வேண்டும். ஆசாரிய வாக்படரும், சக்ரபாணி பண்டிதரும் கீர்த்தி மிக்க வைத்திய சாஸ்திரிகளாவர். அன்றியும் துருக்கி ஸ்தானப் பாலைவனங்களில் தோண்டிப் பார்க்குமிடத்து மிகவும் அருமையான வைத்திய நூல்கள் பல ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம். அவைகளைக் கண்டெடுத்து உலகிற்குதவிய அறிஞர் பெயரால் அவை "பவர் மானுஸ்கிருப்ட்ஸ்" (கையேட்டுப் பிரதிகள்) என வழங்கி வருகின்றன. அவை யாவும் இந்திய வைத்திய நூலாசிரியர்களால் இயற்றப்பட்டவைகளே யென்றும், ஆதலின் அவை இந்தியாவுக்கே உரியனவாகவும் கூறப்படுகின்றன.

அன்றியும் சாகம், சுச்ருதம், சாரங்கதர ஸம்ஹிதை, ரஸ ரத்ன ஸமுச்சயம், ரஸார்ணவம், ரஸ ரத்னாகரம் முதலிய அரிய கிரந்தங்களின் பெருமையைக் குறித்து ஈண்டெடுத்தெழுதுவது தற்புகழ்ச்சியேயாகும்.

## வைத்தியக் கல்வி

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பீஹார் மாகாணத்திலுள்ள நாளந்தா (Nalanda) என்னும் ஸ்தலம் ஓர்

பெரிய சர்வகலாசாலையாகத் திகழ்ந்தது. அந்தச் சர்வ கலாசாலையில் உயர்தரக் கல்வி பயின்று, அறிவு விளக்கம் பெற்றுச் செல்வதற்கு உலகத்தில் நானாவித பாகங்களினின்றும் மக்கள் திரண்டு வருவாராயினர். நான்காம் நூற்றாண்டில் பாஹி—யேன் என்பவரும், ஏழாம் நூற்றாண்டில் ஹ்யூன்—த்ஸியாங் (யுவாங் சுவாங்) என்பவரும், அவருக்குப் பின் இ—ட்ஸிங் என்பவரும் தூரத்திலுள்ள சீன தேசத்தினின்றும் இவ்விடத்திற்கு வந்திருந்தனர். அவர்களிற் பிற் சொல்லப்பட்டவர் இக் கழகத்தில் சிறிதுகாலம் கல்வி பயின்று, வித்தியார்த்திகளில் ஒருவராக அமர்ந்திருந்தார். இவ்விடத்திய கல்வித் திட்டத்தில் வைத்தியக் கல்வியும் ஓர் பிரிவாக அடங்கியிருந்தது.

அதற்கும் முற்பட்ட பழங் காலத்தில் அதாவது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன், பாஞ்சாலப் பிரதேசத்தில் சகல கலைகளுக்கு மிருப்பிடமாக—நாமகளுக்கோர் நல்லிடமாக—விளங்கிய தக்ஷசீலத்திலே, வைத்தியக் கல்வி யொன்றே மற்றக் கலைகளினும் மிகுந்த சிரத்தையுடன் போதிக்கப்பட்டது. ஆங்கு ரோக நிதானம், சிகித்ஸை முறை, ரண சிகித்ஸை, ஔஷத நூல் முதலிய பிரிவுகள் அனைத்திலும் மாணவர்கள் பயிற்சி பெற்றுவந்தனர். இவ்விடத்தில் ஆத்ரேயர், ஜீவகர் முதலிய உலகப் பிரசித்தி வாய்ந்த வைத்திய சிரேஷ்டர்கள் தோன்றி, அனுபவ ஞானம் பெற்றுத் தமது அரும் புகழை உலகெங்கும் பரப்பினர். தக்ஷசீலாவில் அப் பழங் காலத்தில் இலக்கிய நூல்கள், வைதீக லௌகீக நூல்கள், வியாகரணம், தத்துவ சாஸ்திரம், ஆயுர்வேதம், தர்க்க சாஸ்திரம், போர்க் கலை, மாந்திரீகம், ஜ்யோதிஷம், நானாவித யந்திர சாஸ்திரங்கள் முதலிய யாவும் கற்பிக்கப்பட்டனவாம். இக் கல்விக் கழகத்தில் போதனை பெற்ற மாணவர்கள் எத்தகைய உயர்ந்த அனுபவ ஞானம் மிகுதியும் வாய்க்கப் பெற்றிருந்தன ரென்பதற் குதாரணமாக ஜீவகருடைய வாழ்க்கையினின்றும் ஓர் சிறு சம்பவத்தை யெடுத்துக் கூறுவோம்.

ஜீவகர் ஏழு வருடகாலம் இவ் வாராய்ச்சிக் கழகத்தில் ஆயுர்வேத வைத்தியத்தைக் கற்றார். அதன் பிறகு அவருடைய தேர்ச்சியையும் திறமையையும் பரீக்ஷிக்க விரும்பிய ஜீவகரது ஆசிரியர் அவரை நோக்கி, “ஜீவகா, இம் மண்வெட்டியை யெடுத்துக்கொண்டு தக்ஷசிலாவைச் சுற்றிலும் ஒரு யோஜனை தூரத்திற்கு நாற்புறங்களிலும் தேடிப்பார்த்து எந்த எந்தச் செடிகள் ஔஷதத்திற்குப் பயன் படாதனவோ, அவைகளை மட்டில் என்னிடம் கொண்டு வா,” என்று ஆக்ஞாபித்தார்.



கையிலொரு மண்வெட்டியுடன் ஜீவகன் கிளம்பினான். ஆயினும் ஔஷத சம்பந்தமில்லாத—மருந்துக்குதவாத—ஒரு செடியையேனும், பச்சிலையையேனும் அவன் காணவில்லை; அதைக் குறித்துத் தனது ஆசிரியரிடம் அறிவித்தபோது அவர் பெரு மகிழ்ச்சியடைந்து, தனது சிடனின் வித்யாப்யாஸம் பூர்த்தியடைந்துவிட்டதாதலின், இனித் திரும்பவும் வீட்டிற்கேகி இல்லற வாழ்க்கையை நடத்தலாமென அனுமதியளித்தனராம்.

பண்டைக்கால வைத்தியச் சிரேட்டர்களிடையே, தன்வந்தரி, ஆத்ரேயர், அக்னிவேசன், சாகன், சுச்ருதர், பாரத்வாஜன், கபிஸ்தலர், பேதன், லதுகர்ணன், பாராசரர், ஹாரீதர், கஷ்ரப்ரு, க்ருசஸங்க்ரிதாயனர், பப்ரவ்யன், க்ருஷ்ணாத்ரேயர், ஔத்தலிகீச்வேதகேது, பாஞ்சாலர், கோணிகாபுத்ரன், ஸபந்து, ஸங்கரர், கங்காயனர் முதலியவர்களின் பெயரைக் குறிப்பிடவேண்டியது அவசியமாகும்.

## இரண சிகித்ஸை

இரண சிகித்ஸையில் ஐரோப்பியர்களே மிகச் சிறந்தவர்கள் என்று நமது நாட்டவரால் சாதாரணமாகக் கருதப்படுகிறது. எனினும் இத்துறையில் இந்துக்கள் எத்துணை தூரம் முன்னேற்ற மெய்தியிருந்தனரென்பதை வீபர் (Weber) என்னும் பெரியாருடைய அடியிற் கண்ட மொழிகளால் விளக்குவோம்.

> “இரண சிகித்ஸையில் ஹிந்துக்கள் விசேஷமாகத் தேர்ச்சி பெற்றிருந்தனர். இந்த இனத்தில் ஐரோப்பிய ரண வைத்தியர்கள் இன்றுகூட அவர்களிடமிருந்து அறிந்துகொள்ளக் கூடிய விஷயங்கள் பலவுண்டு. ஏனெனில் இதற்கு முன் “ரினோப்ளாஸ்டி” (Rhinoplasty) என்னும் சிறந்த வைத்தியத் தொழிலை யவர்களிடமிருந்தே மேனாட்டார் தெரிந்துகொண்டிருக்கின்றனர்.

“ரினோப்ளாஸ்டி” என்பது செயற்கை நாசிகளை யமைத்து அதன்மூலம் சுவாஸம் வர (மூச்சுவிட)ச் செய்வதாகும்.

அன்றியும் இரண சிகித்ஸை செய்யும் பொருட்டு ஹிந்து வைத்தியச் சிரேட்டர்கள் உபயோகித்துவந்த “சத்திரங்கள்” அல்லது “ஆயுதங்கள்” மிக மிகக் கூர்மை வாய்ந்தவை. அவற்றினுதவியால் ஓர் மெல்லிய மயிரையும்கூட நீளத்திலே இரு கூறுகத் துணித்துவிடுவது சாத்தியமாக இருந்தனவாம்! அத்தகைய நுண்ணிய கருவிகளாம் ஹிந்துக்களின் ஆயுதங்கள்!

ஹிந்துக்கள் (ampatation) அங்கச் சேதனங்களைச் செய்தனர்; கண் வைத்தியம் பார்த்தனர்; கர்ப்பச் சிதைவுகளையும், பிண்டங்களையும் அப்புறப்படுத்தினர்; அடிவயிற்றிலும், மர்ம ஸ்தானங்களிலும் 'ஆப்ரேஷன்'களை அருமையாகச் செய்து முடித்தனர்; விரைவாதம், மூலம் முதலிய கொடிய நோய்களைச் சுவஸ்தப்படுத்தினர்; ஒடிந்த எலும்புகளையும், தமது ஸ்தானத்தினின்றும் பிசகியவைகளையும் நிமிர்த்திச் சரிப்படுத்தினர்; மனித சரீரத்திலிருந்து அன்னிய வஸ்துக்களை வெளிப்படுத்தினர்; மருத்துவம் பார்த்தனர். பிரசவ வைத்தியத்தில் மிக மிக நுட்பமான ஆப்ரேஷன்களையும் தயங்காமல் செய்து அவற்றில் வெற்றி பெற்றிருந்தனர். பல சொல்லியென்ன; அவர்கள் கையாளாத வைத்தியப் பிரிவேயில்லை; அவர்களுக்குக் கையாலாகாத ரோகமும் இல்லை.

ஹிந்துக்களின் வைத்திய முறை அராபியர்கள் மூலமாக மேனாடுகளுக்குப் பரவிற்று. கி. பி. 7-வது நூற்றாண்டில் பாக்தாது கலிபாவின் சமஸ்தானத்தில் ஹிந்துக்களது வைத்திய சாஸ்திரத்தை மொழிபெயர்க்க ஏற்பாடுகள் நடைபெற்றுவந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களே மேனாடுகளில் உலவி, ஆங்கு மீண்டும் ஐரோப்பிய பாஷைகளில் பெயர்த்தெழுதப்பட்டு இப்பொழுதைய ஐரோப்பிய வைத்தியமாக விளங்குகிறது. காலிப் ஹரூன்-அல்-ரஷீத்தின் சமஸ்தானத்தை ஹிந்து வைத்திய சிரேஷ்டர்கள் அலங்கரித்ததாக ஓர் வரலாறு கூறுகிறது.

## வான சாஸ்திரம்

நாகரீக முற்போக்கு எய்தியுள்ள ஜாதியினரிடையேதான் வான சாஸ்திர ஆராய்ச்சி அபிவிருத்தியடைந்திருக்கக் காணப்படும். ஆதலின் ஓர் சாதி வான சாஸ்திர நுட்பங்களைக் கிரகித்து அந்தத் துறையில் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை யனுசரித்தே அச் சாதியினரின் நாகரீக மேம்பாட்டை ஒருவாறு நிதானித்தறியலாகும். பூர்வீக ஹிந்துக்களின் வான சாஸ்திர ஆராய்ச்சியில் எஞ்சியுள்ளவை இன்றுகூட ஐரோப்பிய மேதாவிகளின் மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியனவாக இருக்கின்றன.

ஹிந்து வான சாஸ்திரம் என்பது நமது முன்னோர்களின் புத்தி கூர்மையையும், ஆராய்ச்சித் திறனையு மட்டுமே யன்றி வடமொழியின் தொன்மையையும்கூட எடுத்துக் காட்டுவதற்கோர் சிறந்த சான்றாக இலங்குகிறது. கிருஸ்து பிறப்பதற்கு 2780



ஆண்டுகளுக்கும் முன்னதாகவே இந்த சாஸ்திரம் நம்மவர்களுடைய கவனத்தை யீர்த்திருந்ததென்றும், நமது மூதாதையர் இக் கலையில் அபாரமான தேர்ச்சி பெற்றிருந்தனர் என்றும் வீபர் (Weber) என்பவர் கருதுகிறார். காஸ்ஸினி (Cassini), ஜென்டில் (Gentil), ப்ளேபேர் (Playfair) முதலிய மேனாட்டு அறிஞர்கள் அது அதனினும் பழமை வாய்ந்திருக்க வேண்டுமென்று வாதிக்கின்றனர். ஹிந்து வான சாஸ்திரத்தின் பரிணாம வரலாற்றைக் கூர்ந்து கவனிக்கையில் இற்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்கும் முன்பே கிரகங்களின் கதியையும், சலனத்தையும் ஹிந்துக்கள் மிகவும் ஒழுங்காகவும் பிசகின்றியும் குறித்து வைத்திருக்கின்றனர். ஆதலின் அந்தக் காலத்திலேயே ஆரம்ப தசையைக் கடந்து உச்சநிலையை யடைந்திருந்த இக் கலையின் ஆரம்ப அறிகுறிகள் அதற்கும் நெடுங்காலத்திற்கும் முன்னதாகவே ஹிந்துக்களின் அரிய மூளையில் உதயமாயிருக்க வேண்டுமென்பதே அவர்களது கூற்றாகும்.

நக்ஷத்திரங்களின் கதியையும், ஆகாய மண்டலத்தின் அதிசயங்களையும், இயற்கையின் வேறுபாடுகளால் நிகழக்கூடிய ஒவ்வொரு சம்பவத்தையும் நுட்பமாகக் கவனித்து அறிவதில்மட்டுமேயன்றி, தமது நம்பகங்களையும், முடிவுகளையும் உறுதிப்படுத்துவதற்காதாரமான வான சாஸ்திர கிரந்தங்களையும், ஜ்யோதிட நூல்கள் பலவற்றையும் பூர்வீக ஹிந்துக்கள் இயற்றி வைத்திருக்கிறார்கள். வேதாங்கங்களாகிய "சிக்ஷை (உச்சரிப்பு), சந்தஸ் (சந்த அமைப்பு), வ்யாகரணம் (இலக்கணம்), நிருக்தம் (சொல் விளக்கம்), ஜ்யோதிஷம் (வான சாஸ்திரம்), கல்பம் (சடங்குகள்) இவற்றினுள் வான சாஸ்திரத்திற்கு ஓர் முக்கியத்துவம் கற்பிக்கப்பட்டிருப்பதிலிருந்தே இக் கலை எத்துணை பழமை வாய்ந்ததாக யிருந்திருத்தல் வேண்டுமெனவும், எவ்வளவு உயர்ந்ததாகப் போற்றப்பட்டிருக்க வேண்டுமெனவும் நாம் ஊகிக்கலாம்.

## வான சாஸ்திர நூல்கள்—சித்தாந்தங்கள்

வான சாஸ்திரத்தில் நூல்கள் பல இயற்றப்பட்டன; அவைகளில் மிகவும் சிரேஷ்டமாகக் கருதப்படுவது "ஸித்தாந்தங்களே." இந்த அருமையான கிரந்தத்தின் பெரியதோர் பகுதி காலமென்னும் கூற்றுவன் வாய்ப்பட்டு அழிந்து போயினவாயினும், எஞ்சியுள்ள சித்தாந்தங்களில் 'சில தற்காலம் நம்மிடையே நிலவி வருகின்றன. நாமறிந்தவரையில் இப்போது பிரசித்தமாக விளங்கும் 'சித்தாந்தங்களின்' தொகை ஒன்பதாகும். அவை முறையே

1. ப்ரஹ்ம ஸித்தாந்தம்
2. ஸூர்ய ஸித்தாந்தம்
3. கார்க்ய ஸித்தாந்தம்
4. ப்ரஹஸ்பதி ஸித்தாந்தம்
5. ஸோம ஸித்தாந்தம்
6. புலஸ்த்ய ஸித்தாந்தம்
7. நாரத ஸித்தாந்தம்
8. பராசர ஸித்தாந்தம்
9. வசிஷ்ட சித்தாந்தம்—என்பவைகளேயாம்.

இவற்றினுள்ளே ஸூர்ய ஸித்தாந்தமே ஏனையவைகளைக் காட்டிலும் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்த "ஸித்தாந்தங்கள்" கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப காலத்தில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு.

## வானசாஸ்திர வித்பன்னர்கள்

அதற்குப் பிற்பட்ட நாட்களில் ஆரியபட்டரும் (கி. பி. 476), வராஹமிஹிரரும் (கி. பி. 6-ம் நூற்றாண்டு), ப்ரஹ்மகுப்தரும் (கி. பி. 598-ல் ஜனனம்), பாஸ்கராச்சாரியரும் (கி. பி. 11-வது நூற்றாண்டு) நமது நாட்டில் தோன்றி, பூகோள, ககோள ஆராய்ச்சியில் தமது அருங் காலத்தைக் கழித்து அதன் பயனாக உலகப் பெருமை வாய்ந்தவர்களாக இன்றளவும் விளங்குகிறார்கள். அத்தகைய கணித சாஸ்திர ரத்தினங்களில் ஆரியபட்டர் என்பவரே பூமி தன்னைத்தானே சுற்றி வருகிறதென்னும் அரிய உண்மையை முதன் முதலாகக் கண்டுபிடித்து உலகிற்கு வெளியிட்டார். சூரிய சந்திர கிரஹணங்களின் உண்மையான காரணங்களை—மறுக்க முடியாத ஆதாரங்களுடன்—விளக்கினார். ருதுக்கள், அயனங்கள் இவைகளின் போக்கு இவ்வாறென்று நிர்ணயித்தார். அவர் (1) ஆரியபடிக, (2) தசகடிகா, (3) ஆர்யஷ்டசதம் என்ற முப்பெரும் வானசாஸ்திர கிரந்தங்களை யியற்றியுள்ளார்.

ஆரியபட்டரது பெயரால் சிறப்புற்ற "ஆரியபட்டீயத்தில்," பூமி உருண்டை வடிவமாயிருக்கிறதென்பதற் காதாரமாக ஓரிடத்தில்,

"வ்ருத்தபாஞ்ஜாமத்யே கக்ஷ்யா பரிவேஷ்டித: கமத்யகத:
ம்ருஜ்ஜில்சிகிவாயுமயோ பூகோள: ஸர்வதோ வ்ருத்த:

"ஆகாய மண்டலத்தின் மத்தியில், பஞ்சபூதங்களாலான இப் பூமி உருண்டை வடிவமாக இருக்கிறது" என்று கூறப்பட்டிருக்கிறது.

வராஹமிஹிரருடைய இணையற்ற பாண்டித்தியத்தையும், பெருமையையும் குறித்து எழுத முயற்சிப்பது அதிசயோக்தியென்றே



கூறவேண்டும். வான சாஸ்திரத்தில் மட்டுமேயன்றி ஜ்யோதிஷ சாஸ்திரத்திலும்கூட ஒப்புவமையில்லா அத்தகைய பேரறிவுடன் அவர் விளங்குகின்றார். அவரால் இயற்றப்பட்ட "ப்ருகத் ஜாதகம்" ஒன்றே அவரது பெயரை உலக வான சாஸ்திரிகளின் அணியில், முதன்மையாக வீற்றிருக்குமாறு செய்வதற்குப் போதுமானதாகும்.

வராஹமிஹிரர் ப்ருகத் ஜாதகம், ப்ருஹத் ஸம்ஹிதை, பஞ்ச ஸித்தாந்த ஸாரம் ஆகிய மூன்று ஜ்யோதிட ரத்தினங்களை எழுதியிருக்கிறார். ப்ருஹத் ஸம்ஹிதை ஜ்யோதிஷ சாஸ்திரத்தைப்பற்றியே பெரும்பாலும் கூறுகின்றதாயினும், பூகோள, ககோள, சிற்ப, நிர்மாண சாஸ்திரங்கள் சம்பந்தப்பட்டவரையில் இதுவரையில் வடமொழியில் வெளியாயுள்ள எந்த நூலும் அதற்கிணையாகாது.

பாஸ்கராசாரியர், சர். ஐஸக் நியூடன் என்ற பிரசித்திபெற்ற விக்ஞான சாஸ்திரி பூமியின் ஆகர்ஷண சக்தியைப்பற்றிய உண்மையைக் கண்டுபிடிப்பதற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே அறிந்து வெளிப்படுத்தினார். கணித சாஸ்திரத்தில் அவருக்கிருந்த வித்பத்தியை அவருடைய அரிய கிரந்தங்களைப் படித்தவர்களே அறிவார்கள்.

## அரிய வான சாஸ்திர உண்மைகள்

பாஸ்கராச்சாரியர் "கோளாதாய" மென்னும் நூலில்,

"ஸமோயேவ: த்யாத்பரிதே: சதாம்ச: ப்ருதிவீசப்ருதிவீ

நிதராந்ததேனுயான,
நரஸ்ய தத்ப்ருஷ்டகதஸ்ய கிருஷ்ண ஸமேவதஸ்ய ப்ரதி பாத்யத:"

"ஒரு வட்டத்தின் சுற்றளவில் நூற்றிலோர் பாகம் (சதாம்சம்) நேர்க்கோடாகவே காணப்படுகிறது. நமது பூமி பெரிய வட்ட வடிவமாக யிருப்பதாலும், மனிதனுக்கு திருஷ்டிக்குப் புலப்படுவது மிகச் சிறியதோர் பாகமேயாதலாலும், பார்வைக்குத் தட்டையாகத் தோன்றுகிறது."

* * * *

ஐதரேயப்ராஹ்மணத்தில் ஓரிடத்தில், "சூர்யன் உதிப்பதாவது அஸ்தமிப்பதாவது ஒன்றுமில்லை யென்றும், பூமி தன்னைத்தானே சுற்றி வருவதால் வெளிச்சம் பெறும்போது பகலென்றும்," இன்னும் பல விஷயங்களையும்பற்றி உரைக்கிறது.

"சூர்யனது ஆகர்ஷண சக்தியாலேயே பூமியானது தன்னிலையிலிருந்து வருகிற"தென்று யஜுர் வேதத்தில் ஓர் குறிப்பு காணப்படுகிறது.

*   *   *   *

ஆரியபட்டர் நக்ஷத்திரங்களைப்பற்றி எழுதுமிடத்து
"பபஞ்ஜர: ஸ்திரோபூரேவ வருத்யாவ்ருத்ய ப்ராதிதைவாஸிகௌ,
உதயாஸ்தமயௌ ஸம்பாதயதே க்ரஹ நக்ஷத்ராணும்"

"நக்ஷத்திர மண்டலம் ஸ்திரமானது. பூமிதான், தன்னைத் தானே சுழன்று வருகையில் கிரகங்களுடையவும், நக்ஷத்திரங்களுடையவும் உதயாஸ்தமனங்களுக்கு மீண்டும் மீண்டும் காரணமாக உள்ளது."

"அப்படியாயின் நக்ஷத்திரங்கள் சலனமடைவதாகக் காணப்படுவதற்குக் காரணம் யாது?"

இக் கேள்வியைத் தமக்குத் தாமே கேட்டுக்கொண்டு அவர் விடையளிக்கிறார். "கப்பலில் பிரயாணம் செய்யும் ஒருவன் அது வேகமாகச் செல்லுகையில், எப்படி அசைவற்ற சடப்பொருளொன்று பின் நோக்கி விரைந்து செல்வதாகக் காண்கின்றானோ, அவ்வாறே நக்ஷத்திரங்களும் சலனமற்றவைகளாயிருந்தபோதிலும், பிரதிதினமும் சலனமடைவதாகத் தோற்றுகின்றன" என்றுரைக்கிறார்.

அன்றியும்,

"லங்காபுரேர்கஸ்ய யதோதய: ஸ்யாத்ததா தினார்த்தம் யவகோடி
    புர்யாம்
பவேத் ததா ஸித்தபுரேஸ்தகால: ஸ்யாத் ரோமகே ராத்திதளம்
    ததைவ."

"லங்கையில் சூர்யோதயமாகும்போது ஜாவாவில் நடுப்பகல், அமெரிக்காவில் அஸ்தமனம், ரோமாபுரியில் நள்ளிரவு" என்று கூறியிருப்பதனின்றும் அவர்கள் தம் பூகோள அறிவும், கணித அறிவும் நமக்குப் புலனாகிறது.

பூமியின் அளவைக் குறித்துப் பின்வரும் குறிப்பை நேயர்கள் கவனிக்க வேண்டுகிறோம்.

"பூமியின் சுற்றளவு 4,967 யோஜனைகள், அதனுடைய குறுக்களவு (diameter) $1581\frac{1}{24}$ யோஜனைகளாகும்."



ஒரு யோஜனை 5 மைல்களுக்குச் சமமாகக் கணக்கிட்டால் பூமியின் சுற்றளவு 24,835 மைல்களும் அதனுடைய குறுக்களவு (diameter) $7,905\frac{5}{24}$ மைல்களும் ஆகும்.

*   *   *   *

சூரிய சந்திர கிரகணங்களுக்குக் காரணம் பின்வருமாறு கூறப்படுகிறது.

"சாதமத்யர்கமிந்துர்விதும் பூமிபா:"

"இடைவிடாமல் சலித்தவண்ண மிருக்கும் பூமி, சந்திர சூரியர்களுக் கிடையில் வரும்போது, பூமியின் சாயை (நிழல்) சந்திரன் மீது விழுமாயின் அந்த சப்பவத்திற்கு சந்திரக் கிரஹணமென்றும், பூமிக்கும், சூரியனுக்கும் மத்தியில் சந்திரன் வரும்போது சூரியன் அடியோடு பிரிந்துவிடுவதாகக் காணப்படும் தோற்றம்—அதுவே சூரிய கிரஹணம்."

வராஹமிஹிரர் சந்திரனைப்பற்றி யுரைப்பது கவனிக்கத் தக்கது. "பூமிக்கும், சூரியனுக்கும் மத்தியிலே சந்திரனுடைய சலன பாதையிருப்பதால் அதனுடைய பாதி பாகம் எப்பொழுதும் சூரிய வெளிச்சத்தினால் பிரகாசமாகவே இருக்கிறது. அதனுடைய மறு பாதியோ தனது நிழலாலேயே—வெய்யிலிலிருக்கும் ஓர் பானையின் இரண்டு பக்கங்களைப்போல—எப்பொழுதும் இருண்டதாகவே யிருக்கிறது."

கிரஹணத்தைப்பற்றிய அவரது குறிப்புகள் இன்னும் ரஸமானவைகளாகும். "இந்த சம்பவங்களுக்கு உண்மையான காரணம் யாதெனில், சந்திர கிரஹணத்தில் அது பூமியினுடைய சாயைக்குட்படுகிறது; சூரிய கிரஹணத்திலும் அவ்வாறே; ஆதலின், சந்திர கிரஹணம் ஒருபொழுதும் மேற்குத் திக்கிலிருந்தும், சூரிய கிரஹணம் கிழக்கிலிருந்தும் ஆரம்பிப்பது இல்லை."

*   *   *   *

சித்தாந்த சிரோமணியில் நியூடன் உலகில் ஜனிப்பதற்கு எத்தனையோ காலத்திற்கு முன் பூமியின் ஆகர்ஷண சக்தியைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகிருஷ்டி டிசக்திச்வ மஹீ தயா யத்
ஸ்வஸ்தம் குருஸ்வாபிமுகம் ஸ்வசத்தய்யா
ஆக்ருஷ்யதேதத் பததீவ பாதி
ஸமே ஸமந்தாத் க்வம் பதத்வியம் ரவே:

"பூமி தனது ஆகர்ஷண சக்தியின் மகிமையால், எந்த வஸ்துவையும் தன்னை நோக்கி யிழுத்துக்கொள்வதால், அவ்வஸ்துக்களெல்லாம் கீழே விழுந்துவிடுவதாகத் தோன்றுகின்றன."

* * * *

(Hindu Superiority by Hari Bilas Sarda, pp. 291—294.)

ஹிந்துக்களின் வானசாஸ்திர ஆராய்ச்சித் திறமையை விளக்கும் இச் சிறு உதாரணத்துடன் இப்பிரிவை முடித்துக்கொள்ளுவோம்.

பிரான்சு தேசத்து 14-வது லூயி அரசரால் லாபரே (Laubere) என்பவர் ஸையாம் நாட்டிற்குத் தூதராக அனுப்பப்பட்டார். 1687-ம் ஆண்டில் அவ்விடத்தை விட்டுத் தமது சுதேசத்திற்குத் திரும்புங்கால் அவர் அதுவரையில் கணக்கிடப்பட்ட சூர்யக் கிரஹணங்களின் (பஞ்சாங்கமொன்றை) அட்டவணையொன்றைத் தயாரித்துக்கொண்டு வந்தார்.

அதே மாதிரியாக கர்னாடகப் பிரதேசங்களிலிருந்து படுவில்லெத் (Patouillet) என்ற பாதிரியாரும், ஜேண்டில் என்ற பெயர் வாய்ந்த மற்றொரு ஐரோப்பிய வான சாஸ்திரியும் திருவாளூரி (திருவள்ளூர்?) லிருக்கும் பிராம்மண சிரேஷ்டர்கள்பால் தாம் கேட்டறிந்தனவற்றையும், ஓர் சூரிய கிரஹண ஜாபிதாவாக அனுப்பியிருந்தார்கள்.

ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததும், முற்றிலும் வெவ்வேறு ஸ்தலத்திலுள்ள வெவ்வேறு நபர்களிடமிருந்தும் வெவ்வேறு காலத்தில் இக் கணக்குகள் கிடைத்தனவாயினும், வான சாஸ்திர கணிதத்தைப் பொறுத்தவரையில் அம்மூன்று அட்டவணைகளும் சிறிதேனும் பிசகின்றி, ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாமலிருந்தனவாம்!

சுமார் 4383 வருஷ காலமாகப் பிராமண சிரேஷ்டர்களால் கணிக்கப்பட்ட இவ்வருமையான அட்டவணையானது எத்தனையோ காலத்திற்கப்பால் தயாரிக்கப்பட்ட காஸினி (Cassini), மேயர் (Meyer) என்பவர்களுடைய கணக்குகளினின்றும் ஒரு விநாடியேனும் மாறுபட்டிருக்கவில்லையாம்! திதி, நக்ஷத்திரங்களைக் கணிப்பதில் நம்மவர்களுடைய வழிகளைப் பின்பற்றியே பிரசித்தி பெற்ற வானசாஸ்திரியான டைகோப்ராஹி என்பவரும் சந்திரனது கதியைக் கணக்கிட்டிருக்கிறார். அதுவரையில் இச் சுளுவான முறைகளைப்பற்றி மேனாட்டார் ஒன்றுமே அறியார்.

—ராஜா ஜயஸிங் II.



பண்டு தொட்டு நமது நாட்டிலே கீர்த்திவாய்ந்த தத்துவவாதிகளும், கவிச் சிரேட்டர்களும், வானசாஸ்திரிகளும், கணித விற்பன்னர்களும் தோன்றியிருக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலரது மகிமை கடல்களுக்கப்பாலுள்ள நாடுகளிலும் பரவி அவர்களுக்கு உலகப் பிரசித்தியும் ஏற்பட்டிருப்பது யாவருமறிந்ததேயாம். சமீபத்தில் இருநூறு வருடங்களுக்கு முன்புகூட ராஜபுதனத்தில் ஒரு அரிய வானசாஸ்திர பண்டிதர் தோன்றி, உலகம் புகழும் கீர்த்தி வாய்க்கப் பெற்றிருந்தார். ஜயபூர் ஸமஸ்தானத்து ராஜா ஜயஸிங் என்னும் மேதாவியேயவர்.

ராஜா ஜயஸிங்கரின் பாண்டித்தியத்தைப்பற்றிப் பெரிதும் வியப்புற்ற ஸர். வில்லியம் ஹண்டர் என்பார் எழுதியிருப்பதை நமது வாசகர்கள் கவனிக்க வேண்டுகிறோம். அவர் கூறுவதாவது:—

"இரண்டாவது ராஜா ஜயஸிங் தமது இராஜ்யத்தின் தலைநகராம் ஜயப்பூரிலும், மட்ரா (வடமதுரை), காசி (பெனாரிஸ்), டெல்லி, உஜ்ஜயின் முதலிய இடங்களில் நக்ஷத்திரசாலைகளை நிர்மாணித்தது மாத்திரமேயன்றி, 1702-ம் வருடத்தில் டிலாஹயர் (De La Hire) என்பவரால் வெளியிடப்பட்ட வானசாஸ்திர அட்டவணைகளையும், கணனங்களையும் திருத்தியமைக்கும் திறமையும் உள்ளவராக யிருந்தார். அவருடைய அரிய புத்தி நுட்பத்தின் சின்னமாக (ஞாபகார்த்தமாக) நக்ஷத்திரங்களின் ஜாபிதா ஒன்றை அவர் எழுதி வைத்திருக்கிறார். மஹம்மது ஷாவின் அட்டவணை (by Mohammed Shahi or Tables of Mohammed Shah) என்று அதற்குப் பெயர். காசியில் இன்றளவும் அவரால் கட்டப்பட்ட நக்ஷத்திரசாலையைக் காணலாம்."

கணித சாஸ்திரத்தைப்போலவே, வான சாஸ்திரத்தையும் அராபியர்கள் ஹிந்துக்களிடமிருந்து கற்றறிந்து மேனாடுகளில் தாம் கற்றும் கேட்டும் அறிந்தவைகளைப் பரவச் செய்தனர். கி. பி. 8-ம் நூற்றாண்டில் சித்தாந்தங்கள் அராபிய பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டனவாம். பாக்தாது காலிப்புகளில் ஹரூன்—அல்—ரஷீதும் அல்மாமூனும் இந்திய வானசாஸ்திர விற்பன்னர்களுக்கு ஆதரவளித்து உற்சாகமூட்டியதாகவும சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அவர்களை பாக்தாதுக்கு வரவழைத்து அவர்களுடைய உதவியால் வடமொழி நூல்களை அராபிய பாஷையில் மொழிபெயர்த்தனராம்.

(தொடரும்.)

# ஜனநாயக ஆட்சி.

## திரு. ஸி. எ. பெருமாள் அவர்கள்.

சுய ஆட்சியின்றி நல்ல விதமான ஓர் அரசாங்கத்தை அமைக்க முடியுமெனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் அது முடியாதென்பதே நமது அபிப்பிராயமாகும். ஏனெனில் நல்ல விதமான அரசாங்கமென்பது எத்தகையதாயிருக்க வேண்டும்? தேச மக்களின் பொருளாதார நிலையையும் ஒழுக்க நிலையையும் சீர்திருத்த உண்மையில் முயலுகின்ற அரசாங்கமே அதுவாக யிருக்க வேண்டுமென்பதை ஒருவராலும் மறுக்க இயலாது. ஆனால் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் நிலவும் எந்த அரசாங்கமும் இந் நிலையைச் செவ்வனே அடைய முடியாதது மட்டுமன்றி, அந்நிய அரசாங்கம் சுய ஆட்சியைவிட பொருட் செலவிலும் அதிகப்படவே செய்யும். மக்களுக்குக் கெடுதல் செய்யாவிட்டாலும் அதிகப் பொருட் செலவென்பது தேசத்தைப் பெரிதும் பாதித்தே நிற்கும். அப்பொழுது மக்களின் வாழ்க்கை நிலையையும் அது தகர்வதாகும். எந்த கல்வி முறை மனிதன் தன்னையே சீர்திருத்திக் கொள்வதற்கும், தானாக உணரச் செய்வதற்கும், மனிதத்துவத்தைக் கண்டுபிடித்து அதனை அடையச் செய்வதற்குப் பிரயோஜனமா யிருக்குமோ, அதே போல், எந்த அரசாங்கம் தனது மக்களுக்கு ஆளுந் திறனை அழிக்குமோ, ஒழுக்கத்தையும் வாழ்க்கையின் லட்சியத்திற்குக் குறைவுபடாத அவகாசங்களையும் நல்குமோ அவ்வரசாங்கமே பொன்னே போல் போற்றற்குரியது.

எனவே அந்நிய அரசியல் எனப்படுவது எக்காலத்திலும் எல்லா மக்களுக்கும் பூரண பராமரிப்பு அளிக்க இயலாது அழிந்துபோகுமென்பதற்குச் சந்தேகமே யில்லை. அன்றியும் ஒரு தேசத்தை இன்னொரு தேசம் அடக்கி ஆளுமாயின் அத் தேசத்தின் யதேச்சாதிகாரத்தை முறியடிக்க வேறொரு தேசம் சதாகாலமும் கண்வைத்துக் கொண்டிருக்கவும் கூடும். ஏனென்றால் அந்நியர்களது தேசத்தில் ஆசை வைத்திருக்கும் தேசங்களில் ஒன்றாவது பிறர் பொருளை அபகரிப்பது கூடாது, பிறருரிமை தகைவது ஆகாது என்ற தன்னலங் கருதா பெருந்தகைமை பூண்டதில்லை யெனத் திட்டமாகவே கூறலாம். எனவே எத்தகையதான வேறு நல்ல அரசாங்கமும் சுய ஆட்



சிக்கு ஒப்பாகவோ அல்லது சுய ஆட்சி யில்லாமலோ யிருக்க முடியாதென்பதே யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாகும்.

அரசியல் என்பது ஒரு மனிதனைப் பொறுத்த விவகாரமன்று. அது மகா பெரிய ஜன சமூகத்திற்குச் சொந்தமானது. இதனை நடத்துவதற்கு ஒரு கூட்டு கமிற்றியையோ அல்லது ஒரு சங்கத்தையோ நியமித்து அவர்கள் அதிகாரத்தில் விட்டுவிட்டாலும், அவர்கள் கூடிய விரைவில் தங்கள் சொந்த நலன்களை எதிர்பார்த்து ஜன சமூகத்தைக் கவனியாது தங்களிஷ்டம்போல் அரசாளுவதற்கு ஆளாகிவிடுவார்கள். எனவே நமது நிலைமையை கவனிக்குங்கால் நம்மில் பெரும்பாலோர் ஆளுந் திறனில்லாது காணப்படுகின்றனர். ஒரு சிலருக்கு அச் சக்தி வாய்ந்திருப்பினும் அவர்கள் சுய நலங் கருதுவதில் ஒருபோதும் பின்வாங்குபவர்களில்லை. இந் நிலை கண்டுதான் வில்லியம் மாரிஸ் (William Moris) என்பார், "ஒருவரும் இன்னொருவருக்கு எஜமானாக யிருக்கத்தக்க நிலைமை படைத்தவர்களில்லை" எனக் கூறலானார். நாமோ ஆளப்பட வேண்டியவர்களாக யிருக்கிறோம். எனவே நம்மை ஆளுகிறவர்களை நாம் அடக்கி ஆள வேண்டியது நமது கடமையாகிறது. ஆனால் சரியான திறன் படைத்தவர்கள் தங்கள் மனோசாட்சியின்படி நடக்க விரும்புவார்களே யன்றி அந்நியர்களது அடக்குமுறையை அல்லது அதிகாரப் பொறுப்பை ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நம்மில் அமைந்து கிடக்கும் அறியாமை ஆசைப் பெருக்கு, உடன் ஆகவேண்டுமென்ற உணர்ச்சி ஆகியவைகள் பகுத்தறிவு, பரோபகார நோக்கம், தன்னலமின்மை ஆகியவற்றோடு எப்பொழுதும் கலந்து மாற்றம் அடைவது இயற்கையா யிருப்பதால் எதிர்காலத்தின் பொருட்டு மிகவும் திறன் படைத்த ஒருவரை அரச பதவியிலமர்த்த நாம் விரும்புவதும் இயற்கையே. ஆதலால் நாம் நமது இஷ்டம்போல் ஒருவரை நடக்கச் செய்ய நம்மாலாகாவிட்டால், நாம் ஒருவரைத் தெரிந்தெடுத்து, அவரும் நமக்குப் பிடிக்காவிட்டால் அவரை மாற்றிக்கொள்ளவும் நம்மால் இயலாதா என்பது அறிவுடையார் ஒவ்வொருவரும் ஆழ்ந்து யோசிக்கத்தகும் ஓர் அரும் விஷயமாகும்.

நமது அரசியல் நிர்வாகம் மிக இலகுவா யிருந்ததுபோய் இப்பொழுது ஒவ்வொரு வகுப்புக்களும் சமூகமும் நாளொருவண்ணமாக அடைந்துவரும் அபிவிருத்தியை எண்ணும்போது நிர்வாகப் பொறுப்பானது மிகவும் அதிகமாகிக்கொண்டே வருகின்றது. நமது நித்திய வாழ்வு, அவ் வாழ்வுக்குறுதுணையாக மக்களின் ஊக்கத்தினாலும் உழைப்பினாலும் செய்துமுடித்த பொது ஜனப் பாதைகள், தெருக்கள், பாலங்கள், தண்ணீர் வசதிகள், மின்சார விளக்குகள், சவாரி

வண்டிகள், பள்ளிக்கூடங்கள், துறைமுகங்கள், சந்தைகள், பற்பல விதமான பொதுஜன ஊழியங்கள் ஆகியவற்றை ஒழுங்குபெற எக்காலமும் நடத்துவதற்குத் தகுந்த அதிகாரிகள், ஆசிரியர்கள், நிபுணர்கள், நுண்ணறிவு படைத்த பெரியோர்கள், நூற்றுக் கணக்கான இலாகாக்களில் அமர்த்தப்பட்டிருக்கும் எண்ணற்ற உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்கள் பொறுப்பும் தைரியமும் வாய்ந்த அருந் தலைவர்களாயிருக்க வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

தொழிற்சாலைகள் வியாபாரக் கூட்டுறவு நிலையங்கள், கேணிகள், போக்குவரவு சாதனங்களை வைத்திருக்கும் றெயில், கப்பல், ஆகாய விமானம் ஆகிய நிலையங்கள் முதலியவை தனிப்பட்டதான ஒரு வகுப்பாரின் அதிகாரத்திற்கு வரும்போது நாம் அடைந்துவரும் தொல்லைகளும் கஷ்டங்களும் பொறுக்க இயலாததாகிவிட்டதை ஏற்கனவே அனுபவித்து விட்டோமென்றே சொல்ல வேண்டும். எவ்வளவோ சட்டதிட்டங்கள் ஏற்படுத்தி, அவைகளைப் பரிசோதித்து வர பல உத்தியோகஸ்தர்களை நியமித்தபோதிலும் அவைகள் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் கவனிக்கப்படாம லிருப்பின், மக்கள் வாழ்வுக்கும் மக்கள் உயிருக்குமே உலை வைக்கக்கூடிய நிலைமைக்குச் சீக்கிரம் வந்துவிடுவதை நாம் கண்டு வருகிறோம். உதாரணமாக சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தின் போது போர் கருவிகளின் உற்பத்தியை ஜனங்களின் பார்வையில் சில கம்பனிக்காரர்கள் வசம் ஒப்புவித்துவிட்டதின் பலனால், நெருக்கடியான சமயத்தில் பொது மக்களிடையும் சைனியங்களிடையும் கலவரங்கள் உண்டாகி பெருத்த சேதத்தை விளைவித்தது. அப்பால் அரசாங்கத்தின் பார்வையில் வந்தபொழுதுதான் அவ் வேலை அல்லது அத் தொழில் ஒழுங்குபெற நடந்தது. பெரும் மூலதனத்தை வைத்து வேலை செய்யும் பெரும் பெரும் தொழிற்சாலைகளையுடைய முதலாளிகள் தற்போது அரசாங்க உதவியையே பெரிதும் நாடி நிற்கின்றனர். ஏனெனில் தொழிலுற்பத்தி பொதுஜன வாழ்வைப் பொறுத்து நிற்பதால் மக்கள் யாவருக்கும் உரிமையளிக்க அத் தொழில் நிர்வாகிகள் பின்வாங்குகின்றனர். ஆதலாலேயே கலவரங்களுக்கும் குழப்பங்களுக்கும் இடனாகி பெருத்த சேதம் விளைவித்துவரக் காண்கின்றோம். எனவே ஒரு சிலரின் கூட்டுறவில் சுயநலம் தலை விரித்தாடுவதால் அக் கூட்டுறவினால் நடைபெறும் தொழிலும் வியாபாரமும் மக்கள் உரிமையைத் தகர்ந்து நிற்பதால், இது பெருத்த இடையூறாகவே முடியுமென்பதற்கு ஐயமேயில்லை. அக் கூட்டுறவு பொது மக்களின் ஸ்தாபனமாக விளங்கிவிடுமாயின் ஆங்கு சுய நலத்துக்கு இடமே யில்லாததாகிவிடும். தொழிற்சாலை விஷயங்களில் ஈடுபட்டுள்ள இக் கூட்டுறவு இன்னும் பெரிதாக்கப்படுமாயின், போர்களினால் ஏற்படும் பயங்கரமான அழிவுக்கும் இடமின்றி ஜனசமூகம் உரிமைப் பேறுடன் இனிது வாழ்ந்து



நாகரீக வளர்ச்சிக்கு வேண்டிய சகல அம்சங்களையும் குறைவறப் பெற்று வரும் என நாம் திட்டமாக நம்பலாம்.

மத்திய அரசாங்கத்தின் சார்பு இன்றி ஒரு சிலரின் தனிப்பட்ட அதிகாரத்திலும் நம்பிக்கை அடைய முடியாது. அது மத்திய அரசாங்கமா யிருந்த போதிலும் சரியே அல்லது ஒரு நகரபரிபாலன சபையானாலும் சரியே அல்லது ஒரு கூட்டுறவு வியாபாரக் கம்பெனியில் விடப்பட்ட அதிகாரக் கமிட்டியானாலும் சரியே, அவைகள் உண்மையில் மூலதனமிடப்பெற்ற பங்காளிகளின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி செய்யும் நிர்வாக முறையானது ஒரு சிறு அரசியல் முறைக்கு ஒப்பாகவே இருக்கமுடியும். அவர்களிடை அரசர்களும் அரசாங்க சட்டதிட்டங்களும் இல்லாதிருந்த போதிலும் தலைவர்களும் நியாயங்களும் இல்லாதிருக்க முடியாது. அவர்கள் செய்துவரும் ஊழியத்தை நாம் ஒப்புக்கொண்டு அவர்களது ஆதரவிலேயே நாமிருக்க வேண்டியவர்களாகிறோம். அரசாங்கத்தைவிட இத் தொழில் அல்லது இவ் வியாபார சங்க அங்கத்தினர்கள், பொது மக்கள் பணத்தை பலவித வழிகளில் அபகரித்து விடுவதில் கருத்துக் கொண்ட இத் தலைவர்களின் முறைகளுக்கு நாம் கட்டுப்பட்டு நமது வாழ்க்கைப் பொருள்களுக்கும் அவர்களையே நம்பி பெரும் செலவு செய்து வருகிறோம். தற்போது அந்நிய நாடுகளையும் அந்நிய நாட்டு அரசாங்கங்களையும்விட இவர்கள் கைகளிலேயே நாம் சிக்குண்டு கிடக்கிறோம். இத் தனிப்பட்ட சிலரது அதிகாரங்கள் நமது வாழ்க்கையையே பெரிதும் பாதித்து வருகிறது.

ஆகவே இவர்களது தனி ஆதிக்கத்துக்கு இடம் கொடுத்ததற்கு நாமே பொறுப்பாளிகள் என்பது உணரத் தக்கதாயினும் அரசாங்க நிர்வாகம் பொது மக்களது வாக்குகளால் நடைபெறுமானால் அவ்வரசாங்கம் இத் தனிப்பட்ட உரிமைகளைத் தகர்த்து மக்களுக்குப் பொதுஜன சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் நல்கும் தகையதென்பது அறியற்பாலது. ஆனால் இவ் வதிகார முறையைச் சரியானபடி திருத்தி யமைக்க நம்மால் என்ன செய்ய முடியும்? தேச மக்கள் யாவரும் ஒன்றுபோல் வாக்குரிமை பெற வேண்டும். ஒவ்வொருவரும் அரசாங்க ஸ்தாபனத்திற்கு ஓர் வாக்காளராக முயல வேண்டும். அப்பொழுது நாமாகவே அவர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம். தேர்தலுக்கு நிற்கிறவர்கள் நமக்கு எதைச் செய்ய வேண்டுமோ அதனைச் செய்வதாக வாக்களித்ததின் பிறகே நமது ஓட்டுக்களை அவர்கள்பெற முடியும். நாமும் அவர்களது யோக்கியதை விஷயங்களில் பலதர கேள்விகள் கேட்டு திருப்திகொள்ளலாம். ஆனால் இவர்களால் ஒன்றும் செய்ய முடியாதென்பதை நாம் நன்கறி

வோம். என்றாலும் அவர்களை அந் நிலைமையில் விட்டுவிடுதல் அல்லது புறக்கணித்து விடுதல் ஒருபோதும் அறமாகாது. அவர்கள் அப் பதவி வகிப்பதற்குத் தகுந்தவர்கள்தானா என்பதை பல வழிகளிலும் உண்மையாகப் பரிசோதித்துப் பார்க்க வேண்டுவது மிகவும் அவசியம். சென்ற மகா யுத்தத்திற்குச் சிறிது முன்னர் அமெரிக்காவிலுள்ள "ஸான் பிரான்ஸிஸ்கோ" என்னும் நகரில் ஓர் டாக்டர் ஒரு மனிதனின் ஒரு துளி இரத்தத்தை அவர் கையிலளிப்பதானால் அவனது உடற்கூறு அடைந்திருக்கும் நிலைமையை அரை மணி நேரத்திற்குள் நன்கு தெரிவிக்கலாமென கூறினார். ஆனால் இச் சந்தர்ப்பத்தில் நாம் ஆசைப்படுவது யாதெனில் ஒரு மனிதனின் ஒரு துளி இரத்தத்தைக் கொண்டோ அல்லது ஒரு உரோமத்தைக் கொண்டோ அவனது மனோ நிலைமையை நன்கு பரிசோதித்துக் கூறுவதற்கு யாராவது ஒருவர் ஒரு புதிய வழியையோ அல்லது கருவியையோ கண்டுபிடித்தால், அரசியல் பிரச்சினைகளில் நமக்கு எவ்வளவு உதவியாயிருக்கு மென்பதேயாகும். இவ்விதம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் பொதுஜன சேவை செய்வதற்கோ அல்லது ஜனநாயக ஆட்சி புரிவதற்கோ தகுதியுள்ள எத்தனை பெரியார்களை எளிதில் கண்டுபிடிக்கக் கூடும்! தகுதியற்ற வேறு எவரையும் நாம் அப் பதவி வகிக்க விடவே மாட்டோம். ஜனப் பிரதிநிதிபதவி மந்திரிபதவி ஆகிய எண்ணற்ற பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்கெல்லாம் ஒருவித சந்தேகமும் ஏற்படமாட்டாது. தற்போதிருக்கும் நிலைமையில் ஆயிரத்திற்கு ஒருவர்தானும் அப் பதவி வகிக்கத் தக்க நிலைமையில் இல்லாமலிருக்கக் காண்கிறோம். ஆகையால் நாம் தேர்ந்தெடுக்கும் மனிதர் கூடியதும் வெறும் பொம்மை யாகிவிடாமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொரு வாக்காளர்களின் கடமையா யிருக்க வேண்டும். ஓட் கொடுப்பதும் ஓட் எண்ணுவதும் இனி இயந்திரத்தாலேயே சாத்தியப்படுமாயின் மிகவும் நலமாயிருக்கும். இம் முறையில் எவைகளை யெல்லாம் செய்து முடிக்க இயலுமோ அவை யாவற்றையும் குறைவறச் செய்து முடிப்போமேயானால் நாகரீகம், ஆள்கிறவர்களதும் ஆளப்படுகிறவர்களதும் மனோ நிலைமையைப் பொறுத்து உயர்ந்து வளரும். நமது இயற்கைக் குணங்கள் உண்மையில் நலம் தரத் தக்கவைகளை நாம் மிகக் கேவலமாக வளர்க்கப்பட்டுவிட்டோம். சமூகத்திற் கொவ்வாத சுயநலமும், பொறாமையும், வஞ்சகமும், நம்பிக்கையின்மையும், கோழைத்தனமும் படைத்து விளங்குகிறோம். இப்பொழுது நம்மைத் திருத்திக்கொள்ள நம்மாலாகாவிட்டால் நமது பின் சந்ததிகளையாவது நம்மைவிட நல்ல நிலைமையில் பயிற்சி செய்ய நம்மாலாகாதா என்பது, வாசகர்கள் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கத் தகும் விஷயமாகுமெனத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

# கம்பரும் காந்தியடிகளும்.

ஆசிரியர், திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள்.

பிறரால் தமக்கொரு தீங்கும் நேராதென்னும் சஞ்சலமற்ற நினைவே சுதந்திரவுணர்ச்சியின் மெய்த்தன்மையாகும். ஆனால், இந் நாளிலோ, 'பிறர் செய்யுந் தீங்கினின்றும் தப்பித்துக் கொள்வதற்குப் பாடுபடுவதே சுதந்திரம்' எனப் பலர் கருதுகின்றனர். இக் காலத்தில் காந்தியடிகள் கூறும் சுதந்திர உணர்ச்சியின் தத்துவங்களைப் பன்னூறாண்டுகட்கு முன்னர் இருந்த கவிஞர் கம்பர் பெருமான் தாம் இயற்றிய இராம காதையில் விளக்கிக் காட்டியுள்ளார். இதனால் கம்பரும் காந்தியடிகளும் சுதந்திர வாழ்க்கைத் தத்துவத்தில் ஒன்றுபட்ட மனத்தரா யிருக்கின்றனர் என்பதே இக் கட்டுரையின் கருத்தாம்.

"கோசல நாட்டில் குற்றம் ஒன்றும் இல்லை; அதனால், எம பயம் இல்லை. எல்லோரும் தத்தம் மனச்சாட்சிப்படி எக் காரியத்தையும் செய்வதால், கோபம் என்பதில்லை. நல்லறங்கள் செய்வதைத் தவிர வேறு ஆற்றல் இலாமையால், உயர்வு, தாழ்வு என்ற 'வேறுபாடு' இல்லை," என்று கம்பர் அழகாகச் சுதந்திர வாழ்க்கையைச் சித்தரித்துக் கூறுகின்றார்.

"கூற்ற மில்லையோர் குற்ற மிலாமையால்;
சீற்ற மில்லைதம் சிந்தையிற் செய்கையால்;
ஆற்ற னல்லற மல்ல திலாமையால்
ஏற்ற மல்ல திழிதக வில்லையே."

—(க. ரா. நாட்டுப் படலம்.)

கோசல நாட்டு மக்கள் எத்தகைய குற்றமும் செய்திலர். அரசனுக்கு விரோதமான குற்றம், நாட்டுக்கு மாறான குற்றம், ஒழுக்கத்திற்கு வேறாய குற்றங்களைச் செய்திலர். ஆகவே, அவர்கள் எம பயத்திற்கு ஆளாகவில்லை. குற்றத்தால் வருவது கூற்றம். ஆகவே, குற்றமே யில்லாக் கோசல நாட்டிற் கூற்றமேது? கூற்றத்

தினது பயந்தான் ஏது? எனவே, மக்கள் குற்றமற்றவர்களாக விளங்கினமையின், அவர்கள் பிறவிப் பேற்றைப் பெற்றவர்களே யாவார்கள். ஆகவே, மக்கள் 'தெய்வ பயம், மனித பயம்' என்ற இரண்டினையும் கடந்ததொரு தனி நிலையில் வாழ்பவரானார். இவ் வாழ்வே சுதந்திர வாழ்வு எனப்படும்.

ஆகவே, சுதந்திரம் என்பது பிறர் நமக்குக் கொடுக்கும் ஒன்றன்று. நாம் குற்றம் இன்றி இருப்போமாயின், நம் நிலை சுதந்திர நிலையே. குற்றம் இன்றி (தற்போது, மேற்கூறிய குற்றங்களோடு அந்நிய ஆடை யுடுத்தல் முதலாய குற்றங்களின்றி) இருப்போமாயின், நாம் அடைவது சுதந்திர வாழ்க்கையே. 'இழந்த எங்கள் சுதந்திரத்தைக் கொடுங்கள்' என வெள்ளையரை நாம் வேண்ட வேண்டுவதில்லை. அவர்களிடமிருந்து நாம் பெறவேண்டுவது ஒன்றுமே யில்லை என்பது தேற்றம். இதுவே உண்மைத் தத்துவம். நாம் மேற்கூறிய குற்றங்களின்றி வாழ்வோமாயின், சுதந்திரம் நம்மைத் தேடி யடையும். நாம் அடைவது சுதந்திர வாழ்வே. அண்மையில் நடைபெற்ற வட்டமேஜை, சதுரமேஜை மகா நாடுகள் நடைபெற வேண்டா.

'சீற்ற மில்லதம் சிந்தையிற் செய்கையால்' என்றதில் விழுமிய சகோதரத்வம் விளங்கக் காணலாம். சிந்தனை யின்மையால் சீற்றம் வருவதே யன்றிச் சீற்றம் சிந்தனையோடு வராது. கோசல மக்கள் எக் கருமத்தையும் சிந்தனையுடன் செய்வதால் சீற்றம் வர ஏது வில்லை. சீற்றமின்றேல் பகை யேது? யாவரும் சமத்துவமெய்தி, ஒன்றுபட்ட மனத்தராய்ச் சமநிலையில் அமர்ந்து வாழ்வர். எனவே, நாட்டின் அழிவுக்கும் குழப்பத்திற்கும் மக்கள்மாட்டுச் சிந்தனை யின்றித் தோன்றும் சீற்றமே காரணம். சிந்தனையோடு மக்கள் எக் காரியத்தையும் செய்வராயின், சீற்றமே நாட்டில் தலைகாட்டா தொழியும். கோசல மக்கள் சிந்தனையோடு தங்கள் காரியங்களைச் செய்து வந்தமையால், சீற்றத்தை வென்றார்கள். ஒருவரோடொருவர் உடனுறைந்து ஒத்த மனத்தராய் வாழ்ந்தார்கள்.

இச் சகோதரத்வமும் புறத்தே யிருந்து புகுத்தவல்லதன்று—நம்மாட்டே யிருப்பது; நாமே புகுத்திக்கொள்ளக் கூடியது. 'சகோதரத்வம் அவர்கள் தரவேண்டுவது, இவர்கள் தரவேண்டுவது' என்பன வெற்றுரைகளே யென்க. கம்பர் கூறும் மூன்றாமடிகளால், 'கோசல மக்கள் உயர்வு தாழ்வு பெற்றிலர்' என்ற உண்மைச் சமத்துவத்தைக் கூறிப் போந்தார். மக்கள் ஆற்றவல்ல செயல்களால் உயர்வு தாழ்வு யேற்படுவது சகஜம். ஆனால் கோசல மக்கள் ஆற்றும் செயலால் உயர்வு தாழ்வு யேற்படவில்லை. ஏனெனில், யாவரும் ஒரு செயலே ஆற்றியதால் உயர்வு தாழ்வு தோன்றி



லது. இதுவே மக்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்குரிய தொழிலாம். எனவே, அறமே செய்கின்ற மக்களிடைச் 'சமத்துவம்' என்ற நிலையே நிலவி யிருந்தது.

உலக ஞானத்தை உள்ளவாறு உணர்ந்த மாபெரும் புலவராய கம்பர்பிரான் 'சுதந்திர வாழ்க்கை' என்பது யாதென்பதைத் தமது நாலடிப் பாசுரத்தால் நலமுற நவின்றுள்ளதை நோக்க நோக்கக் கற்றோர் கழிபேருவகை கொள்வர். இராம காதையைக் கூறுமுகத்தான் தமது ஒன்றுபட்ட கொள்கைகளை இடங்களுக்கேற்ப வமைத்து, நமக்கு நல்லறிவு கொளுத்திச் செல்லும் கம்பர் திறம் பாராட்டத் தக்கதன்றோ?

"பிறரால் நீங்கள் உங்கள் உரிமைகளை யடைவதாக நினைப்பது தவறு. பிறர் உங்கட்குக் கொடுக்க வேண்டுவது ஒன்றுமில்லை. எல்லாம் உங்களிடத்தே யுள்ளது. உங்கள் ஒழுக்கத்தால் எய்த வல்லனவே சமத்துவமும், சகோதரத்வமும். என் பாசுரத்தைப் பன்னிப் பன்னிப் படியுங்கள்! நீங்கள் சுதந்திரத் தத்துவங்களை யுணர்வீர்கள் சுதந்திரம் தானாக வந்து உங்களை யடையும். உங்கள் சுதந்திரம்-நீங்கள் அடைய விரும்பும் சுதந்திரம் உங்களிடத்தே யுளது. அது வெளியில் இருப்பதாக எண்ணித் தேடி யலைய வேண்டா. இந்தியச் சகோதரர்காள்! ஏமாறுதீர்கள்! ஏமாறுதீர்கள்!!" என்று கம்பர் நமக்கு எச்சரிக்கின்றார் அன்றோ?

மேற்கூறிய செய்யுளோடு தழுவத்தக்க மற்றொன்றையும் புலவர் நமக்குத் தந்துள்ளார்:

"வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்;
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்;
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்;
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்."

—(க. ரா. நாட்டுப் படலம்.)

கோசல நாட்டில் வறுமை யென்பதில்லை; அதனால் ஈகை யென்பதுமில்லை. அந்நாட்டினர்க்குப் பகைவர் இலர்; அதனால் அவர்களது வீரமும் காணப்படவில்லை. பொய்யென்பது ஆண்டில்லை; அதனால் உண்மை யென்பதும் அங்குக் காணப்படவில்லை. எல்லோர்க்கும் 'கேள்வி யறிவு' பொருந்தியிருந்தது; அதனால் அங்கு அறியாமை யில்லையாம்.

என்னே, கம்பர் காட்டும் சுதந்திர வாழ்வு! நாட்டில் வறுமை யின்மையே சுதந்திர வாழ்க்கையாகும். வறுமை யில்லாதபோது ஈகை எங்கிருந்து தோன்றும்? நேரான பகைவர் இன்மையால்,

மக்களது வீரம் தோன்றவில்லையாம். கோசல மக்கள் குற்றம் செய்யாதவராதலின், அவர் மாட்டுப் பிறர் பகைகொள்வதெங்ஙனம்? பகை யிருந்தாலன்றோ மக்கள் தமது வீரத்தைக் காட்ட வியலும்? பகையுமில்லை! வீரமுமில்லை!! மக்கள் ஒருவருமே பொய்யுரை புகல்வதின்மையால், உண்மை யென்பதில்லாததாயிற்று. 'பொய்' என்பது ஒன்று இருந்தாலன்றோ அதனினும் வேறாய 'மெய்' என்பதை மக்கள் உணர்வர். பொய்யே இல்லாத கோசல நாட்டில் 'மெய்' என எதனைச் சுட்டிக் காட்ட வியலும்? எல்லோர்க்கும் அறிவு நிரம்பியிருந்தமையால், அறியாமை யில்லா தொழிந்தது. ஆகவே, ஒரு நாட்டு மக்கள் சுதந்திர வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமாயின், ஒருவரைச் சென்று இறைஞ்ச வேண்டா; பிறர் நமக்குக் கொடுப்பதன்று சுதந்திர வாழ்வு. அதனை நாமே பெறலாம். மக்கள் அகத்திலும் புறத்திலும் யாதொரு குற்றமும் இன்றி யிருத்தல் அவசியம்; சீற்றத்தை யறவே ஒழிக்கவேண்டும். அதனால், சகோதரத்வம் எய்தியவராவர். யாவரும் அறத்தைப் புரிதல்வேண்டும். அதனால், சமத்துவம் எய்தியவராவர். இங்ஙனம் மக்கள் இருப்பின், அந்நாடே சதந்திரம் பெற்ற நாடாகும். அந்நாட்டார் வாழ்வது சுதந்திர வாழ்வேயாகும்.

நம் இந்திய மக்கள் கம்பர் அமுத மொழிகளைப் பின்பற்றுவாராயின், சுதந்திரம் நம் கையகத்தே யுளதென்பதை அறிவர். இவையே நம் காந்தியடிகள் கூறுவனவும். (1) நாம் முதலிற் குற்றமற்றவர்களாக இருத்தல் வேண்டும். மன மொழி மெய்களாற் குற்ற மின்றியும், அந்நியச் சாமான்களை உபயோகப்படுத்துங் குற்றமின்றியும் இருத்தல்வேண்டும். (2) சிந்தனையால் நினைத்த கருமத்தையே செய்யவேண்டும். அப்போது சீற்றம் முதலாய துர்க்குணங்கள் நம்மிடந் தலை காட்டா. எனவே, நமக்குள் இருக்கும் பலவித வேறுபாடுகள் நீங்கி, 'இந்து—முஸ்லீம்' ஒற்றுமையும் ஏற்பட்டு, யாவரும் சகோதரர் என்ற உண்மை ஞானத்தைப் பெறுவோம். (3) 'அறம்' எனக் கம்பர் கூறுவது நம் நாட்டு ஏழைச் சகோதர சகோதரிகளைப் பிழைப்பிப்பதேயாகும் எனக் கொள்ளல் நலம். அன்பர்களே! இந்திய உரிமை மக்களே! நம் நாடு—கம்பர் கூறும் கோசலத்தைத் தன் அகத்தே பெற்ற நம் தாய் நாடு—கம்பர் கூறியதைவிடப் பதின்மடங்கு பொலிவு பெற்று விளங்காதோ! கூறுங்கள். கோசல நாட்டினரது சுதந்திர வாழ்க்கையைக் கம்பர் இரண்டு பாசுரங்களால் விரித்தார். இந்தியா அந்நிலையடையின், அதன் சுதந்திர வாழ்வைப் பத்துப் பாசுரங்களால் விரிக்கப் புலவர் தற்போதும் உளரன்றோ!

---

# தமிழர் மணம்.

பண்டித திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்.

(160-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீ ராமன் ஆடவன்—ஆண்மகன்—அரசகுமாரன் யாவரையும் வினவவேண்டுவதின்று; தன் மனம்போல் செய்யலா மென்பிரேல், சீதையின் மாட்டு யாது செப்புவீர்? சீதை பெண்; கன்னி; கன்னி மாடத்துறையும் காரிகை; பெற்றோர்க்குள் அடங்கிய பேதும்பை; மற்றவர்க்குள் ளடங்கிய மங்கை; எவ்வாறு எவர் ஆணையும் இன்றி ஸ்ரீ ராமனைக் காதல்கொள்ளலாம்.

"காதல் கருத்தி லடங்காது
காதல் காப்பில் நில்லாது."

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர்த் திருக்கோயிலில் வலம் வரும்பொழுது பரவை நாச்சியாரைப் பார்த்தார். பார்த்ததுமே சுவாமிகள்,

"கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்றன் பெருவாழ்வோ!
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ! புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ!
அற்புதமோ! சிவனருளோ! அறியேன்என் றதிசயித்தார்."

அதிசயித்த சுவாமிகளைப் பார்த்த பரவையாரும்,

"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ! பெருகொளியால்
தன்னேரில் மாரனோ! தார்மார்பின் விஞ்சையனோ!
மின்னோர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ!
என்னே மனந்திரித்த இவன்யாரோ எனநினைத்தார்."

சுந்தரமூர்த்திகள் பிராமணர் குலத்தில் பிறந்தவர்; பரவை நாச்சியாரோ கணிகையர் குலத்தில் தோன்றிய காரிகையார். இதுகாலை, மணஞ் செய்வோர் மரபிற்குள்ளேயே மணக்கவேண்டு மென்கின்றனர். தத்தம் குலத்தினரை விடுத்து வேறு குலத்தில் மணம் செய்வோரைச் சீறுகின்றனர். கலப்பு மணம் செய்வோரைக் காய்கின்றனர்; கடிகின்றனர். கலப்பு மணம் செய்தோரைச் சாதியைவிட்டுத் தள்ளவேண்டு மென்கின்றனர். கலப்பு மணத்தாரை காட்டுப்புறங்களில் செய்யும் கொடுமை கூறவொண்ணாது. அந்தோ! அந்தோ! கலப்பு மணத்தார்க்கு வண்ணான் இல்லை; நாவிதன் இல்லை; கிணறு இல்லை. இத்

# பர்மாவின் சரித்திரக் குறிப்புகள்.

திரு. ஸி. நாகையா அவர்கள்.

பர்மா ஒரு அழகிய நாடு. அதன் இயற்கையின் வனப்பைக் குறித்து ஒரு அத்தியாயம் எழுதலாம். பர்மாவிற்கு வந்துபோனவர்க்கே பர்மாவின் தனிச் சிறப்புத் தெரியவரும். ஆங்கிலத்தில் 'Land of the Golden Pagodas' என்றழைக்கப்படுகிறது. எந்த மூலை முடுக்கை நோக்கினாலும், வானளாவிய ஸ்தூபிகளைக்கொண்ட பொற் கோயில்களைக் காணலாம். பர்மா, இரு பாகங்களாகப்

---

துணைக் கட்டுப்பாடுகளும், கடுமைகளும் உண்டு. அம்ம! அதனை விரிக்கில் கல்லும் கரையும்; கை கடுக்கின்றது; சொல் சோர்கின்றது.

கலப்பு மணம்—தமிழர் மணம் வேண்டாமென்போர் பழங்கால இலக்கியங்களை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இன்றேல், ஸ்ரீ ராமபிரான் திருமணத்தைச் சிந்தித்தல் வேண்டும்; சுந்தரமூர்த்திகள் செம் மணத்தைத் தெளிதல் வேண்டும். சுந்தரமூர்த்திகள் செய்த செம் மணம்போல் செய்வதில் தீமை என்னை? மற்றை நாயன்மார் இவ்வுடலை இவ்வுலகில் இட்டுக் கைலாயம் செல்ல, சுந்தரமூர்த்திகளோ சேரமான் பெருமாள் தொடர்ந்துவர இவ்வுலக வுடலுடனே கைலாயம் சென்றனரே! கைலாயத்திலுள்ள பூதகணங்கள் சுந்தரமூர்த்திகள் திருமேனியைக் கணிகையர் உடலம் தீண்டப்பெற்ற திருமேனி என்று விலக்கப் பட்டதா? கலப்பு மணம் செய்தாரென்று கைலாயத்தில் சுந்தரமூர்த்திகள் கடியப்பட்டனரா? சேரமான் பெருமானையாவது, திருவணுக்கத் தொண்டர் தடுத்ததாகப் பெரிய புராணம் புகல்கின்றதே! சுந்தரமூர்த்திகளுக் கங்ஙனம் ஏதேனும் இடையூறுண்டா? இல்லை; இல்லை. ஆகையால்; கலப்பு மணம் செய்வதில்—காதல் மணம் கொள்வதில் பாவம் இல்லை; பழி யில்லை.

கலப்பு மணக் காதலர்களே! தமிழர் மணத் தக்கோர்களே! காதல் மணத்தைக் காய்வோர் காய்க; கடிவோர் கடிக; செய்வது செய்க. அன்னார் அறைவதற்கு அஞ்சற்க; அஞ்சற்க. காதல் மணம் செய்து தமிழர் மணம் பூண்டு சுந்தரமூர்த்திகள் பெற்ற சிவப்பேறு பெறுவோம்; இராமபிரான் எய்திய இன்ப வாழ்வெய்துவோம். தமிழர் மணம் தழைக்க! தழைக்க!!

---



பிரிக்கப்பட்டுள்ளது. கீழ் பர்மாவை, லோயர் பர்மா வென்றும் மேல் பர்மாவை, அப்பர் பர்மா வென்றும் அழைத்து வருகின்றனர். பூர்வ காலத்தில் அப்பர் பர்மா, சுனபராண்டா வென்றும் லோயர் பர்மா, ரமண்ய தேசமென்றும் பர்மியரால் அழைக்கப் பட்டு வந்தது. அக் காலத்தில் பியு, கான்ரான், தெட் முதலிய ஜாதியார் வட பாகத்தில் வசித்து வந்தார்கள். மொவ்ன் அல்லது டல்லாய்ங் என்றழைக்கப்பட்ட ஒரு வகுப்பார் தென் பாகத்தில் வாசம் செய்து வந்தார்கள். பர்மாவின் தலைமை நகரமாய் இப்பொழுது இருந்து வரும் இரங்கூனைப்பற்றிக் கவனிப்போம். கிறிஸ்து பிறப்பதற்கு முன், அதாவது ஆறுவது நூற்றாண்டில், இதை பௌக்காவதி யென்றும் ஒக்கலாபா வென்றும் அழைத்தார்கள். பின்னர், டகோவ்ன் என்னும் பெயரால் மாற்றி அழைக்கப் பட்டது. டல்லாய்ங்காரர்களோடு போர்செய்த அல்லவ்ன்பயா என்பவருடைய காலத்தில்தான் இந் நகருக்கு இரங்கூன் என்னும் பெயரளிக்கப்பட்டது. இப் பெயர், ஓர் காரணப்பெயரேயாகும். பர்மியர், தங்கள் பாஷையில் "யான் கோவ்ன்" என்றே அழைக்கின்றனர். "யான்" என்பது சண்டை; "கோவ்ன்" என்பது முடிவு. சண்டை முடிவுற்ற இடமானமையால் அதைக் காரணமாக வைத்துக்கொண்டு அங்ஙனம் பெயரிட்டதாய் பர்மியர் சரித்திரங்கள் கூறுகின்றன. இப்பொழுது ஆங்கிலத்தில் (Rangoon) என்றும் தமிழர்கள் ரங்கோனென்றும் அரங்கமா நகரமென்றும் அழைக்கின்றனர். இவ்வகைச் சிறப்புகள் பல அமைந்த இத் தலைநகரின் கண் நிர்மாணிக்கப்பட் டிருப்பதும் உலகின் அதிசயங்களில் ஒன்றெனக் கூறு நிற்கும் ஷுவேட கொவ்னைப்பற்றி தமிழ் நாட்டார் அதிகமாய் அறிந்திருக்க மாட்டார்களென்பது எனது துணிபு. இந் நாட்டில் குடியேறி பொருள் திரட்டி திரும்பும் நம்மவர்கள் இக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்வதை ஓர் கடமையாக மட்டும் கொண்டிருக்கிறார்கள். இது சந்தோஷிக்கத்தக்கதே யாகும். ஆனால் அக் கோயிலின் உண்மைச் சரித்திரமென்னவென்பதைக் குறித்து அறிய அத்துணை ஆவல் கொள்வதில்லை. இது குறித்து விசனிக்கின்றேன். எனவே இதன் கீழ் அக் கோயிலின் வரலாற்றைச் சுருக்கமாய்க் கொடுப்பது அவஸ்யமாகும்.

இரண்டு பர்மிய வியாபாரிகள் வாணிபத்தை யொட்டி வங்க தேசம் சென்றிருந்தார்கள். அந் நாட்டில் அதுபோது பஞ்சம் மக்களைப் பிய்த்துத் தின்றது. கொண்டுபோன அரிசியை ஏராளமாய் தானம் செய்தார்கள். தரும சீலர்களின் குணத்தைக் கண்ட, தேவதூத னொருவன், அவர்களை ஸ்ரீ கௌதமர் இருக்குமிடத்திற்கு

அனுப்பி வைத்தான். கௌதமரை அணுகிய அவ்விரு ஏழை பங்காளர்கள் பெறற்கரிய ஒன்றை வெகுமதியாகப் பெற்றனர். அவை எவையெனில், ஸ்ரீ புத்தரின் சிகைகளாகும். எட்டுச் சிகையே அவற்றின் எண்ணிக்கையாகும். அவற்றில் சிலவற்றை, கடல் யாத்திரையின்போது நாகராஜனுல் எடுத்தேகப் பெற்றதாய்ச் சொல்லப்படுகிறது. எஞ்சியவற்றைக் கொண்டுவந்து இரங்கூன் சேர்த்தார்கள். பின்னர் அதன் மீது பிரமாண்டமான பொந்நிற ஸ்தூபியை யெழும்பி அதனையே ஸ்ரீ புத்தரின் கோயிலாக பௌத்த மத பர்மியர்கள் வணங்கத் தலைப்பட்டார்கள், இது இங்ஙனமிருக்க, புத்தரின் பர்மா விஜயத்தைப் பற்றிக் கவனிப்போம். ஷின் பொவ்ணு என்னும் துறவி யொருவர், கௌதம புத்தரைப் பர்மாவுக்கு விஜயம் செய்யும்படி வேண்டிக்கொண்டதாயும், அதன்மேல் பகவான் புத்தர், 499 சிஷ்யர்களுடன் வானிஸ காமா என்றழைக்கப்பட்டதும் இப்பொழுது லேகைன் என்றழைக்கப்படுவதுமாகிய கிராமத்திற்கு விஜயம் செய்ததாயும் (அக் கிராமம் மீன்பு ஜில்லாவிலிருக்கிறது.) அதே இடத்தில் எழுப்பப்பட்டுள்ள ஷுவே ஸெட்டோ பொற் கோயிலில் புத்தர் தமது இரு பாதங்களை அடையாளமாய்ப் பதித்துவிட்டுச் சென்றதாயும் தெரிய வருகிறது. புத்தருடைய காலத்திற்கு முன்னதாகவே நமது நாட்டிலிருந்து சாக்கிய குடும்பத்தைச் சேர்ந்த அபிராஜா தமது பரிவாரங்களுடன் குடியேறினர். மாந்தலேய்க்கு வடக்கேயுள்ள டகவ்ன் என்னும் நாட்டில் தன்னுடைய அரசாங்கத்தை நிறுவினர். அவருடைய பட்ட வாரிசைச் சேர்ந்த பெய்ன்னகா என்பவருடைய ஆளுகையில் சீனர்கள் படையெடுத்தார்கள். ஸ்ரீ புத்தர் காலத்தில் இந்தியர் இரண்டாவதாக இந்த நாட்டில் குடியேறலானர்கள். அக் காலத்தில் தசராஜா என்பவர் மீண்டும் டகவ்னில் அரசாங்கத்தை அமைத்தார். இவர் பிரஜைகளின் பயிர்களை நாசம் செய்த ஆண் பன்றியொன்றைப் பின் தொடர்ந்து தெற்கு நோக்கிச் சென்றார். புரோமுக்கடுத்த ஓரிடத்தில் முற்றும் துறந்த முனிவரானர். ஓர் தினத்தில் இவருடைய ஆச்ரமத்துக் கருகில் பெண் குழந்தை யொன்றிருப்பதைக் கண்டார். உடனே அக் குழந்தையை வாரியெடுத்து அன்போடு வளர்த்து வந்தார். அக் குழந்தையைப் பேடாரி என்ற பெயரிட்டழைத்தார். இனி டகவ்ன் மன்னரைப் பற்றிச் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். அம் மன்னர்க்கு இரண்டு குருட்டு ஆண் பிள்ளைகள் பிறந்தன. அவற்றிற்கு முறையே மகா தாம்பவாவென்றும் சுலா தாம்பவா வென்றும் பெயரிடப்பட்டது. அப்புத்திரர்களை மன்னன் விரும்பினனில்லை. உடனே அவர்களைக் கொலை செய்துவிட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தான். இதற்கு, பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் எங்ஙனம் சம்மதிப்



பாள்? கட்டுக் கடங்காத குழந்தைகளின் பாசத்தால் அவர்களைத் தெப்பமொன்றில் ஏற்றுவித்து அரச குடும்பச் சின்னங்களுடனும் ஐராவதி ஆற்றில் மிதந்து போகும்படி செய்தாள். தெப்பம் ஐராவதியில் மிதந்துகொண்டே வந்தது. அதுகாலை அரக்கியொருவள் நேத்திரமில்லாக் குழந்தைகளுக்குத் தெரியாமல் அவர்களுடைய உணவுகளைத் திருடிச் சாப்பிட்டுக்கொண்டே வந்தாள். ஒரு சமயம் திருடும் பொழுது இராஜ குமாரர்களிருவரும் அவளைப் பிடித்துக்கொண்டு வாளினல் வெட்டிவிட முயற்சித்தார்கள். சில நிபந்தனைகளின் பேரிலும் உறுதிமொழிக் கிணங்கியும் அவ்வரக்கிக்கு உயிர்ப் பிச்சை அளித்தார்கள். அதன் பின்னர், அரக்கியானவள் ராஜ குமாரர்களின் குருட்டுக் கண்களில் ஒருவித மருந்தைப் புகுத்தினள். அவர்கள் கண் பார்வை பெற்றனர். மருந்து செலுத்தப்பட்ட விடத்தை சகூ என்றும் பார்வைபெற்ற இடத்தை ஸல்லீன் என்றும் பர்மியர் அழைக்கின்றனர். கண் பார்வை பெற்ற அவ் விரண்டு இராஜ குமாரர்களும் தெப்பத்தைக் கீழ் நோக்கிவிட்டு வந்தார்கள். புரோமுக் கடுத்துள்ள புகாச்சவ்ன் என்னுமிடத்தில் பேடாரி, ஊசி நுழையும் துவாரமுள்ள சுரைக் குடுக்கையில் ஐராவதி நதியின் ஜலத்தை நிரம்பிக்கொண் டிருந்தாள். அவ்வமயத்தில் ஆங்கே இரண்டு இராஜ குமாரர்களும் வந்து சேர்ந்தார்கள். பேடாரிக்கும் மகா தாம்பவாவுக்கும் காதல் சம்பந்தமாக நீண்டதோர் சம்பாஷணை நடைபெற்றது. முடிவில் ரிஷியின் சம்மதத்தின் பேரில் மகா தாம்பவா அந் நங்கையை தனக்கு மனைவியாக வரித்துக்கொண்டான். அச் சம்பவம் பௌத்த சகாப்தம் ஆரம்பமாகிய அறுபதாவது வருஷத்தில் நிகழ்ந்தது. பின்னர் தேக்சாயின் பியு அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசியையும் இரண்டாம் முறையாக மணம் செய்துகொண்டான். இவ்விராஜ குமாரன் சீக்கிரத்தில் காலகதி அடையவே அவனுக்குப் பதிலாய் இளைய சகோதரன் பேடாரியைப் புனர் விவாகம் செய்துகொண்டு அரசாங்கம் நடத்தி வந்தான். இவனுக்கு டுட்டபாங் என்னும் பெயரினையுடைய குமாரனெருவ னிருந்தான். கிறிஸ்து பிறப்பதற்கு 443 வருடங்களுக்கு முன்னதாகவே ஸ்ரீ க்ஷேத்திரா வென்னும் நகரை நிர்மாணித்த பெருமை இம் மன்னருக்கே உரியதாகும்.

## பியு மன்னர்

பியு மன்னரைக்குறித்தும் அவருடைய நகரைப்பற்றியும் சீனர்களுடைய சரித்திரத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:—

"சமீபமான இடங்களுக்கு பியு மன்னர் பல்லக்கில் செல்வார். தூரமான பிரயாணமாயின் யானைமீது ஏறிக்கொள்வார். அவர்க்குப் பணிவிடை செய்ய நூற்றுக் கணக்கான பெண்களுண்டு.

நகரைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள கோட்டை பச்சைப் பசேலென்றும் வளவளப்பா யிருப்பதுமாகிய ஓடுகளைக் கொண்டதாயும், 12 கதவுகளை உடையதாயு மிருக்கிறது. ஒவ்வொரு மூலையிலும் பொற் கோயில் உண்டு. குடிகள் கோட்டைக்கு உட்புறத்தில் வசிக்கின்றனர். அவர்களுடைய வீட்டுக் கூரைகள் ஈயத் தகட்டினலும் துத்தநாகத் தகட்டினலும் அமைக்கப் பட்டிருக்கின்றன. மற்ற உயிர்களைக் கொல்லப் பிரியப்படமாட்டார்கள். கரகோஷம் செய்வதின் வாயிலாக ஒருவரையொருவர் சந்தோஷிக்கச் செய்கின்றனர். அவர்கள் பௌத்த மதத்தினர். நூற்றுக்கணக்கான ஆச்ரமங்களைக் கொண்டுள்ளார்கள். அரண்மனைத் தளத்தில் சித்திரங்கள் நிறைந்த கம்பளங்கள் விரிக்கப்பட்டுள்ளன. அரச குடும்பத்தில் 7 வயதானவுடன் அக் குழந்தைக்கு முடி யெடுத்துவிடுவார்கள். பின் ஆச்சிரமத்தில் துறவி வாழ்க்கை யேற்கச் செய்வார்கள். இருபது வயதிற்குள் பௌத்த மத சாஸ்திரங்களனைத்தையும் கற்றுக்கொள்வார்கள். பருத்தியினலாய உடைகளையே அங்கிகளாகக் கொள்வர். நூற்றுக்கணக்கான உயிர்களைப் போக்க வேண்டியதிருப்பதால் பட்டு உடைகளை அணிவதில்லை. (ஆனல் இப்பொழுது பாலர் முதல் வயோதிகர் ஈறாக பாதரட்சைகள் முதல் உடைகள்வரை பட்டு மயமாய் காணப்படுகிறார்கள்.) அரசருடைய மண்டபத்தில் இரண்டு மணிகளிருக்கின்றன. அவற்றுள் ஒன்று, தங்கத்தாலும் பிறிதொன்று வெள்ளியாலும் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். சத்துருக்கள் படையெடுத்து வந்தால் அவற்றை அடிப்பதுண்டு. அரண்மனையில் நூற்றுக்கணக்கான அடி உயரமுள்ள வெள்ளை யானை உருவமொன்றும் உண்டு. பஞ்சமோ, பிணியோ நாட்டில் தலை விரித்தாடினல் உடனே அரசன் அவ் வெள்ளை யானை முன் சென்று முழந்தாளிட்டு தன்னைத்தான் குற்றம் சுமத்திக்கொள்வார். டுட்டபாங் என்பவர் அரியாசனத்தி லமர்வதற்கு ஒரு வருட காலத்திற்கு முன்னதாக இந்தியாவில், காலப் பொருத்தமான சம்பவம் ஒன்று நடைபெற்றது. வேசாலி நாட்டு மன்னனகிய காலசோகனென்பவருடைய ஆளுகையில், வேசாலி என்னும் இராஜதானிப் பட்டணத்தில் இரண்டாவது பௌத்த மத சபைக் கூட்டம் கூடிற்று. அதன்பின்னர் காலசோகரின் புத்திரன் டுட்டரான் ஆளுகையில் பாடலிபுர மென்னும் நவீன பாட்னவில் புத்தமதச் சபையின் மூன்றாவது கூட்டம் கூடிற்று. அசோகர், ஒன்பது நாடுகளுக்கு மதபோதகர்களை அனுப்பியிருந்தார். அவர்களில் ஷின் சோண, ஷின் உட்டரா முதலானேர் சுவர்ண பூமி என்றழைக்கப் பட்ட தட்டோனிற்கு வந்து சேர்ந்தார்கள். லோயர் பர்மாவில் வசித்த மக்களனைவரையும் புத்த மதத்தைத் தழுவச் செய்தார்கள். இத் தனிப் பெருமை அவர்களுக்கே உரியதாகும்.

---

# தமிழ் நாடும் புத்தகாலயங்களும்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.



பொதுவாகப் பாரத நாட்டினுடையவும், சிறப்பாக நந்தமிழ் நாட்டினுடையவும் மேன்மையைக் கருதி யுழைத்துவரத் தலைப்பட்டுள்ள நம் "பாரதி" பத்திரிகை நாட்டின் நலத்திற்கான பல துறைகளிலும் புகுந்து பாடுபட வேண்டியது அவசியமாகும். தமிழ் நாட்டில் தோன்றியுள்ள சீரிய செந்தமிழ் மாத வெளியீடுகள் பலவும சமயம், மொழி, சமூகம், சாதி ஆகிய துறைகளில் ஒன்றைப்பற்றியே தம் முழு கவனத்தையும் செலுத்தி வருதல் கண்கூடு. பொதுப் பெயர் தாங்கி வெளிவருவன சிலவும் சைவ சமயத் துறை பற்றிய கட்டுரைகளையே நிரம்பப் பெற்றுக் காணப்படுகின்றன. எனவே நம் "பாரதி" அப்படிக்கின்றி நாடு வளம்பெறுவதற்கான பல துறைச் செய்திகளையும் தன்னகத்தே கொண்டு உழைத்து வருவதாமென்பதை வாசகர்கள் நன்குணரக்கூடும். இக்காலத்தில் ஒரு நாடு அறிவிலும், ஆற்றலிலும் வளர்ச்சியடைவதற்கு அந்நாட்டில் புத்தகாலயங்கள் அபிவிருத்தி யடையவேண்டுவ தவசியம். அதுபற்றியே, இதுகாலை உலகில் நாகரீகத்திலும், பிறநலன்களிலும் உயர்வடைந்து விளங்கும் நாடுகள் ஒவ்வொன்றும். அவ்வந் நாட்டில் ஏராளமான புத்தகாலயங்களை ஏற்படுத்தி, அவ்வழியே நாட்டு மக்களின் அறிவைப் பண்படுத்தி வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி முதலிய தேசங்கள் புத்தகாலயங்களின் (Libraries) வளர்ச்சிக்கெனவே தனி இயக்கங்களைக் கண்டு வேலை செய்து வருகின்றன. ஆகவே நந் தமிழ் நாட்டிலும் அதுபோல் புத்தகாலய இயக்கத்தைக் கண்டு தமிழக மெங்கும் புத்தகாலயங்களும், வாசகசாலைகளும் பெருவாரியாகத் தோன்றி நாட்டுக்குப் பயன்படச் செய்யவேண்டுவது தமிழரின் முக்கியக் கடமையாம். இதுபற்றியே நம் "பாரதி" தனது முதல் இதழிலேயே தமிழ் நாட்டில் நூல் நிலைய இயக்கத்தை வளர்ந்தோங்கச் செய்யப் பாடுபடவேண்டுவது தனது கடமைகளுள் ஒன்றெனவற்புறுத்திக் கூறியிருக்கின்றது. எனினும் இவ்வியக்க சம்பந்தமாய் இதுகாறும் எமது ஞாபகத்தின்படி "பாரதி"யில் இரண்டு மூன்று கட்டுரைகளுக்குமேல் வெளிவரக் காணேம். எனவே 'பாரதி' ஆசிரியரின் கட்டளையின்படி இனி புத்தகாலய இயக்கத்தைப்பற்றித் தொடர்ந்து சில கட்டுரைகள் எழுதிவர முற்படுவோம்.

மனிதன் அறிவு வளர்ச்சி யெய்துவதற்குச் சுலபமான சாதனம் புத்தகங்களைப் படிப்பதேயாம். "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு" என்ற தமிழ் மறையின்படி, மக்கள் அறிவுத் துறைபற்றிய பற்பல நூல்களைப் படிக்கும் அளவுக் கேற்பவே அறிவு வளம் பெறுகின்றன ரென்பது உண்மையிலும் உண்மை. உலகில் அறிவு சிறந்த மேதாவிகளெனத் திகழ்ந்த பெரியோர்கள் பலரும் "புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" என்றபடி சதா புத்தகமும் கையுமாக விருந்துப் பல நூல்களையுங் கற்றுவந்திருப்பதைக் காணலாம். அவ்வாறு நாட்டிலுள்ள மக்களில் பெரும்பாலோர் அறிவு நலன் வாய்க்கப் பெற்றார்களாயின், அந்நாடு முற்போக் கடைந்ததெனத் தீர்மானிக்கத் தடையில்லை ஆதலால் படிக்கக் கற்ற மக்கள் ஒவ்வொருவரும் அறிவு தரும் பல நூல்களைக் கற்கவேண்டுவது இன்றியமையாததாகும். பணம் பெருத்த மேல்நாடுகளிலேயே ஒருவன் பல நூல்களையும் பணங் கொடுத்து வாங்கிப் படிப்பதென்பது முடியாததெனக் கூறப்படும் இக்காலத்தில், ஏழைகள் மலிந்த இந்திய நாட்டில்—அதிலும் நந் தமிழகத்தில் ஒருவரே பல புத்தகங்களை விலை கொடுத்துப் பெற்றுப் படிப்பதென்பது எவ்வளவு பிரயாசை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழ் நாட்டில் பல நூல்களையும் வாங்கிப் படிக்க விருப்பம் மிக உடையோர் பலர், பெரும் பணஞ் செலவிட்டு அவற்றைப் பெற இயலாமல் வாடி நிற்கும் நிலையை அறியாதார் யார்? எனவே ஒவ்வொரு கிராமத்திலும் சில தனவந்தர்கள் சேர்ந்தோ, அல்லது பல பொது மக்கள் சேர்ந்தோ தலைக்குச் சிறிது பொருளாக உதவிப் பொது நிதி யொன்றைக் கண்டு, அதனால் சிறந்த நூல்கள் பலவற்றை வாங்கி யொரு புத்தகாலய மேற்படுத்தி, அதினின்றும் யாவரும் இலவசமாகவோ, அன்றிச் சிறிது சந்தா செலுத்தியோ வேண்டிய புத்தகங்களை இலவசமாகப் பெற்று வாசிக்க வசதி செய்து கொடுத்தால் உலகத்திற்கு எவ்வளவு உபகாரமா யிருக்குமென்பதை எண்ணிப் பாருங்கள். அவ்வாறு ஒவ்வொரு ஊரிலும் சிறந்த புத்தகாலயமொன் றேற்பட்டு, அதன் மூலமாய்ப் புத்தகப் படிப்பும், பத்திரிகைப் படிப்பும் பொது ஜனங்கள் சுலபத்தில் பெறுவார்களாயின் விரைவில்—எனவே இரண்டோராண்டுகளில் நந் தமிழகம் எத்துணை முன்னேற்ற மடையு மென்பதை வாசகர்கள் சிந்திக்க வேண்டும்.

புத்தகாலய மேற்படுத்துவ தென்பது நந் நாட்டுக்குப் புதியதொன்றல்ல. தமிழ் நாட்டு மூவேந்தர்கள் காலத்திலிருந்தே நந் நாட்டில் நூல் நிலையங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இக் காலத்தைப்போல் அக்காலத்தில் காகிதங்களும், அச்சிடும் சாதனங்களும் இல்லாததால் பனை ஏடுகளில் எழுத்தாணி கொண்டு ஒவ்வொரு புத்தகமும் பல நாள் எழுதியே தயாரிக்கப்பட்டு வந்தது. எனவே பாரதம், இராமா



யணம் போன்ற ஒரு பெரிய புத்தகத்தின் ஒரு பிரதியைச் சம்பாதிப்பது எவ்வளவு கடின மென்பதைக் கவனிக்கவேண்டும். ஆதலால், அக்காலத்தில் அரசர்கள் பெரும் பணஞ் செலவிட்டு எழுத்தாளரை நியமித்து, அவர்களை ஆங்காங்கே யனுப்பிவைத்துச் சிறந்த நூல்களின் பிரதிகளை எழுதுவித்து, அவற்றை ஒன்று சேர்த்து நூல் நிலையங்களாகப் பத்திரப்படுத்திக் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் அவற்றைப் படிக்க உதவி வந்தனர். மிகப் பழமையான வேத காலத்தில் புத்தகங்கள் எழுதிவைக்கும் வழக்கம் இருந்திருக்கவில்லை. அதனாலேயே வடமொழி வேத மந்திரங்கள் வாய் மொழியாகவே ஒருவர்க்கொருவர் ஓதப்பட்டு (அத்தியயனம் செய்யப்பட்டு) வந்திருக்கின்றன. அதற்குப் பிற்பட்ட காலத்திலேயே பனை ஓலைகளின் மீதும், மற்றுஞ் சில இலைகளின் மீதும் இரும்பூசிகளைக் கொண்டும், சாயங்களைக் கொண்டும் எழுதும் வழக்கம் ஏற்பட்டது. பௌத்தர்களும், சமணர்களும் பிரபலமடைந்த காலத்தில் அவர்களால் நந் நாட்டில் ஏராளமான நூல்கள் எழுதிவைக்கப்பட்டன நாலந்தா, தக்ஷசிலை, வாரணாசி, மதுரை போன்ற இடங்களில் கல்விச் சங்கங்களும் (யூனிவர்சிடி), நூல் நிலையங்களும் ஏற்பட்டிருந்தன வெனச் சரித்திரம் கூறுகிறது. பிற்காலத்தில் பௌத்த சமய நூல்கள் பல சீனு, ஜப்பான் முதலிய அயல்நாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் மதுரையம்பதியில் விளங்கியிருந்த தமிழ்ச் சங்கங்களையும், அவற்றில் சேமித்து வைக்கப்பட்டிருந்த நூல்களையும்பற்றி கேள்விப்பட்டிராத தமிழர் யார்? கடல் கொண்டதும், வேற்றரசர் கொள்ளை கொண்டதும், சமயச் செருக்காளர் உரு மாய்த்ததுமாகிய காரணங்களால் நந் நாட்டில் பூர்வீக நூல்கள் பலவும் அழிந்து பட்டனவென ஆராய்ச்சியாளர் அறிவிக்கின்றனர். இவ்விபரங்களால் நந் நாட்டில் முற்காலத்தில் அரசர்களாலும், சங்கங்களாலும் நூல் நிலையங்கள் நிறுவப்பெற்று வந்திருக்கின்றனவென அறியலாம் ஆயினும் இடைக்காலத்தில் பல காரணங்களாலும் நந் நாட்டு நூல் நிலையங்கள் அழிந்தன வென்றும், பின்னர் நம் மக்கள் நூல் நிலையங்களின் அவசியத்தை மறந்தன ரென்றும் ஊகிக்கலாம். இன்று ஆங்கிலேயரின் கூட்டுறவால் இந்திய மக்கள், ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் அனுபவங்களைப் பெற்றதன் பலனாய், அந்நாடுகளில் நடைபெற்றுவரும் புத்தகாலய இயக்கத்தின் அவசியத்தையும், பெருமையையும் அறிந்து நந்நாட்டிலும் நூல் நிலைய இயக்கத்தைக் கண்டு வளர்க்க முற்பட்டு வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளின் முன்னேற்றத்தைக் கண்டு நம் மிந்திய நாட்டில் புத்தகாலய இயக்கத்தை ஸ்தாபித்து முதன் முதலில் பயன் பெற முற்பட்டது பரோடா ராஜ்யமாகும். பரோடா கெய்க்வார் மஹா ராஜா அவர்கள் தமது ராஜ்யத்தில் புத்தகாலயங்களை ஒவ்வொரு ஊரிலும் ஏற்படுத்தி, அதன் மூலமாய் மக்களின் அறியாமையை

(அஞ்ஞானத்தை) யொழித்து, அவர்களை மேன்மைப்படுத்த வேண்டி முக்கிய கவனம் செலுத்தி உழைத்துவருகிறார். அப்படியே ஆந்திரர்களும், வங்காளியரும் தம்மிடையில் புத்தகாலய இயக்கத்தை வளர்த்து வருகின்றனர். ஆந்திர தேசத்தார் (தெலுங்கு நாட்டார்) தம் மாகாணத்தில் இத்துறையில் அதிக வேலை செய்துவந்திருக்கின்றனர். ஆந்திர ஜில்லாக்களில் முக்கியமான ஒவ்வொரு ஊரிலும் புத்தகாலய மேற்பட்டிருப்பதைக் காணலாம். தெலுங்கு நாடு முழுதும் ஏற்பட்டிருக்கும் புத்தகாலயங்கள் சுமார் 600-க்கு மேற்பட்டிருக்கின்றனவெனத் தெரிகிறது. அவையனைத்திற்கும் தலைமையாக ஆந்திர மாகாணப் புத்தகாலயச் சங்கம் ஒன்று தோன்றி வேலை செய்துவருகிறது. வருடந்தோறும் அம் மாகாணத்தின் சார்பாக மாகாணப் புத்தகாலய மகாநாடுகள் கூட்டப்படுகின்றன. அதுபோது அவ் வருடத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகளைப் பற்றியும், இனிச் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றியும் ஆலோசித்து முடிவு செய்கின்றனர். ஆந்திர மாகாண மெங்கும் தோன்றியுள்ள புத்தகாலயங்களின் விவரங்களடங்கிய ஜாபிதாவையும் வெளியிடுகின்றனர் அதனால் ஒருவர்க்கொருவர் ஊக்கமும், உற்சாகமுங்கொண்டு மேன்மேலும் வேலை செய்கின்றனர். அவ்வாறு தமிழர்களாகிய நமக்கு அருகாமையில் உள்ள ஆந்திரர்கள் வேலைசெய்து முன்னேறி வருகையில் தமிழகத்தாராகிய நாம் வாளாயிருத்தல் நன்றாமோ? எனவே தமிழர்களும் விழிப்படைந்து தமிழ் மண்டலத்தில் புத்தகாலய இயக்கத்தை ஸ்தாபித்து வேலைசெய்ய வேண்டும். நாமறிந்தவரையில் தமிழ் நாட்டில் சிற்சில இடங்களில் சிலரது முயற்சியால் இரண்டொரு புத்தகாலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அவையும் ஒன்றுக்கொன்று தொடர்பும், ஊக்கமும், உற்சாகமும் இன்றிப் பெயரளவில் நின்று, பொது மக்களுக்குப் பயன்படாமல் காலங் கழிக்கின்றன. இரண்டோராண்டுகளுக்கு முன்னர் சென்னையில் தமிழ் மாகாணப் புத்தகாலயச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. எனினும் அச்சங்கத்தார் நாட்டில் போதிய பிரசாரம் செய்யத் தலைப்பட்டார்களில்லை. புத்தகாலயங்களின் அவசியத்தைப்பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலுமாகச் சில கட்டுரைகளை எழுதுவித்து அச்சிட்டு ஒரு பிரசுரம் வெளியிட்டதோடு வாளா யிருக்கின்றனர். மேலும் அச்சங்கத்தின் சார்பாகத் தமிழ் நாட்டுப் புத்தகாலயங்களில் வைக்கத் தகுந்த புத்தகங்கள் யாவை என ஆராய்ந்து ஒரு அறிக்கை வெளியிடுமாறு ஒரு கமிட்டி நியமித்தனராம். அக் கமிட்டியார் பல மாதங்கள் கழித்து, பாடசாலையில் வைக்கப்பட்டுள்ள இரண்டொரு தமிழ் பாட புத்தகங்களை மட்டும் அதுவரையில் தாம் ஆராய்ந்ததன் பயனாய்ப் புத்தகாலயங்களில் வைக்கத் தகுந்தவையென ஒரு அறிக்கை வெளியிட்டுப் பிற புத்தகங்களைப் பின்னர் ஆராய்வதாக முடிவு கட்டினரெனக் கேள்வியுற்றோம். அத்



19788

துடன் அச்சங்கத்தின் பிற நிகழ்ச்சிகள் வெளியிடக் காணோம். ஏதாயினுமிருப்பின் அறிஞர்கள் தெரிவிப்பார்களாக. மேலும் இவ்விடத்தில் தமிழ் நாட்டின் நலத்தை முன்னிட்டு ஷை மாகாணப் புத்தகாலயச் சங்கத்தாரை நோக்கி இரண்டொரு வினாக்களைக் கிளத்துவாம். 1. உங்கள் சங்கம் இதுகாறும் செய்துவந்துள்ள வேலை யாது? 2. உங்கள் முயற்சியால் எத்தனைப் புத்தகாலயங்கள் தோன்றியுள்ளன? 3. சங்கத்தின் அங்கத்தினரைப் பெருக்கவும், இயக்க வளர்ச்சிக்கும் என்ன முறைகளைக் கைக்கொண்டீர்கள்? 4. இதுகாறும் தமிழ் நாட்டில் தோன்றியுள்ள புத்தகாலயங்களின் விவரங்களைக் காட்டும் ஜாபிதாவைத் தயாரிக்க முற்பட்டீர்களா? 5. புத்தகாலயங்களை ஏற்படுத்த வேண்டிய விதி முறைகளைப்பற்றியும், அவசியத்தைப்பற்றியும் தமிழகத்தாருக்கு எடுத்துக்கூற முயற்சித்தீர்களா? இவைகளுக்குரிய நற்பதிலை (இப் "பாரதி"யின் மூலமாகவும்) வெளியிட முற்படுவார்களாயின் தமிழரின் நன்றிக்குரியவராவர்.

தமிழ் நாட்டில் கிராமப் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தும் இயக்கம் ஒரு சிறிது வேலை செய்துவருகிறது. அதற்கென துரைத்தனத்தார் கௌரவ அங்கத்தினர்களை நியமித்தும், ரெவினியூ அதிகாரிகளை ஊக்கியும், பொருளுதவி புரிந்தும் வேலைசெய்து வருகின்றனர். அதனால் ஆங்காங்கே கிராமங்களில் பஞ்சாயத்து சபைகள் தோன்றி சுகாதாரம், கல்வி, பொதுஜன வசதி முதலிய நன்மைகளுக்கு உழைத்துவருகின்றன. அவ்வித கிராமப் பஞ்சாயத்துகள் சிலவற்றிற்கு வருடந்தோறும் கவர்ன்மெண்டார் புத்தகாலயங்களை ஏற்படுத்துமாறு ஒரு தொகையைச் சில வருடங்களாகக் கொடுத்துவருகின்றனர். அந்தோ, அப்பணம் போகும் போக்கைக் கவனியுங்கள்! ரெவினியூ அதிகாரிகள் குறிப்பிட்ட ஒரு கிராமப் பஞ்சாயத்தாருக்குக் குறுகிய காலத்தில் எனவே பத்துப் பன்னிரண்டு நாட்களுக்குள் சுமார் 50 ரூபாய்களுக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கிக்கொண்டு அவற்றை வாங்கிய விபரத்திற்கு பற்றுச் சீட்டு (Voucher)களை ஒப்புவித்து ஷை தொகையைப் பெற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கின்றனர். போதிய உலகிய லறிவு பெறாத அக்கிராம வாசிகள் (பஞ்சாயத்தார்) தக்க அறிவாளிகளது ஆலோசனையைக் கேட்டுப் பெறுவதற்கும், சென்னைபோன்ற தூரமான இடங்களுக்கு எழுதிப் புத்தகங்களை வரவழைக்கவும் அவகாசமும், காலமும் இல்லாதவர்களாய், உடனே சமீபத்திலுள்ள ஒரு நகரத்துப் புத்தகக் கடைக்குச் சென்று, அக்கடைக்காரனை ஐம்பது ரூபாய்களுக்கு ஏதேனும் புத்தகங்கள் கொடுக்கும்படி கேட்கின்றனர்.

அக்கடைக்காரன் அதுவே தருணமெனக்கொண்டு விற்கமுடியாமல் தன்னிடம் நிலுவையிலிருக்கும் புத்தகங்களை 50 ரூபாய்க்குச் சரிக்கட்டி அனுப்பிவிடுகிறான். தமிழில் வசன நடையைச் சரிவர எழுதவும் படிக்கவும் அறியாத மக்கள் கூடிய ஒரு கிராமத்தில் அப்பஞ்சாயத்தாரால் விலையிலும் உருவிலும் பெரிதாகக் காணப்பட்ட கம்ப ராமாயண(ச் செய்யுள் புத்தக)ம், பாரதம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், சிலப்பதிகாரம், திருக்குறள், நிகண்டு, நீதிச் செய்யுள் திரட்டு, நாலாயிரப் பிரபந்தம், தொல்காப்பியம் விருத்தியுரை, இன்னும் இதுபோன்ற இரண்டொரு புத்தகங்கள் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அப்புத்தகங்களை வைப்பதற்குப் பெட்டியுமின்றி, புத்தகங்கள் பூச்சிகளால் அரிக்கப் பெறுமாறு துணியால் மூட்டை கட்டி வைத்திருந்தனர். அதைப்பற்றி விசாரிக்கையில் அப் புத்தகங்களைப் படிக்கக்கூடியவர்கள் அங்கு ஒருவரும் இல்லை யெனவும், தமிழ் படிக்கத் தெரிந்த சிலருக்கு அந் நூல்களைப் படித்து அர்த்தம் செய்துகொள்ள முடியவில்லை யெனவும், தாசில்தார் ஏதேனும் புத்தகங்களை வாங்குமாறு உத்திரவிட்டபடியால் கடைக்காரனைக் கேட்டு இப் புத்தகங்களை இரண்டு வருடங்களாக வாங்கிவந்தோமெனவும் பணிவாகப் பகர்ந்தனர். இதனால் துரைத்தனத்தார் புத்தகாலய மேற்படுத்துமாறு கிராமத்தாருக்கு உதவிய பொருள் அடைந்த கதியைக் கவனித்தீர்களா? இவ்வாறு கூறியதால் "மேலே கண்ட புத்தகங்கள் அனைத்தும் பயனற்றவை—புத்தகாலயங்களில் வைக்கத் தகுந்தவை யல்ல" என்று கூறியதாகக் கொண்டுவிடாதீர்கள். கிராமத்தின் நிலைமையையும், கிராமவாசிகளின் கல்விப் பக்குவத்தையும் அறிந்து, அவற்றிற்கேற்ப அவர்களுக்குப் பயன்படும் அறிவு நூல்களை வாங்கிவைக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்பதே எமது கருத்து. மேலும் அதிகப் பணத்தைக்கொண்டு இரண்டொரு பெரிய நூல்களை வாங்கி வைப்பதைவிட, சிறு விலையில் அறிவு தரும் சிறிய நூல்கள் பலவற்றை வாங்கி வைப்பது பயன் தரத்தக்கதாகும். மேலும் முக்காற்பங்கு வசன நூல்களாக விருத்தல் கால நிலைக்கு மிக அவசியம்.

தற்காலத்தில் இந்தியப் பொது மக்களுக்கு எவ்விதமான அறிவு தேவை யென்பதை ஆராயவேண்டும். தங்கள் தேச நிலையைப்பற்றியும், தங்கள் சமூக, சமய, அரசாங்க நிலைமைகளைப்பற்றியும், நாட்டுப் பொருளாதார நிலைமையைப்பற்றியும், விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய முறைகளைப்பற்றியும் ஒவ்வொரு நாட்டினரும் முதற்கண் அறிவு பெறவேண்டும். எனவே தமிழ் மக்களுக்கு தேச சரித்திரம், ககோள பூகோள சாத்திரம், பூத பௌதிக சாத்திரம், அரசாங்க முறை, பெரியோர்களின் சரித்திரங்கள், அயல்நாட்டுச் சரித்திரங்கள், விஞ்ஞான சாத்திரப் புது



மைகள், கைத்தொழில்—வியாபார உண்மைகள் முதலியவற்றில் அறிவு தேவை யென்பதை யாரால் மறுக்க முடியும்? ஆதலால் இவைகளில் போதிய அனுபவமும், ஆவலும் ஏற்படக் கூடிய—இலகுவான நடையில் எழுதப் பெற்றுள்ள—நல்ல நூல்களைத் தமிழ் நாட்டுப் புத்தகாலயங்களில் அமைக்க வேண்டுவது இன்றியமையாததாகும். இவற்றுடன் நீதியும், உலகிய லறிவும் தரவல்ல நல்ல கதைப் புத்தகங்களும் தேவையானவையே யாகும். இதைப்பற்றி மற்றொரு சமயம் ஆராய்வோம். பல புத்தகங்களை வாங்கிப் பெட்டிகளில் அழகாக அடுக்கிப் புத்தகாலய மேற்படுத்தி விட்டால் போதாது; அப் புத்தகங்களைக் கிராமத்தாரனைவரும் வாங்கிப் படிக்குமாறு தூண்டவேண்டுவ தவசியம். புத்தகங்களோடு புல மாதப் பத்திரிகைகளையும், தின, வார சமாசாரப் பத்திரிகைகளையும் வரவழைத்து வாசகர்களுக்கு எட்டச் செய்யவேண்டும். பத்திரிகைப் படிப்பில் ஆர்வம் ஏற்படுமாறு தற்கால உலக நிகழ்ச்சிகளைப்பற்றித் தக்காரைக்கொண்டு புத்தகாலயங்களின் சார்பாகப் பொது மக்களைத் திரட்டிவைத்து உபந்நியாசங்கள் புரிவித்தல் வேண்டும்.

நம் மாகாணத்தில் புத்தகாலயங்களை ஏற்படுத்தி நடத்துபவர்களுக்குத் துரைத்தனத்தார் பொருளுதவி (கிராண்ட்) புரிய ஒருப்பட்டு உத்தரவுகள் பிறப்பித்திருக்கின்றனர். அது சம்பந்தமான விபரங்களை அறிய விரும்புபவர்கள் அந்தந்த ஜில்லா கல்வி யதிகாரிகளுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். ஆகவே தமிழகத்தார்கள் ஆங்காங்கே பலர் ஒன்று கூடி தங்களுள் சந்தாக்களைச் சேர்த்தும், துரைத்தனத்தாரின் உதவிகளைப் பெற்றும், ஸ்தல ஸ்தாபனங்களின் சகாயத்தை யீட்டியும் ஒவ்வொரு ஊரிலும் பொதுப் புத்தகாலயமொன் றேற்படுத்தி, அந்த ஸ்தாபனத்தினிடையில் ஜாதி மத வேறுபாடுகளையும், அரசியல் கக்ஷி பேதங்களையும் நுழைய விடாமல், மக்களாகப் பிறந்த ஆடவர், பெண்டிர், சிறியோர், பெரியோர் ஆகிய அனைவருக்கும் அறிவு நலம் வளருமாறு, இலவசமாகவோ, அன்றிச் சொற்ப சந்தாவுக்கோ புத்தகங்களைப் படிக்கக் கொடுத்து நாட்டின் நலத்திற்கு உழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு நீங்கள் செய்யும் முயற்சிகளைப்பற்றி அவ்வப்போது பத்திரிகைகளுக்குத் தெரிவித்துவருவதும் அவசியமாகும். அதனால் உங்களில் ஒரு சிலர் செய்யும் முயற்சிகளைக் கண்டு பிறரும் உற்சாகத்துடன் இத்துறையில் இறங்கி வேலை செய்வதற்கு இடமுண்டாகும்.

தற்போது துரைத்தனத்தார் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு புத்தகாலயங்களுக்கென உதவிவரும் பணம் மேலே நாம் கூறியது போல் சரியான பயனைப் பெறுவதில்லை யாதலால், தாலுகா அதி

# பூமியின் உட்பாகம்.

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B.Sc., (Hons.)

இம்மா பெரும் பூவுலகத்தின் நான்கில் மூன்று பாகம் சமுத்திரத் தண்ணீராலும், பனிக் கட்டிகளாலும் மூடப்பட்டுக் கண்ணுக்குத் தோன்றாமலிருக்கிறது. ஆகவே பூமியின் மேல் பாகத்திலமைந்துள்ள மண், பாறை முதலிய வஸ்துகளைப்பற்றி அவ்வளவு அதிகமாய் நமக்குத் தெரியாமலிருக்கும்போது பூமியின் உட்புறத்திலுள்ள வஸ்துகளைப்பற்றி நமக்கு எவ்வளவு தூரம்

காரிகளின் மேற்பார்வையின் கீழ், ஓரிரண்டு ஆண்டுகளுக்கு அத் தாலுகாவிலுள்ள கிராமப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கும் பணத்தை நிறுத்தி, அதைக்கொண்டு தாலுகா தலைமை நகரில் மாதிரிப் புத்தகாலய மொன்றை ஏற்படுத்தி, அந் நகரிலுள்ள பொது ஜன ஊழியர்கள் சிலரைக்கொண்டு அதை நிர்வகித்து நடத்திவரச் செய்யத் தலைப்படவேண்டும். கிராமவாசிகளில் எவருக்கேனும் தேவையானால் இரண்டொருவர் கூடித் தமக்குத் தேவையான புத்தகங்களை யனுப்பித் தரும்படி கிராமாதிகாரிகளின் மூலமாக செண்டர் தபாலுக்குச் செல்லும் கிராம ஊழியர்களிடம் விண்ணப்பம் கொடுத்தனுப்பித் தாலுகா புத்தகாலயத் தலைவரிடமிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொண்டு, படித்துவிட்டுக் குறித்த தவணைக்குள் அதே முறையில் புத்தகங்களைத் திருப்பிச் சேர்ப்பிக்க வசதி செய்யலாம். அதனால் புத்தகாலயங்களின் பயனும், விதி முறைகளும் கிராமவாசிகளுக்கும் நன்கு விளக்கமாகும். பின்னர் முறைப்படி புத்தகாலயத்தை வைத்து நடத்தக்கூடிய கிராமப் பஞ்சாயத்துகளுக்குப் பொருள் உதவிபுரிய முற்படவேண்டும். இதைப்பற்றி அதிகாரிகள் கவனிப்பார்களாக. பொது ஜனங்களும் ஏற்ற முயற்சிகள் செய்து பயன் பெறுவார்களென நம்புகின்றோம்.

வந்தே மாதரம்.



தெரிந்திருக்க வேண்டுமென்பதைக் கூறுவானேன். பூமியின் உட்பாகத்தை நேரே பார்த்து அறியவேண்டுமென்றால் கிணறுகள், சுரங்கங்கள் முதலியன தோண்டவேண்டும். பூமியை சுமார் ஒரு மைல் தூரத்திற்குமேல் துளைப்பது கூடாமையால் பூமியின் உட்பாகத்தைச் செவ்வனே அறிவது முடியாத காரியமாயிருக்கிறது. பூமியின் ஒருபுறத்திலிருந்து நேராக மறுபுறம் வரையிலுள்ள தூரம் சுமார் 8000 மைல். ஆகவே பூமியின் மத்தியம் சுமார் 4000 மைல் தூரத்திலிருக்கிறது. ஆழமான சமுத்திரத்திலிருந்து வெகு உன்னதமான மலை உச்சிவரை தூரம் சுமார் 12 மைல். இத்தூரம் பூமியின் மத்திய தூரத்திற்கு மிகவும் அற்பமானது. இத் தூரத்தால் பூமியின் உட்பாக அமைப்பை அறிவது கூடாதென்பது கண்கூடு. ஆகவே பூமியின் உட்பாக அமைப்பை நமக்குக் கிடைக்கும் வெளியாதாரங்களால் ஆராயவேண்டியதாகவே யிருக்கிறது.

நாம் பூமியைத் துளைத்துக்கொண்டே சென்றால் 60 அடிக்கு ஒரு 'டிகிரி' (1°F) வீதம் உஷ்ணம் அதிகரித்துக்கொண்டே போகிறது. அப்படியானால் சில மைல் தூரத்தில் பூமியின் உஷ்ணம் கடினமான பாறைகளையும் உருகச் செய்யக்கூடிய தன்மை பொருந்தியதாயிருக்க வேண்டுமல்லவா? அப்படியானால் பூமியின் மத்தியில் நெருப்புத் தழலாயிருக்கவேண்டும். சில மைல் தூரத்தில் அவ்வளவு உஷ்ண மிருப்பினும் பாறைகள் வெகு இலகுவில் உருகிவிடுமென்பது அசாத்தியம். ஏனெனில் பூமியின் மேலுள்ள பாறை முதலியவைகள் அமுக்கிக்கொண்டிருப்பதால் பாறைகள் உருகுஞ் செயலற்றுவிடுகிறது. (The tremendous pressure exerted by the overlying rocks prevents the actual process of melting.) நாம் ஓர் மலை உச்சியில் தண்ணீர் காய்ச்சினால் தகிக்கும் உஷ்ணம் அதிகமில்லாமலே வெகு சீக்கிரத்தில் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கிறது. ஆனால் ஓர் சுரங்கத்தில் காய்ச்சினால் அவ்வளவு இலகுவில் கொதிப்பதில்லை. ஏனெனில் வாயு மண்டலம் பூமியின்மீது தாக்கி அமுக்கிக்கொண்டே யிருக்கிறது. இப்படி அமுக்கும் சக்தி பூமியிலிருந்து மேலே செல்லச் செல்லக் குறைந்துவிடுகிறது. ஆகவே பூமியின் மீது சுமார் 212°F. 'டிகிரி' (or 100°C) உஷ்ணத்தால் தண்ணீர் கொதிக்கிறது. மலை உச்சிகளில் இதற்குக் குறைந்த உஷ்ணத்திலேயே கொதிக்கிறது. இதனால் மலை உச்சிகளில் முட்டைகள் அவிக்க முடியாது. இப்படியே பூமியின் கீழ் உஷ்ணம் அதிகமாயிருப்பினும் மேலே ஏற்பட்ட கனத்தால் பாறைகள் உருக முடியாமலிருக்கின்றன. ஆனால் மேல் பாகத்தின் கனங் குறைந்தோ அல்லது பூமியில் பிளவோ ஏற்பட்டால் கீழ் பாகத்திலுள்ள பாறைகள் திடீரென்று உருகத் தொடங்கிப் பெரும் பிளவுண்டாக்கி அதன் வழியாக மிகுந்த உஷ்ணம் பொருந்திய திராவக

மாக (Lava) வெளிக் கிளம்புகிறது. இதற்கு எரிமலை எனப் பெயர். எரிமலைகள் எவ்விடத்தில் உற்பத்தியாகிறதோ அவ்விடத்திலேயே விட்டு விட்டு உண்டாகின்றன. அநேகமாய் புதிதாக ஏற்படுவதில்லை. பூமியின் கீழ் உஷ்ணத்தால் உருகப்படும் பாறை முதலியவைகள் வெளிக் கிளம்ப ஓர் மார்க்கம் ஏற்பட்டுவிட்டால் அம் மார்க்கத்துக்கே பூமியின் பல பாகங்களிலிருந்து உஷ்ணச் சுவாலையும், தகித்த பாறைக் கற்களும், உருகிய பாறைகளும் வெளிக் கிளம்புகிறது. உஷ்ணத்தாலுண்டானவைகள் யாவும் வெளியேறிவிட்டால் எரிமலை அடங்கிவிடுகிறது. பின்னும் உஷ்ணத்தால் உருகிச் சேர்ந்து சேர்ந்து அதிகரித்துக் கீழிருக்க இடமில்லாத காலத்தில் முன்னால் ஏற்பட்ட துவாரத்தை நாடி வந்து வெகு வேகத்துடன் வெளிக் கிளம்புகிறது: இப்படி அடிக்கடி ஏற்படுவதால் பூமியின் கீழ் பாகத்தின் உறுதியில் தாரதம்மிய மேற்பட்டு உலகத்தில் (முக்கியமாய் எரிமலை பாகங்களில்) ஓர் பக்கம் திடீரென்று உயர்ந்தும் மறு பக்கம் தாழ்ந்தும் விடுவதால் அப் பாகத்தைச் சுற்றி பூகம்பம் ஏற்பட்டு அதின் அதிர்ச்சி தண்ணீரின் அலைகள்போல் நாலாபக்கம் ஓடி தூரத்திற்குத் தகுந்தவாறு அசைவு குறைந்துவிடுகிறது. மேலும் சில பாகங்கள் புதிதாய் உயரப்பட்டோ அல்லது ஆற்று மண்ணால் உண்டாகப்பட்டோ யிருந்தால் அப் பாகம் உறுதியற்றுக் கொஞ்ச காலத்திற்குப் பின் திடீரென்று இறுகி இறங்கிவிடுவதைக்கொண்டு அவ்விடங்களில் பூமியதிர்ச்சி உண்டாவது வழக்கம். இதை விரிக்கில் பெருகும்.

பூமியின் கீழ் ஏற்பட்டிருக்கும் உஷ்ணத்தாலேயே நீர் எழுச்சி ஆங்காங்கு எரிமலைகள்போல ஏற்படுகிறது. மழைத் தண்ணீர் சிறிது சிறிதாக பூமியில் சுரந்து கீழிறங்கிக்கொண்டே யிருக்கிறது. அத் தண்ணீர் வெகு தூரம் சென்றுவிட்டால் பூமியின் உஷ்ணத்தால் தகிக்கப்பட்டு நீராவியாக மாறத் தொடங்குகிறது. தண்ணீர் இப்படி நீராவியாக மாறி அதிகரித்ததும் அதற்கு முன்னிருந்த யிடத்தைவிட அதிக விசாலமான யிடம் வேண்டியதால் பூமியின் கீழ் அங்கு மிங்கும் ஓட முயன்று கடைசியாக பூமியில் மிகவும் இலேசான பாகத்தைப் பிளந்துகொண்டு நீராவியுந் தண்ணீருமாய் வெகு தூரம் மேலே எழும்புகிறது. இவைகள் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்திலும், நியூ ஜீலண்டிலு மிருக்கின்றன. இப்படி மேலெழும்பும் நீரில் ஸ்நானம் செய்தால் அநேக வித நோய்கள் குணப்படுகின்றன.

இப்பொழுது பூமியின் உட்பாகத்து வஸ்துக்களின் தன்மையைப்பற்றி ஆராய்வோம். ஓர் மெல்லிய நூலில் கனமானதோர் இரும்பைக் கட்டி அங்குமிங்கும் அசையும்படி செய்தால் கொஞ்ச



நேரத்திற்கெல்லாம் பூமியின் இழுக்கும் சக்தியால் (Gravitation due to the earth) அதன் ஆட்டம் சிறிது சிறிதாகக் குன்றிக் கடைசியாக நின்றுவிடுகிறது. பூமியின் இழுக்கும் சக்தி அதிகமாயிருந்தால் சீக்கிரம் நின்றுவிடுகிறது; குறைவாயிருந்தால் வெகு நேரம்வரையாடி நிற்கிறது. இதைச் சமுத்திரப் பாகங்களில் அங்குமிங்கும் ஆடச் செய்தால் அதனசைவு கொஞ்ச நேரத்திற்கே நீடித்திருக்கிறது. இதனால் சமுத்திரத் தரை மண் நமது பூமியின் மேலுள்ள மண்ணைவிட அடர்த்தியான (denser)—நெருக்கமான—கனமானதாகத் தெரிகிறது. பூமியின் அதிர்ச்சியைக்கொண்டும் பூமியின் உட்பாகத் தன்மையை ஊகிக்கலாம். பூமியின் ஆட்டத்தைக் குறிப்பிட ஓர் பேனாவைக் கண்டுபிடிக்கவேண்டும். பூமியாடும்போது அதை யொட்டிய எல்லா வஸ்துக்களும் அசைவுறுவதால் அசைவைக் குறிப்பிடும் பேனா மாத்திரம் அசையாமலிருந்தாலன்றி அசைவைக் குறிப்பிட முடியாது. அதற்காக ஓர் மெல்லிய உறுதியான நீண்டதோர் நூலில் ஓர் பெருங் கனமான இரும்பைக் கட்டி, நூலை விரைவாய் அசைத்தால் அந்நூலில் கட்டியிருக்கும் இரும்பு வெகு நேரம்வரை அசையாமலிருக்கும். இப்படித் தொங்கவிட்ட கனமான இரும்பில் ஓர் பேனாவை யமைத்து அப் பேனா ஓர் காகிதத்தைத் தொட்டுக்கொண்டிருக்கும்படி செய்தால் பூமியாடும்போது காகிதம் பூமியோடு ஆடும், அப்பொழுது பூமியாட்டத்தால் அசையாமலிருக்கும் பேனா காகித ஆட்டத்திற்குத் தகுந்தவாறு பாம்பின் கோட்டைப் போன்றதாகக் காகிதத்தில் கீறும். காகிதத்தை ஓர் சுருளில் சுற்றி எப்பொழுதும் ஒரே முகமாய் சுற்றிக்கொண்டிருக்கச் செய்தால் அதைத் தொட்டுக்கொண்டிருக்கும் பேனா ஒரு கோட்டை எப்பொழுதும் கீறிக்கொண்டேயிருக்கும். ஆனால் பூமியாட்ட முண்டானால் காகிதச் சுருளும் திடீரென அசைவுறும். அதனால் பேனா எப்பொழுதும் உண்டாக்கும் நேர்கோட்டை விட்டு அச்சமயம் பாம்புக் கோட்டைப்போல் கீறி அசைவு நின்றவுடன் எப்பொழுதும்போல நேர்கோட்டைக் கீறிக்கொண்டேயிருக்கும். இப் பாம்புக் கோட்டின் நேர் நீளத்தையும் அகலத்தையுங்கொண்டு முன் கணக்குகளைக்கொண்டும் இத்தனாவது மைல் தூரத்தில் இத்தனை மணி நேரம்வரை பூகம்பம் உண்டாயிற்று என்று காட்டமுடியும். இந்தியாவில் இப்படிப்பட்டதோர் இயந்திரம் (Seismograph) பூனாவிலிருக்கிறது.

பூமியின் ஓர் பாகத்தில் உலகத்தையே ஆட்டக்கூடிய பூகம்பம் உண்டானால் அவ்விடத்திலுண்டான அசைவு பல அலைகள்போல் பூமியைச் சுற்றி மறுபுறம் போவதோடு நில்லாமல் பூமியை ஊடுருவியுஞ் செல்லும். ஒரே சமயத்தில் புறப்படும் பூகம்ப அலைகளை உலகத்தில் மறுபுறத்தில் அமைந்த இயந்திரம் குறிப்பிடக் கூடுமா

# பண்டைக்காலத்து தக்ஷசீலா சர்வகலாசாலை.

திரு. A. ராமசாமி அவர்கள்.

## முன்னுரை.

காலச் சக்கரத்தில் எவ்வளவோ விஷயங்கள் அகப்பட்டு மாறுதலடைந்துகொண்டிருக்கின்றன. சில மறைந்தும் போகின்றன. ஜட வஸ்துக்களும், நகரங்களுங்கூட கால நிலைக்கேற்ப மாறுதலும் அழிதலும் அடைகின்றன. உலகத்தில் இவ்வித மாறுபாடுகள் ஏற்படுவது இயற்கையின் விசேஷங்களாம். இவ்வுலகத்தில் மற்றெல்லா நாடுகளைவிட பாரத தேசம் நாகரீகத்தில் தலைசிறந்து விளங்கியதென்று இந்திய தேசத்தின்மீது அபிமானங் கொண்டவர்களால் சொல்லப்படுகின்றது. அவர்கள் அவ்வாறு உரைப்பதற்கு ஆதாரமில்லாமற்போகவில்லை. பெருஞ் செல்வத்திற் றிளைத்தவர்களும் ஒரு

---

ஞல் பூமியை ஊடுருவி வரும் அசைவை முன்னதாகவும், பூமியைச் சுற்றிவரும் அசைவைப் பின்னும் குறிப்பிடும். இயந்திரம் இருக்குமிடத்திற்கும் பூகம்பம் உண்டான இடத்திற்குமுள்ள நேர் தூரத்தையும், பூமியைச் சுற்றிய தூரத்தையும், இருவித அசைவுகளும் இயந்திரத்தை வந்தடைய உண்டான நேரங்களையுங்கொண்டு பூமியின் மேல்பாகத்து மண், தண்ணீரைவிட சுமார் ஆறு பங்கு அடர்த்தியானதாகவும், பூமியின் உட்பாகத்திலமைந்திருக்கும் மண் தண்ணீரைவிட சுமார் ஆறு பங்கு அடர்த்தியானதாகவும் ஆராயப்படுகிறது. பூமியின் உட்பாக அடர்த்தி 'ஸ்டீல்' என்னும் இரும்பு வகையின் அடர்த்தியை ஒத்திருக்கிறது. பூமியின் மத்திக் கருகிலுள்ள வஸ்துக்களின் தன்மை சாதாரண வஸ்துக்களைப் போலல்லாதிருப்பதால் அதின் உண்மையான தன்மை இன்னதென இன்னும் அறியக் கிடக்கிறது. தற்கால சாஸ்திர முற்போக்கு அணுவைக் கடைந்து அதின் அந்தரங்கத்தை அறிவித்திருக்கும்போது பூமியின் உட்பாகத்தின் பூரண இரகசியத்தையும் வெளியிட வெகு நாட்கள் செல்லுமோ?


# "பாரதி"

## ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

| மாலை 4 | ஆங்கீரஸ-ஆடி<br>1932-ஆம் ஜூலை—ஆகஸ்டுமீ | மணி 4 |
| --- | --- | --- |


காலத்தில் பயங்கரமான வறுமையின் வாய்ப்படுவதும், கொடிய வறுமையிலகப்பட்டுத் தவிப்பவர்களும் பிறிதொரு காலத்தில் அளவற்ற செல்வத்திற் கதிபதியாவதும் எப்படி இயல்போ அப்படியே ஒரு காலத்தில் நாகரீகமுற்றிருக்கும் நாடு பிறிதொரு காலத்தில் இயற்கை யுத்பாதங்களாலோ; அராஜகக் கலகங்களினாலோ இழிதன்மை யடைவதும், அநாகரீகக் காட்டுமிராண்டித் தன்மையிலிருக்கும் நாடு மற்றொரு காலத்தில் நாகரீகத்திற் சிறப்புற்று விளங்குவதும் இயல்பேயாம். இயற்கையின் தன்மையையும் காலச் சக்கரத்தின் மகிமையையும் யாரே மறுக்க வல்லார்! "எழுநிலை மாடங் கால் சாய்ந்துக்குக் கழுதை மேய்பா ழாகினும் ஆ கும்." "பெற்றமுங் கழுதையும் மேய்ந்த அப்பாழ் நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்" என்னும் அதிவீர ராம பாண்டியனுடைய இம்மொழிகள் காலச் சக்கரத்தின் மகிமையை விளக்குவனவாயிருக்கின்றனவன்றோ? உலகத்தில் எந்த நாடும் ஒரு காலத்திலிருப்பதைப் போலவே எப்போது மிருப்பதில்லை. கொலம்பஸ் கண்டுபிடிப்பதற்கு முன் அமெரிக்கா இருந்த விடம் தெரியாமலும், ஆங்கிருந்த பொன், வெள்ளிப் பாளங்கள் எவர்க்கும் பயன்படாமலும், ஏதோ சில காட்டுமிராண்டிகளுக்கு மாத்திரம் அந்நாடு இருப்பிடமா யிருந்தது. இப்போது பாருங்கள், உலகத்திலுள்ள நாடுகளுக்கெல்லாம் கைத்தொழிலிலும், வர்த்தகத்திலும் வழிகாட்டிக்கொண்டு அளவற்ற செல்வத்தோடும், இணையற்ற நாகரீகத்தோடும், மதிக்க முடியாத போக பாக்கியங்களை அனுபவித்துக்கொண்டும் அமெரிக்கா சிறப்புற்றுத் திகழ்கின்றது. மத நம்பிக்கையில் தலைசிறந்து கோஷா முறையைக் கடினமாக அனுஷ்டித்துவந்த துருக்கி தேசம் இப்போது முற்றிலும் மாறுபட்டுப் பிறநாடுகள் அதன் பெயரைச் சொல்லவும் பயப்படக்கூடிய அவ்வளவு உன்னத நிலையை யடைந்துவிட்டது. பல வருஷங்களாக கொடுங்கோன்மை நடத்திவந்த ரஷிய சக்கிரவர்த்தி, குடும்பத்தோடு அழிக்கப்பட்டதன்றி அந்நாடு உலகத்திலேயே என்றும் கண்டிராத புதிய மாறுதலை யடைந்திருக்கிறது. இக்காலத்தில் சோவியத் ரஷ்யாவைப்

போலவே தாமும் ஆகவேண்டுமென்று கருதாத நாடுகளில்லை. ஏழைகளுக்கும், கூலியாட்களுக்கும், தொழிலாளிகளுக்கும் ரஷியா என்றாலே ஆசையுண்டாகிறது. நாட்டின் பழைய காலத்து நிலைமையை ஞாபகப்படுத்தக்கூடியதும், முதலாளிகளின் சிறப்பை விளக்குவதும், மூட நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதுமாகிய ஸ்தாபனங்களும், சின்னங்களுமெல்லாம் சோவியத் ரஷ்யாவில் அழிக்கப்பட்டு வருகின்றன. பழைய காலத்துச் சிறப்பை விளக்கிக்கொண்டிருக்கும் பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ ஆலயங்கள் சோவியத் ரஷ்யாவில் இடித்துத் தகர்க்கப்படுகின்றன. மிகப் புராதன காலத்தில் பிரசித்தி யடைந்து விளங்கிய ரோமன் அரசாங்கம் தற்போது இருக்குமிடந் தெரியவில்லை. ஒரு காலத்தில் கல்வியிலும், செல்வத்திலும் திளைத்து இந்தியாவையும் கைப்பற்றப் படையெடுத்து வந்த கிரீஸ் தேசம் தற்போது பத்தோடு பதினொன்றாக இருக்கும்படியாய் விட்டது. பன்னெடு நாட்களாக இருக்குமிடந் தெரியாமல் அடங்கி யொடுங்கிக் கிடந்த ஜப்பான் தேசம் தற்போது புத்துணர்ச்சி பெற்று எந்த தேசத்தின்மீது பாய்ந்து கைப்பற்றலாமென்று எண்ணமிட்டுக்கொண்டு கலகம் விளைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அரசாங்க மாறுதல்க ளேற்படும்போதாவது; இயற்கை யுத்பாதங்கள் நேரிடும்போதாவது நாட்டின் நிலைமை மாறுபடுவது இயல்பேயாம். நமது இந்தியாவும் பண்டைக்காலத்தில் சீரும் சிறப்புமுற்றுத் திகழ்ந்த தென்பதை சரித்திர ஆராய்ச்சியால் அறியக் கிடக்கின்றது. மேல்நாட்டு மக்கள் காட்டுமிராண்டிகளாயிருந்த காலத்திலேயே இந்தியா நாகரீகத்திலும், செல்வத்திலும் சிறந்து, கல்வியிலும், அறிவிலுங்கூட மேம்பட்டு விளங்கிய தென்பதற்கு அநேக ஆதாரங்க ளிருக்கின்றன. புத்த மதம் இந் நாட்டிற் பரவியிருந்த காலத்தில், மலைப் பாறைகளில் பலவித சித்திர வேலைப்பாடுகளுடன் குடைந்து உண்டாக்கப்பட்ட பௌத்த விஹாரங்கள் இந் நாட்டின் பூர்வீக நாகரீகத்தை விளக்குவனவா யிருக்கின்றன. ஆரியர் மத்திய ஆசியாவினின்றும் இந் நாட்டிற்கு வருவதற்கு முன் தொடங்கி இந் நாட்டு மக்கள் எழுநிலை மாடங்களோடு வசித்திருந்தனரென்று ஆராய்ச்சியாளர் பல ஆதாரங்களோடு துணிந்து கூறுகின்றனர். ஆரியர் இந் நாட்டிற் குடியேறி பௌத்த மதம் தோன்றுவதற்கு முன் தங்கள் கொள்கைகளை நிலைநாட்ட அவர்கள் செய்துவந்த காரியங்களும் அளவிறந்தன. அந்தப் பண்டைக் காலத்தில் பல ஸ்தாபனங்கள் ஆரியரின் கொள்கைகளை விளக்கிக் கொண்டிருந்தன. அவ்வித ஸ்தாபனங்களில் "தக்ஷசீலா" (Taxilla) சர்வகலாசாலையும் ஒன்று.

## தக்ஷசீல நகரத்தின் நிலைமை.

பண்டைக் காலத்தில் தக்ஷசீலா நகரம் மிகவும் புகழ் பெற்று விளங்கியது. அக்காலத்தில் இந் நகரம் இந்தியாவின் வடமேற்குப்



பிரதேசங்களுக்கு இராஜதானியாயிருந்தது. இந்தியாவிற்கு வெளிநாடுகளிலிருந்து வரக்கூடியவர்களும், இந்நாட்டிலிருந்து மத்திய ஆசியா, பெர்ஷியா முதலான விடங்களுக்குப் போகக்கூடியவர்களும் இந்தத் தக்ஷசீலா நகரத்தின் வழியாகவே போக்கு வரவு செய்யக்கூடியவர்களாயிருந்தனர். இதனால் அந் நகரம் அக்காலத்தில் வர்த்தகத்திற்கும், அயல்நாட்டுப் போக்கு வரவுக்கும், அரசியல் விவகாரங்களுக்கும் பேர் பெற்றதாயிருந்தது. மேலும் இராஜதானித் தலைநகரமா யிருந்தபடியால் பகைவர் எவரேனும் வடமேற்குத் திசையினின்றும் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோதிலும் அஃது அவர்களை யெதிர்த்து முறியடித்துத் துரத்திவிடத்தக்க ஆற்றலும் கொண்டு விளங்கியது.

கி. மு. நான்காவது நூற்றாண்டில் லக்ஷத்து இருபதினாயிரம் படைவீரர்களுடன் அலெக்ஜாண்டர் வந்து புகுந்து போர்புரிவதற்கு முன்பு அந் நகரத்தை எவரும் எதிர்த்ததில்லை. அவ்வளவு போராற்றல் படைத்திருந்த தக்ஷசிலா நகரம் தற்போது உருவழிந்து கிடக்கின்றது. பஞ்சாப் மாகாணத்திலுள்ள ராவல்பிண்டி யென்னும் நகரத்திற்கு 20 மைல் தூரத்தில் இந்தத் தக்ஷசிலா நகரமிருந்தது. அரசியலாரின் பழங்காலத்துச் சின்னங்களின் ஆராய்ச்சியாளரால் அந்தப் பிரசித்தி பெற்ற பழைய நகரத்தின் மண்டபங்களும் சிதிலமடைந்த உப்பரிகைகளும் தற்காலத்தில் வெளிப்படுத்தப்படுகின்றன. பிரசித்தி பெற்ற பண்டிதராகிய "ஸர். ஜான் மார்ஷல் என்பவர் அவ்விடத்தைப்பற்றிச் சிறப்பாகக் கூறியிருக்கிறார்.

## கலாசாலை விளக்கம்

இந்தத் தக்ஷசிலா நகரத்தில் கீர்த்தி வாய்ந்த சர்வகலாசாலையொன்று நடைபெற்று வந்தது. இச் சர்வகலாசாலையானது கி. மு. 7-வது நூற்றாண்டுக்கு முன்பே ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் இந்தச் சர்வகலாசாலை இந்தியாவுக்கு மாத்திரமன்றி வெளிநாடுகளிலிருந்து வரக்கூடிய மாணவர்களுக்கும் தாயகமாயிருந்ததாகத் தெரிகின்றது. தற்போது இச் சர்வகலாசாலையைப்பற்றிய முழு விவரங்களையும் நன்றாக அறிய முடியவில்லை; ஆயினும் அதைப்பற்றி யாமறிந்த சிற்சில விஷயங்களே அதன் உயரிய நிலையை விளக்கக்கூடியவையாயிருக்கின்றன. பௌத்த மத சம்பந்தமான சரித்திரங்களில் தக்ஷசிலா நகரத்தினுடைய சமூக நிலை, செல்வ நிலை, அரசியல் நிலை முதலியவற்றைத் தெரியப்படுத்தக்கூடிய செய்திகள் அகப்படுகின்றன. இவற்றால் அந் நகரத்தின் சர்வகலாசாலையைப்பற்றியும் சிறிது அறிந்து கொள்ளக்கூடியதாயிருக்கிறது; பழங் காலத்துப் பிரயாணிகளும், சரித்திராசிரியர்களும் தக்ஷசிலா நகரத்தைப்பற்றிப் பலவிதமாகக் கூறியிருக்கின்றனர். அவர்தம் மொழிகளில் சர்வகலாசாலையைப்பற்றிய வர்ணனைகளும் ஆங்காங்கு தென்படுகின்றன. மேலும் அச் சர்வகலாசாலை

யினின்றும் பயின்று வெளிப்பட்ட பண்டிதர்களாலும் அதன் பெருமை வெளியாகின்றது. இந்தியாவைப்பற்றி நன்கு அறிந்துகொள்வதற்கு சரித்திர ஆதாரத்தைத் தேடும்போது அநேகமாக கி. மு. ஐந்தாவது நூற்றாண்டு முதல், அதாவது கௌதம புத்தர் காலத்திற்கு இப்பால் தொடங்கி அறியக்கூடிய விரிவான விஷயங்களைப்போல் புத்தருக்கு முற்பட்ட காலத்தின் நிகழ்ச்சிகளை அவ்வளவு விஸ்தாரமாகவும், தெளிவாகவும் அறிய முடியவில்லை. இதனால் புத்தருக்கு முற்பட்ட காலத்தை இருண்ட காலமென்று சொல்லவேண்டி யிருக்கிறது. ஆகையினால் புத்தர் காலத்திற்கு முன்னரே ஏற்பட்ட தக்ஷசிலா சர்வகலாசாலையின் விவரங்களை மேலே கூறப்பட்ட பலவித ஆதாரங்களைக் கொண்டே அறிந்துகொள்ளக்கூடியதா யிருக்கிறது. ஆரியரின் உண்மையான நிலைமையை யறிந்துகொள்வதற்கு தேச சரித்திரத்தில் போதிய ஆதாரம் கிடைப்பதரிது. சரித்திரத்திற்கு முற்பட்ட வேதங்களையும் அது சம்பந்தமான பிறவற்றையும் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறு ஆராயுமிடத்து ஆரியரின் கொள்கைகளை நிலைநாட்டத்தக்க அநேக ஆதாரங்கள் தென்படும். நிற்க,

தக்ஷசிலா சர்வகலாசாலை ஆரியர்களின் கொள்கைகளை நிலை நாட்டக்கூடிய பிரசித்தமான ஸ்தாபனங்களில் ஒன்று என முன் குறிப்பிட்டோம். இக் கலாசாலையில் கற்பிக்கப்படும் விஷயங்களில் வேதம், சாஸ்திரம், ஆயுர்வேதம், சிற்பம், சித்திரக்கலை, அரசநீதி, வில்வித்தை முதலானவை முக்கியமானவையாம். கற்கும் மாணவர்கள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், மற்றும் வேறுசில வகுப்பினராம். ஆனால், சண்டாளர் எனப்பட்ட தீண்டாதா ரென்றுரைக்கப்படும் வகுப்பினருக்கு மட்டிலும் அச் சர்வகலாசாலையில் இடங்கிடையாது! இதனால் தீண்டப்படாதாரெனப்பட்ட மக்கள் எவ்வளவு காலமாக ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறார்களென்று உணர்ந்துகொள்ளலாம்! அக் கலாசாலையின் ஆசிரியர்கள் திறமை வாய்ந்தவர்களா யிருந்தது மன்றிப் பல்வேறு விஷயங்களைப் போதிப்பதற்குப் பல்வேறு கட்டிடங்களு மிருந்தன. ஒவ்வொரு ஆசிரியரிடத்தும் நூற்றுக் கணக்கான மாணவர்களிருப்பார். இவருக்குத் துணையாக ஒவ்வொரு உதவி யாசிரியரும் இருப்பதுண்டு. வடமொழிக்கு இலக்கணம் வகுத்த "பாணினி" முனிவர் இந்தத் தக்ஷசிலா நகரத்தை யடுத்து வசித்துவந்தார். அதனால் பாணினி முனிவரும் இக் கலாசாலையின் ஆசிரியர்களில் ஒருவரா யிருந்திருக்கவேண்டும். இராஜரீக விஷயங்களுக்கும், போர்க்கல்விக்குங்கூட அங்கு ஆதாவிருந்தபடியால், கோசல தேசம், மகததேசம் முதலிய விடங்களிலிருந்தும் அநேக இராஜ குமாரர்கள் அக் கலாசாலைக்கேகிப் பயின்று வந்தனர். இவ்வாறாய் அரசகுமாரர் நூற்றுக்கணக்கானவர்கள் ஆங்கு பயின்று வந்தபடியால் அரசகுமாரர்களுக்குத் தனிமையாகப் பாடங்கள் நடத்தவும்



ஒரு பிரிவு அக்கலாசாலையில் இருந்ததாகத் தெரிகிறது. மேற்கூறப்பட்ட அரசகுமாரர்களேயன்றி காசி, உஜ்ஜயினி, மகதம், சிந்து முதலிய பிரதேசங்களி லிருந்தும், ஈரான், மத்திய ஆசியா முதலிய விடங்களிலிருந்தும் மாணவர்கள் அக் கலாசாலைப் பயிற்சியைப்பெற வந்துகொண்டிருந்தனர். அச் சர்வகலாசாலையில் பயிற்சிபெறும் மாணவர்கள் பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொண்டே தீரவேண்டுமென்பது முக்கியமான நிபந்தனை: அக்காலத்திலிருந்த சிறந்த முறைகளில் இஃதும் ஒன்று.

## வகுப்புகள்

சர்வகலாசாலையில் பயிற்சி பெறும் மாணவர்கள் மூன்று பிரிவினராயிருந்தனரெனத் தெரிகிறது.

1. பயிலும் காலத்திலேயே காணிக்கைகளையும் இதர செலவுகளையும் அவ்வப்போது செலுத்திப் பயிலக் கூடியவர்கள். 2. பயிற்சியெல்லாம் பெற்ற பின்னர் இல்லத்திற் கேகும்போது குரு காணிக்கை முதலியவற்றைச் செலுத்திவிட்டுப் போகக்கூடியவர்கள். 3. சரீர உழைப்பையே காணிக்கையாக ஒப்படைத்துக் கல்வி பயிலக் கூடியவர்கள். இவர்களில் முதலாவதாகக் கூறப்பட்டவர்கள் எப்பொழுதும் ஆசிரியரிடத்திலேயே வசித்து வருபவர்கள். கலாசாலையிலேயே இவர்களுக்கு சாப்பாட்டு வசதியும், இருப்பிடமும் ஏற்பட்டிருக்கும். கலாசாலை வகுப்பில் மாத்திரமன்றி தனிமையாகப் பயிற்சி பெறக்கூடிய வசதிகளும் இவர்களுக்குண்டு. ஆசிரியர்களும் இவர்பால் மிகவும் அன்போடு இருப்பர். இந்த தர்ஜாவில் அநேகமாக அரச குமாரர்கள்தான் இருந்துவந்தனர். இரண்டாவது தர்ஜாவில் உள்ளவர்களில் ஆயுட்கால முழுதும் கல்விப் பயிற்சியிலேயே கழிக்கக் கூடியவர்களும் இருப்பதுண்டு. இவர்களின் பயிற்சிச் செலவுத் தொகைகளை இறுதியில் கொடுப்பதாக வாக்களித்து இவர்கள் பயில்வர். இவர்களும் முதல் வகுப்பினரைப்போலவே கலாசாலையிலேயே வசிக்கக்கூடியவர்கள். கடைசி வகுப்பினர் பகலெல்லாம் கஷ்டப்பட்டு உழைத்துவிட்டு இரவில் மட்டும் கலாசாலைப் பயிற்சி பெறக்கூடியவர்கள். இவர்களில் பெரும்பாலோருக்குக் கலாசாலையிலும், ஆசிரியர்களின் இல்லங்களிலும் வேலை யகப்பட்டுக்கொண்டிருக்கும். இவர்கள் கலாசாலையில் மாத்திரமன்றி அநேகமாக நகரங்களில் வசிக்கக் கூடியவர்களாகவே யிருப்பர். மேலும் பயிற்சி பெறும் மாணவர்கள் ஊக்கமும் உறுதியுங் கொண்டவர்களா யிருந்தாலன்றிக் கலாசாலையில் இடமோ, சகாயமோ பெற முடியாது. மாணவர்களின் ஆசாரத்தையும் நடத்தையையும் அனுசரித்தே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. முறைப்படி நடவாத மாணவன் தண்டனையு மடைவதுண்டு. மாண

வர்களின் அறிவுக் கேற்றவாறு பயிலும் கல்வியும் அதிகமும், குறைவுமாகப் போதிக்கப்பட்டுவந்தது. மாணவர்களின் பயிற்சி முடிந்தவுடனே தேச யாத்திரை செய்யவேண்டியது அவசியமாகவும் கருதப்பட்டு வந்தது.

## கலாசாலையின் பெருமை

இச் சர்வகலாசாலையில் ஆயுர்வேதமும் கற்பிக்கப்பட்டு வந்ததெனக் கூறியிருக்கிறோம். இக் கலாசாலை யிருந்த காலமனைத்தும் ஆயுர்வேதத்தில் இணையற்ற புகழ் படைத்திருந்தது. பிரசித்திபெற்ற ஆயுர்வேத வைத்திய நூல்களை யெழுதிய "சரகர்" என்னும் ஆசிரியரும் இச் சர்வகலாசாலையில் பயின்றவர்தான். இக் கலாசாலையில் ஏழு வருஷம் இவர் வைத்திய நூற்களைக் கற்றனரெனத் தெரிகிறது. கடைசியில் சரகரைப் பரீக்ஷிப்பதற்காக அவருடைய ஆசிரியர் தக்ஷசிலா நகரத்திலுள்ள ஸ்தாவரங்களில் வைத்தியத்திற்கு உதவாத ஒரு பூண்டாவது, கொடியாவது இருந்தால் தேடிக் கொண்டுவரும்படியாக உத்திரவிட்டபோது சரகர் அவ்வாறே தேடிப்பார்த்து முடிவில் பயனற்ற பொருள் ஒன்றுமே யில்லையெனக் கண்டு ஆசிரியரிடம் திரும்பினராம். இதனால் வைத்திய முறையில் அந் நகரம் எவ்வளவு உயரிய மூலிகைகளைக் கொண்டு விளங்கினதென்பது வெளியாகின்றது. புத்தர் காலத்திலிருந்த பிந்துசார மஹாராஜாவின் சமஸ்தான வைத்தியராகிய "ஜீவகன்" என்பவரும் இக் கலாசாலையிலேயே வைத்திய சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டார். மற்றும் ஆத்ரேய மகரிஷியும் இங்கு ஆசிரியராயிருந்ததாகத் தெரிகிறது. இந்தியாவில் பண்டைக் காலத்தில் வடமொழியில் முதன் முதல் பொருளாதார நூலை யெழுதியவரும், சந்திரகுப்தனுக்கு ராஜ தந்திரங்களைக் கற்பித்து கிரேக்கர்களிடம் அகப்படவிருந்த இந்தியாவைச் சந்திரகுப்தன் மூலமாகத் தப்புவித்த சாணக்யரும் இந்தச் சர்வகலாசாலையின் ஆசிரியரில் ஒருவராவர். இவ்வாசிரியர்களும், மாணவர்களும் பற்பல காலங்களில் இச் சர்வகலாசாலையில் இருந்து வந்தவர்கள். இதுகாறும் கூறப்பட்டு வந்தவையெல்லாம் பல வருஷங்களுக்கு முன் தொடங்கி கி. மு ஐந்தாம் நூற்றாண்டுவரை நடைபெற்று வந்த விஷயங்களின் சுருக்கமாம். இதன் பிறகு இச் சர்வகலாசாலையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அதாவது ஆரியர்தம் கொள்கைகளுக்கு இக்காலம் முதல் அழிவு ஏற்படத் தொடங்கிவிட்டது என்பதாம்.

## பௌத்த மதத் தோற்றம்

மகத தேசாதிபதியாகிய சந்திரகுப்த சக்கரவர்த்தியின் குமாரனாகிய பிந்துசார மகாராஜா புத்தர் காலத்தவராயினும் தாம் புத்தரிடம் அபிமானம் மாத்திரம் வகித்திருந்தாரே யன்றி அவருடைய கொள்கைகளைப் பின்பற்றவில்லை. பிந்துசாரரால் யாகத்தின் பொருட்டுத் தருவிக்கப்பட்ட ஆட்டு மந்தையின் கூடவே சென்ற புத்தர் ஜீவகாருண்ய விஷயமாக எடுத்தியம்பிய இரக்கமான மொழிகளைக் கேட்டு மனமுருகி யாகத்தின் காரணமாகக் கொல்லப்பட விருந்த ஆடுகளையெல்லாம் அன்று முதல் கொல்லாமல் விட்டுவிட்ட அந்தப் பிந்துசார மகாராஜா புத்தருடைய உபதேசங்களில் பற்றுக்கொண்டவரா யிருந்த போதிலும், தம் முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டுவந்த ஏனைய ஆரிய தர்மங்களை யெல்லாம் திடீரென்று ஒருமிக்க விட்டொழித்து புத்த தர்மங்களைத் தழுவிக் கொள்ள முடியாதவராயிருந்தார். ஆனால் பிந்துசாரருடைய குமாரனாகிய அசோகர் ஆரிய தர்மங்களை அடியோடு புறக்கணித்து பகிரங்கமாக புத்த தர்மங்களைக் கைக்கொண்டு விட்டார். இது மட்டிலுமல்ல, தாம் பட்டத்திற்கு வந்த பதினெட்டாவது வருஷத்தில் புத்த தர்மத்தை இராஜாங்க மதமாகச் செய்துவிட்டார். இப்படிச் செய்ததுமாத்திரமன்றித் தன்னுடைய இராஜதானியில் புத்த தர்மங்களைப் பிரசாரம் புரிவித்தும், மற்றும் பௌத்த பிரசாரர்களை இந்தியாவின் வேறு பல பாகங்களாகிய சேர, சோழ, பாண்டிய, கேரள, காஷ்மீர, நேபாள முதலாகிய நாடுகளுக்கெல்லாம் அனுப்பி ஆங்காங்கு பௌத்த தர்மங்களை நிலை நாட்டினார். மற்றும் தன்னுடைய சகோதரராகிய "மாஹிண்டோ" (Mahindo) என்பவரையும் சகோதரராகிய ஸங்கமிட்டா (Sangamitta) என்பவரையும் சிலோனுக்கு அனுப்பி அந்நாட்டில் பௌத்த தர்மங்களை ஸ்தாபித்தார். அசோகருடைய பௌத்த சங்கங்கள் இந்தியாவுக்கு வெளிநாடுகளிலும் சென்று பிரசாரம் புரிந்தன. இதனால் அக்காலத்தில் (கி மு. 263 முதல் 223-வரை) நாடெங்கும் ஆரியரின் கொள்கைகள் அழிக்கப்பட்டுப் பௌத்த தர்மங்கள் நிலைகொள்ளலாயின. அசோகராலும், அவருக்கு முன்னும், பின்னும் இருந்த வேறுபல அரச பரம்பரைகளாலும் ராஜரீகமதமாகச் செய்யப்பட்ட பௌத்த தர்மங்கள் கி. மு. 315 முதல் கி. பி. 436 வரையில் நன்கு வேலைசெய்துவந்தபடியால் இதனிடையில் அகப்பட்ட தக்ஷசிலா சர்வகலாசாலையும் முற்றிலும் பௌத்த தர்மங்களுக்கு உறைவிடமாக மாறிவிட்டது.



## கலாசாலையில் பௌத்தம்

தக்ஷசிலா நகரம் இந்தியாவின் வடமேற்கு மாகாணத்திற்குத் தலைமை நகரமாயிருந்ததெனக் கூறியிருக்கிறோம். அசோகருக்குப் பிற்காலத்தில் பௌத்த மதம் நன்கு வேரூன்றிய காலத்தில் அவ்வடமேற்கு மாகாணத்திற்கு "கனிஷ்கர்" (Kanishka) மகாராஜாவாயிருந்தார். கனிஷ்கருடைய ராஜ்யம் ஆப்கானிஸ்தானம் உட்பட பஞ்சாப், சிந்து, காஷ்மீர தேசங்களில் பரவியிருந்ததுமன்றி தான் காஷ்மீரத் தரசனாகவும் ஏனைய தேசங்களின் சக்ரவர்த்தியாக

வும் விளங்கினார். இவருக்கு புத்த தர்மங்களில் அதிகப் பற்றுண்டாகி அசோகரைப் போலவே தமது ராஜ்யத்தில் பிரசாரம் புரிவித்துத் தமது நாட்டை பௌத்த மயமாக்கிக்கொண்டார். கனிஷ்கர் காலத்தில் பௌத்த தர்மங்கள் தலைசிறந்து விளங்கி, அக்காலத்தில் இந்தியாவின் வடக்கிலும், வடமேற்கிலும் பௌத்த தர்மங்களைப் பரப்புவதற்கு ஆங்காங்கு தலைமை ஸ்தானங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் தக்ஷசிலாவும் ஒரு தலைமை ஸ்தானமாயிற்று. இதனால் இதிலிருந்த சர்வகலாசாலையைப்பற்றி அதிகமாகக் கூற வேண்டியதில்லையன்றோ? "ஹெவெல்" பண்டிதர், "பௌத்த மதக் கொள்கைகளைப் பரப்புவதற்கு தக்ஷசிலாவும் அதன் சர்வகலாசாலையும் முக்கியமான தலைமை ஸ்தானமாயிற்"றென்று கூறியிருக்கிறார்.

## சிற்ப விசேஷம்

இவ்வாறு புத்த மதம் வளர்ச்சியுற்றிருந்த காலத்தில்தான் தக்ஷசிலா சர்வகலாசாலையானது சிற்பக் கலைக்குப் பிரதானமான ஸ்தானமெனப் பெயர் பெற்றது. சிற்பக் கலையில் "காந்தார சிற்பம்" என்பது ஒரு புதுமாதிரியான சிற்பமெனக் கூறப்படுகிறது. இச் சாம்பிரதாயமுள்ள சிற்பமானது இந்தத் தக்ஷசிலா சர்வகலாசாலையினின்றுமே தோன்றியது. இவ்வித சிற்பக் கலை வளர்ச்சிக்குப் பௌத்த மதம் மிகவும் துணை புரிந்தது. கனிஷ்க மகாராஜாவின் காலத்தில் இந்தியாவுக்கும் கிரீஸ், சீனா, ரோமாபுரி முதலிய வெளிநாடுகளுக்கும் போக்கு வரவிருந்தது. இதன் பயனாக அச் சர்வகலாசாலையில் சீனர்களுடைய கொள்கைகளும், ரோமன் தேசத்து வர்த்தக சம்பந்தமான விஷயங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததன்றி வெளி தேசத்துச் சிற்பக் கலைகளைத் தன்னிடம் கொண்டும் தன்னிடத்துண்டான புது முறையான சிற்பத்தை வெளிநாடுகளுக் கறிவித்தும் வருவது வழக்கமாயிருந்தது. இதனால் அந் நாடுகளுங்கூட இந்தியாவைப்போலவே சிற்பக் கலைகளிற் சிறந்து விளங்கலாயின. தக்ஷசிலா சர்வகலாசாலையின் இப்புது முறையான சிற்பக் கலை வளர்ச்சியினால் இந்தியாவுக்கே சிற்பத்தில் பெருமையும் மிக மதிப்பு முண்டாகி, அக் கலை நாடெங்கும் பரவலாயிற்று. தக்ஷசிலா பட்டணமிருந்த இடத்தில் இப்போதும் காந்தார சிற்பங்களைக் காணக்கூடியதா யிருக்கிறது. அவை அழகு பொதிந்தவையாயும், மனோகரமாயு மிருக்கின்றனவாம். உலகத்தில் சிற்பக் கலைகளில் தேர்ச்சிபெற்ற மேதாவிகளுங்கூட அச் சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்து புகழ்கிறார்களென்றால் இனி அக் கலையின் பெருமையைப்பற்றி வேறென்ன கூறமுடியும்! இவ்வுயரிய பெருமை வாய்ந்த சிற்ப விளக்கங்கள் இன்று கல்கத்தா, பாரீஸ், லண்டன், பெர்லின் முதலிய நகரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன.



வாம். இவ்விதக் கலை வளர்ச்சியினால் அந்தத் தக்ஷசிலா நகரத்திற்கும், சர்வகலாசாலைக்கும் அழியாத கீர்த்தி யுண்டாயிற்று. இவ்வாறு புத்த மதம் சிற்பக் கலையை வளர்ச்சியுறச் செய்ததுமன்றி நாட்டின் பல விடங்களில் காசி, நலந்தா, விக்ரமசிலா முதலான நகரங்களில் சர்வகலாசாலைகளையும் ஏற்படுத்தியிருந்தது.

## கலாசாலையின் அழிவு காலம்

கனிஷ்க சாம்பிராஜ்யத்தில் இவ்வாறு சீரும் சிறப்புமுற்றிருந்த பௌத்த மதமும், தக்ஷசிலா சர்வகலாசாலையும் கனிஷ்க வம்சத்து அரசாங்கம் அழியத் தொடங்கியது முதல் அவையும் அழியத் தொடங்கின. கனிஷ்க வம்சம் அழிந்த பின்னர் வட இந்தியா முழுவதிலும் அராஜகம் தலைகாட்டத் தொடங்கியது. தேசத்தை க்ஷேமகரமாகவும், அமைதியாகவும் நடத்தக்கூடிய திறமையாளர் எவரும் இல்லாராயினர். கனிஷ்க வம்சம் முற்றிலும் பர்பேரியர்களால் (Barbarians–குப்தர்கள்) அழிக்கப்பட்ட பின்னர், மேலே கூறியபடி தேசம் நிலைகொள்ளாமல் அவதிப்பட்டது. அன்றியும் இந்தியச் சிற்றரசர்கள் தமக்குள் ஒற்றுமையின்றிக் கலகங்கள் விளைவித்துக்கொண்டிருந்தனர். இக்காலத்தில் தேசத்தில் எங்கும் கலகங்களும், கொலைகளும், கொள்ளைகளுமாகவே யிருந்திருக்கின்றன. கனிஷ்க வம்சம் அழிக்கப்பட்டுச் சற்றேறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு குப்த அதாவது பர்பேரிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் பிறகுதான் நாட்டில் அமைதி யேற்படத் தொடங்கியது. கி. பி. நான்காவது நூற்றாண்டின் துவக்கத்தில் குப்த ராஜ்யத்திற்கு ஆதிக்கமேற்பட்டபோது அரசாங்கத் தலைமை நகரங்கள் மாற்றமடைந்தன. புருஷபுரம், தக்ஷசீலம் ஆகிய நகரங்களுக்குப் பதிலாக பாடலீபுத்ரமும்=பாட்னா, காசி நகரமும் தலைமை நகரங்களாயின. குப்த ராஜ்யம் நிலைகொண்ட பின்னர் பௌத்த தர்மங்களுக்கு அழிவும் ஆரிய தர்மங்களுக்கு ஆதிக்கமும் ஏற்படத் தொடங்கிவிட்டது. தக்ஷசிலா நகரத்தின் தலைமை ஸ்தானமும் மாறிப் பௌத்த தர்மங்களும் அழிக்கப்பட்டபடியாலும் கனிஷ்க வம்சம் அழிக்கப்பட்டு குப்த ராஜ்யம் நிறுவப்படும்வரையில் நாட்டில் ஏற்பட்டிருந்த அராஜகக் கல்லோலங்களாலும் தக்ஷசிலா சர்வகலாசாலையும் தலைகாட்ட முடியாமற்போயிற்று. ஆகவே நாட்டில் ஏற்பட்ட அராஜகக் கல்லோலங்களே அச் சர்வகலாசாலையின் அழிவுக்குக் காரணமாயும், தக்ஷசீலம் தலைமை நகரமாகாமல் ஒழிந்ததே அச் சர்வகலாசாலையின் புனருத்தாரணத்திற்கு வழியில்லாமலும் இருந்துவிட்டது. பௌத்த தர்மங்களுக்கும், சிற்பக் கலை வளர்ச்சிக்கும் இருப்பிடமாயிருந்த அந்தத் தக்ஷ

சிலா சர்வகலாசாலை இவ்வாறு உருத் தெரியாது அழிந்துவிட்டதாலேயே சீன தேசத்து பௌத்த யாத்திரீகராகிய பாஹியான் (Fae-Hi-an) கி. பி. 400-ல் இந் நாட்டிற்கு வந்தபோது அந்தத் தக்ஷசீலத்தைப்பற்றி அவரால் ஒன்றும் சொல்ல முடியாமற்போய்விட்டது. கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் வேறு பலர் இந் நாட்டிற் புகுந்து தக்ஷசீலத்தைக் கைப்பற்றினர். ஆனால் அவர்களுக்குப் புத்த தர்மங்களின்மீது வெறுப்பும் சகிப்பற்ற தன்மையு மிருந்தபடியால் வட இந்தியாவிலிருந்த பல பௌத்தர்களால் ஏற்படுத்தப்பட்ட சர்வகலாசாலைகளையும், நகரங்களையும் அழித்து நாசமாக்கினர். கி. மு. பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்த பௌத்த தர்மங்களால் சித்திரக் கலையில் சிறந்து விளங்கிய அந்தப் புராதன சர்வகலாசாலை இவ்வாறு கி. பி. மூன்றாவது நூற்றாண்டில் உருத் தெரியாமல் மறைந்தது.

## முடிவுரை

தேசத்தில் அமைதியும் நல்ல அரசாங்கமும் கெடுமானால் இவ்வித நஷ்டங்கள் ஏற்படுவது சகஜம். தக்ஷசிலா சர்வகலாசாலையேயன்றிப் புராதன காலத்தில் இன்னும் எவ்வித உயரிய ஸ்தாபனங்களிருந்தனவோ சரிவர அறியக்கூடவில்லை. ஆனால் எவ்வித ஸ்தாபனம் எப்படி யழிந்தபோதிலும் சிறப்ப விசேஷங்கள் நிறைந்த சில இடங்கள் மாத்திரம் இன்றும் அக்காலத்துப் பெருமையை விளக்கிக்கொண்டிருக்கின்றன. பௌத்த மதம் நிலைபெற்றிருந்த காலத்தில் எவ்வளவோ ஸ்தாபனங்கள் வேலை செய்தன; அவற்றின் குறிகள் மாத்திரம் தற்போது தென்படுகின்றன. ஆகவே, ஏற்கெனவே முன்னுரையில் செப்பியதைப்போல எந்த நாடும் ஒருகாலத்தி லிருப்பதைப்போல் பிறிதொரு காலத்தில் இருக்க முடிவதில்லை. சில ஸ்தாபனங்கள் எவ்வளவு பெருமையுறினும் சிறிது களங்கத்தையுமடைகின்றன. தக்ஷசிலா சர்வகலாசாலை அவ்வளவு சீரும் சிறப்புமுற்றிருந்ததாயினும் அதில் தீண்டப்படாதாரெனப்பட்டவர்களுக்கு மாத்திரம் பிரவேசிக்க இடமில்லை யென்று ஏற்கெனவே கூறினோம். இந்த நிபந்தனையானது இக்காலத்தில் அருவருப்பாகத் தோன்றுகிறது. தக்ஷசிலா கலாசாலையுற்றிருந்த பெருமையும் புகழுமெல்லாம் இந்த ஒரு நிபந்தனையினால் அசைவடைகின்றன. இவ்வளவு சீரும் சிறப்புமுற்றிருந்த சர்வகலாசாலையில் சண்டாளத்துவத்தைப் போக்க ஒரு மார்க்கமில்லாமற் போனதன்றி அச் சண்டாளத்துவம் தனியாக வளருவதற்கும் ஒதுக்கப்பட்டுவிட்டது வருந்தத் தக்கது. அந்தச் சண்டாளரெனப்பட்ட வகுப்பினருக்கும் அந்தச் சர்வகலாசாலையில் இடங் கொடுக்கப்பட்டிருக்குமானால், இன்று தீண்டாமை யொழியவேண்டு மென்று இந்தியாவில் பெரும்



பிரசாரம் புரியவேண்டிய அவசியமே யிருந்திராது. ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற பெயரே அழிந்துபோயிருக்கும். எனவே அறிவு வளர்ச்சிக்குரிய ஸ்தாபனங்களில் சண்டாளத்துவத்தைப் போக்கவும், அதன் உற்பத்தியைத் தடுக்கவும் வசதி யிருக்கவேண்டியது அவசியம். அஃதின்றேல் அவ்வித ஸ்தாபனத்தின் பெருமைக்கும், புகழுக்கும் சிறிது களங்க மேற்படுவது திண்ணம். கலாசாலை அறிவு வளர்ச்சிக்குரிய ஸ்தாபனம். அறிவு வளர்ச்சி பரம்பொருளை யடைவதற்குரிய வழியாகும். உலகத்திற்கெல்லாம் பிதாவாயும் மூலகாரணமாயுமுள்ள பரம்பொருள் சண்டாளர்களுக்குமாத்திரம் உரியவராகாம லிருக்க முடியாது. பரம்பொருளே உரியவராகாமலிருக்க முடியாதென்றால் அவரை யடையும் மார்க்கமாகிய அறிவு வளர்ச்சிக்கு இடமில்லாமற் போவதெங்ஙனம்? இது விஷயமாக விரித்துக்கொண்டுபோக இங்கு இடமும் விருப்பமு மில்லையெனினும் அவ்வளவு சீரும் சிறப்பு மிகுந்த அச் சர்வகலாசாலைக்கு இஃதோர் களங்கமாக நிலைபெற்றுவிட்டதே யென்று மாத்திரம் வருந்தாமலிருக்க முடியவில்லை.

---

## “பாரதி”யின் விகட வருத்தல் 2.

ஞ றை று) ய ரு க ப ரு இ (ரு றை ஞ
ய பொ க இ

இ ள் க ரு
பொ ர பொ

றை இ இ இ
இ ப் இ க

ய ரு ர

இவ் வருத்தல் மிகவும் இலகுவானது. முன்போன்று பத்து வெவ்வேறு தனி எழுத்துக்கள் கொண்ட வார்த்தையின் முதலெழுத்திலிருந்து கடைசி எழுத்து முடிய 1 முதல் 0 வரை விலையிடப் பெற்று, அதே இலக்கங்களுக்குச் சரியான எழுத்துக்களால் இவ் வருத்தல் ஆக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒவ்வொரு எழுத்துக்களின் இலக்கங்களை மதித்து வார்த்தையைக் கண்டுபிடிக்க வேண்டும். உதாரணமாக “இ” என்னும் எழுத்து நிச்சயமாக “1”

ஆகவேண்டும். ஏனென்றால் இரண்டாவது படியில் "இ"யிலிருந்து குறைந்ததில் மீதி பார்த்தால் "இ" "1" ஆகவே யிருக்கவேண்டும்.

விடையும் வழியும் தருக.

**விடைகளை ஏற்றுக்கொள்ளும் கடாசி நாள்: ஆவணி௴ 25௳ (9-9-32)**

இவ் விகட வகுத்தலுக்குப் பிழையிலாத சரியான விடையனுப்புவோருக்கு, "பாரதி"யின் 1930 & 1931 ஆகிய இரண்டு வருடங்களின் நேர்த்தியான காலிகோ–கில்ட்–பைண்ட்–வால்யம் இரண்டு பரிசு கொடுக்கப்படும். அல்லது 2 வருடங்களுக்குப் "பாரதி"யை இலவசமாகவோ நமது வெளியீடுகளையோ பெற்றுக் கொள்ளலாம்.

### விடையனுப்புவோர் கவனிக்கவேண்டிய விதிகள்:

1. ஓர் காகிதத்தில் விடையைப் பூர்த்திசெய்து அனுப்ப வேண்டும்.

2. விடை அனுப்பும் ஒவ்வொருவரும் அதனோடு நாலணாத் தபால் ஸ்டாம்பு அனுப்புதல் வேண்டும். ஒருவரே பல விடைகள் அனுப்ப முயலலாம். ஆனால் விடைகள் ஒவ்வொன்றுக்கும் ½ அணா தபால் ஸ்டாம்பு 4 அணாவுக்கு அனுப்பிவிடவேண்டும். வெளி நாட்டிலுள்ளோர் போஸ்டல் கூப்பன் அல்லது போஸ்டல் ஆர்டர் அனுப்பவேண்டும்.

3. விடைகள் எமது காரியாலயத்திற்கு வரும் ஆவணி௴ 25௳ (9—9—32)உக்குள் வந்து சேர்ந்துவிடவேண்டும்.

4. வந்த விடைகளனைத்திலும் சரியானதாகத் தோன்றும் ஒன்றினையே பரிசுபெறத் தக்கதென மதித்து, அதை அனுப்பியவருக்குக் குறிப்பிட்டிருக்கும் பரிசில் விருப்பியதைத் தரப்படும். சரியான விடைகள் ஒன்றுக்கு மேற்படுமாயின், விடையனுப்பியவர்களின் பெயர்களைத் திருவுளச் சீட்டின்மூலம் தேர்ந்து, அதினின்று வரும் முதற்பெயர்தாரருக்கே பரிசு வழங்கப்படும்.

5. விடையின் நேர்மையையும், மற்ற விஷயங்களையும் பற்றி, பொறுப்பாசிரியர் செய்கின்ற தீர்மானமே முடிவானது.

6. இந்தப் போட்டியில் சந்தாதாரர்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

7. விடைகள், பெயர், விலாசம், பரிசின் விருப்பம் முதலியன தெளிவாக எழுதப்படல் வேண்டும். விடைகளைப் பொறுப்பாசிரியர், "பாரதி," உத்தமபாளையம் என்ற விலாசத்திற்கே யனுப்பிவைக்க வேண்டும். இது சம்பந்தமாகக் கடிதப் போக்குவரத்து அனுமதிக்கப்படமாட்டாது.

---



## "பாரதி"யின் விகட வகுத்தல் 1-ன் விடையும் வழியும்.

I. பங்கு × தி = பங்கு
தி = 1.

II. வகுத்தலிலுள்ள நான்காவது படியில் "ரு"வும் "தி"யும் இறக்கப்பட்டிருப்பதால் "ம்" = 0.

III. நான்காவது படியில் "ரு"விலிருந்து "தி"யைக் குறைத்ததில் "0" வந்திருப்பதால் "தி"யைவிட "ரு" ஒன்று கூடுதலாக வேண்டும்; ஆனதினால் தி = 1, ரு = 2.

IV. முதற் படியில் "கு"விலிருந்து "ப"வைக் கழித்ததில் "ரு" வந்திருப்பதாலும், மூன்றாவது படியில் "கு"விலிருந்து "ப"வைக் குறைத்ததில் "ப்" வந்திருப்பதாலும் "ரு"வைவிட "ப்" ஒன்று கூடுதலாக யிருக்கவேண்டும். ஆனதினால் "ரு" = 2, ப் = 3.

V. நான்காவது படியில் "தி" (1)யிலிருந்து "ன்" கழிக்கப்பட்டதில் "ப்" (3) வந்திருப்பதால் "ன்" = 8.

VI. நான்காவது படியில் "ரு"வைவிட "ங்" கூடுதலாக வேண்டும். ஏனென்றால் 0-ம், 1-ம், கண்டுபிடிக்கப்பட்டது. எனவே "ப்" (3)விருந்து ஒன்று எடுபட்ட பிறகு "ப்" 2 ஆகும். "ன்" (8) அதிலிருந்து கழிக்கப்படுகையில், அதாவது அடுத்த ஸ்தானத்திலிருந்து ஒன்றை யெடுத்துவரும் 12 லிருந்து "ன்" ஆகிய 8 குறைக்கும்போது 4 ஆகும். ஆதலால் ப = 4.

VII. மூன்றாவது படியில் "கு" இதுவரையும் கண்டு பிடிக்கப்படவில்லை, எனவே "ப" (4)வைக் குறைத்ததில் "ப்" (3) வருவதால் கு = 7.

VIII. இரண்டாவது படியில் "கு" (7)—"ரு" (2)—ர = 5.

VIV. நான்காவது படியில் "ரு"விலிருந்து ஒன்றை யெடுத்தபிறகு "ங்" கழிக்கப்பட்டதில் ர (5) வந்திருப்பதால் "ங்" = 6, — ற = 9.

| விடை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தி | ரு | ப் | ப | ர | ங் | கு | ன் | ற | ம் |

**விடையனுப்பியவர்கள் 41.**

நேரிய விடைகள் 40-ல் கூப்பனில்லாதகொன்று போக ஏற்றுக்கொள்ளப்பெற்றவை 39. அவை வருமாறு:—

1. K. ராஜகோபால், தேவாரம், 2. T. V. கிருஷ்ணமாச்சாரி, மதுரை, 3. R. சௌந்திரபாண்டியம் பிள்ளை, கம்பம், 4. The United Muslim Association, Abiramam, 5. A. S. K. T. சண்பகம், திண்டுக்கல், 6. SP. CT. சிதம்பரம் செட்டியார், புதுவயல், 7. உ. மெ. ராம. சொ. அழகப்ப செட்டியார், கோனாப்பேட், 8. S. V. வெள்ளைச்சாமி, பெரியகுளம், 9. அ. சே. முகமது அபூபக்கர், துக்கையாச்சி, 10. S. P. தியாகராஜன், கண்டி, 11. M. M. மீராமஸ்தான், புனலூர், 12. எ. வெ. முத்துகிருஷ்ண ரெட்டியார், திருவேங்கடபுரம், 13. C. S. ரங்கராஜு, கோயமுத்தூர், 14. C. P. ராமசாமி, காசிபாளையம், 15. P. நடராஜன், கமுதி, 16. P. வெங்கிடசாமி ராஜு, மின்க்லா, 17. M. M. S. T. சண்முகம், நிகப்பு, 18. செ. பஞ்சவர்ணம், தனுப்பியூ, 19. A. S. V. ராஜ், ரங்கூன், 20. V. N. ஸ்ரீநிவாசலு நாயுடு, வையம்பாளையம், 21. T. K. பொன்னு, மோய்வா, 22. C. S. ரங்கராஜ ஐயங்கார், கொளத்தூர், 23. சி. பழனிக்குமாரன், ஆலமரத்துப்பட்டி, 24. M. P. A. R. பழனியப்ப செட்டியார், மலாக்கா, 25. அ. மு. பரமசிவானந்தம், வாலாஜாபாத், 26. ரெ. முத்துக்குமார், போகலே, 27. வீர, அ. மலையாண்டி செட்டியார், கக்கநதி, 28. M. K. சுப்ரமண்யம், மகாதேவி, 29. சுவாமி அருணகிரிநாதன், மதராஸ், 30. M. PL. SP. பழனியப்பா, மலாக்கா, 31. KN. கதிரேசன் செட்டியார், தேவகோட்டை, 32. V. சுப்பராமய்யர், வடக்கன்குளம், 33. G. V. நரசிம்ஹன், இடயகோட்டை, 34. பழ. சுந்தரேசன், தேவஸ்தானம், பொருருவாய், 35. A. V. ராமையா பிள்ளை, வேதாரண்யம், 36. R. S. நாராயணஸ்வாமி, கொழும்பு, 37. ரெ. குருமூர்த்தி, கொழும்பு, 38. S. முகமதுஹுசேன், கம்பம், 39. P. K. ராயர், சிங்கப்பூர்.

பரிசு பெற்றவர்:— K. ராஜகோபால்.

---

# எனது ரயில்வேப் பயணம்.

ஜனாப் S. சையது அஹமது அவர்கள்.

நான் ஒரு கிராமவாசி. என் பெயர் கருப்பணன். ஆனால் என் மேனி கருப்பு நிறமுடையதல்ல. கருப்பண சுவாமியின் ஞாபகார்த்தமாகவே இப் பெயர் எனக்கு என் தாய் தந்தையர் இட்டனர்.

என் கிராமத்திலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள ஏலபுரிக்குச் சில மாதங்களுக்கு முன்னரே ரயில் பாதை ஏற்படுத்தினார்கள். நான் இதுவரை ரயிலைக் கண்டதே யில்லை. ஆனால் என்னை முழுப் பட்டிக்காட்டான் என்று நினைத்துவிடாதீர்கள். எங்கள் கிராமத்தில் நான்தான் கொஞ்சம் படித்தவன்.

ஒருநாள் ரயில்வேப் பயணம் செய்ய நேர்ந்தது. மாலை வேளையில் எனது நண்பரும் நானுமாக மூட்டை முடிச்சுகளுடன் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தோம்.

வண்டி இன்னும் வரவில்லை. பலர் மேடையில் காத்துக்கொண்டிருந்தார்கள்; சிலர் ஒரு பொந்தின் வழியாகக் கைகளைப் புகுத்திக் கொண்டிருந்தனர். "டிக்கட்" வாங்குமிடத்தை இவ்வளவு தாழ்வாக அமைப்பானேன்! ஒருவரும் உள்ளிருப்போரின் முகத்தைப் பார்த்துவிடலாகாது என்றோ! என நினைத்தேன்.

மூட்டைகளை நண்பரிடம் ஒப்புவித்துவிட்டு "டிக்கட்" வாங்கச் சென்றேன். இவ்வளவு பந்தோபஸ்தாக உள்ளிருப்போரின் முகத்தை அவசியம் பார்த்தே தீரவேண்டுமென்னும் நோக்கத்தால் உற்று நோக்கினேன். தாழ்வாக அமைத்திருப்பது சரிதான் என்று புலப்பட்டது. ஏனெனில், அவர் முகம் பயங்கரமாக இருந்தது.

கூட்டம் அதிகமாக இருந்ததால் கொஞ்சம் காத்துக்கொண்டிருக்க நேர்ந்தது. எனக்குப் பின் வந்த ஒருவர் என்னைத் தள்ளிவிட்டு டிக்கட் கேட்க ஆரம்பித்தார். இதுதான் நியாயமா? என்று கேட்பதைப்போல அவர் முகத்தை உற்று நோக்கினேன். அவர்

"கொஞ்சம் அவசரம்; பெண்கள் காத்துக்கொண்டிருக்கின்றனர்" என்றார். ஏன் பெண்கள் பேரைச் சொல்லி மன்னிப்புக் கேட்கிறீர்! நாங்களும் அதே வண்டியில்தான் போகவேண்டும். அவசரம் எங்களுக் கில்லையா? என்றேன். நான் சொன்னவைகளைக் காதில் போட்டுக்கொள்ளாமல் டிக்கட் வாங்கிச் சென்றார். இந்தியர் இவ்வித சந்தர்ப்பங்களில், ஒழுங்கு முறை எப்பொழுது கற்றுக்கொள்ளப்போகிறார்களோ என நொந்துகொண்டேன்.

அவர் சென்றபின் நான் கையை நீட்டினேன். குமாஸ்தா, வாசல் வழியாக வந்த ஒருவருக்கு இரண்டாவது வகுப்பு டிக்கட் கொடுக்கப் போனார். "டொக் டொக்" எனத் தட்டி, "ஐயா! நான் காத்துக்கொண்டிருக்கிறேன்; எனக்குப் பின் வந்தவருக்கு முதலில் கொடுக்கிறீர்களே!" என்றேன். அவர் பொருட்படுத்தவில்லை. திரும்பவும் "டொக் டொக்" என வேகமாகத் தட்டினேன். "என்ன ஐயா! அவசரம்?" என்று என்மேல் சீறிவிழுந்தார். "ஐயா! அவ்வளவு பொறுமை எனக்கில்லை. நான் மகாத்மா காந்தியல்ல" என அழுத்திக் கூறினேன். குமாஸ்தா என் கையில் இருந்த பணத்தை வெடுக்கென்று பிடுங்கிச் சீட்டை யெடுத்துத் தேதி யடித்துக் கையில் எறிந்தார். எனக்கு இது பிடிக்கவில்லை. பலத்த சண்டை போடலாமா என்று நினைத்தேன். ஆனால் வண்டி வரும் சப்தம் கேட்டது. விதியே! என்று வாங்கிக்கொண்டு மேடைக்குச் சென்றேன்.

சிறிது நேரத்தில் "குபு குபு"வெனப் புகையைக் கிளப்பிக் கொண்டு ஒரு கருந் தலையை யுடைய செந்நிறப் பாம்பு சீறிக் கொண்டு ஓடிவருவதைக் கண்டேன். அப் பாம்பு விழுங்கிய மனிதர்கள், அதன் வயிற்றைக் கிழித்து எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சமீபத்தில் வந்ததும் அதன் பேரிரைச்சலைக் கேட்டு விலகி நின்றோம். அது 'புஸ்' என மூச்சு விட்டுக்கொண்டு நின்றது.

பலர் இறங்கினார்கள்; அவர்களை இறங்கவொட்டாது உள்ளே தள்ளிக்கொண்டு சிலர் ஏறினார்கள். ஒரு வயிறு பெருத்த கிழவர், எந்த வண்டியில் ஏறுவதெனத் தோன்றாது இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தார். இங்கே வாருங்கள் என அழைத்து ஒரு வண்டியில் ஏற்றி நாங்களும் ஏறினோம்.

நாங்கள் ஏறிய வண்டியில் சில பெண்கள் மட்டும் உட்கார்ந்திருந்தனர். இவர்களுக்கு அஞ்சி ஆண்கள் இங்கு வரவில்லையோ என நினைத்துக்கொண்டு அங்கே உட்காருவதா, கூடாதா? என்று



கூச்சப்பட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்தோம். அங்கிருந்த இரு பெண்கள் மூக்கில் விரல் வைத்து, "இதென்னம்மா! பொம்பளைக வண்டியிலே ஏறியிருக்காக" என்று கூறினர். ஏதோ தவறு நடந்துவிட்டது என்று நினைத்து சீக்கிரம் கீழே இறங்கினோம். இதற்குள் ஒரு அதிகாரி வந்து என்ன ஐயா! உங்களுக்கு வேறு வண்டி கிடைக்கவில்லையா? எனக் கேலிச் சிரிப்புச் சிரித்தார். எங்கள் செயலைக் கண்டு அவர் சிரிக்கலாம். ஆனால் அவர் சிரிப்பைக் கண்டு நான் நகைப்பது நிச்சயம்.

பெண்களுக்காகத் தனிவண்டி ஏன்? சம அந்தஸ்து விரும்புவோரைப் பார்சல்களைப்போல ஒரு வண்டியில் அடைத்து வைப்பானேன்? மேல் வகுப்புப் பிரயாணிகள் அழைத்துச் செல்லும் வேலைக்காரர்களுக்கு ஏற்படுத்தி யுள்ளதைப்போல், ஆண்கள் அழைத்துச் செல்லும் ஊழியக்காரிகளுக்குத் தனிவண்டியா? நான் நினைப்பது சரியா; இல்லையா? நீங்களே யோசியுங்கள்.

அவ்வதிகாரியைப் பொருட்படுத்தாது வேறு வண்டியில் ஏறி உட்கார்ந்தோம்.

வண்டி காது துளைக்க ஊதி, சிறிது பின்னால் நகர்ந்துகொடுத்துப் புறப்பட்டது. மலைகளும் மரங்களும் பின்னோக்கிச் செல்ல ஆரம்பித்தன. இரு மருங்குகளிலுமுள்ள இயற்கை வனப்பைக் கண்டு அடைந்த ஆனந்தம்—ஆ! என்னென்பேன்!

வண்டி வேகமாய்ச் செல்ல ஆரம்பித்தது. எனது நண்பர் கக்கூசுக்குள் போக முயன்றார். அவரால் முடியவில்லை. ஏனெனில் அவர் ஷௌக்கத்தலியைப் போன்ற திரேகமுடையவர். சத்தில்லாத சோற்றைப் புசிக்கும் தென்னிந்தியர் எங்ஙனம் பருத்து வளர முடியும் என்ற எண்ணத்தால் தென் இந்திய ரெயில்வேக் கம்பெனியார், கக்கூஸ்களைச் சிறிதாக அமைத்துள்ளனர் போலும்!

திரேக அமைப்பில் காந்திஜிக்குச் சமமானவன் என்ற பெருமை எனக்குண்டு. ஆதலால் நான் மட்டும் எளிதாக உட்சென்றேன். ஆனால் உபயோகிக்க முடியவில்லை. நறுமணத்தைச் சகிக்க முடியாது ஓடி வந்துவிட்டேன். கக்கூஸ் சுத்திசெய்து எத்தனை மாதங்கள் ஆயினவோ தெரியாது.

வண்டி அடுத்த ஸ்டேஷனை அடைந்தது. மளமள வென ஜனங்கள் ஏறினார்கள். கூட்டம் அதிகரித்தது. 'சீட்—2 பேர்' எனப் பொறித்துள்ளதில் இரண்டு என்னும் லக்கத்திற்குப்பின்

ஒரு லக்கம் அழிந்துவிட்டதோ வென நினைத்தேன்! ஏனெனில் அத்தனை பேர் ஒரு பலகையில் உட்கார முயற்சித்தனர். இப்பொழுதுதான் பெண்களுக்குத் தனிவண்டி யிருப்பது நலம் எனத் தோன்றியது. அவர்களும் ஒரே வண்டியில் இருந்தால் என்ன பாடு படுவார்கள்?

எனது காலில் பழைய காயம் ஒன்றிருந்தது. அதை ஒரு கனவான் புதுப்பித்துவிட்டார். நரக வேதனைப்பட ஆரம்பித்தேன். மூச்சுவிட முடியாது திணறினேன். மலையாள ரயிலில் நடந்த சம்பவம் எனக்கு ஞாபகம் வந்தது.

வண்டி புறப்பட்டது. சிறிது காற்று அடிக்கவே போன உயிர் திரும்பி வந்தது. ஆயினும் கை கால்களைக் கட்டிக் கிடத்தியதுபோல் இருந்தது.

எத்தனையோ தடவை பலர் சங்கிலிகளைப் பிடித்து இழுத்து விசாரணை நடந்தும், கம்பெனியார் இதை இன்னும் கவனியாதிருப்பது ஏனோ தெரியவில்லை. பணம் திரட்டுவதே நோக்கம்போலும்!

சிறிது நேரத்தில் இருள் சூழ ஆரம்பித்தது. நட்சத்திரப் படையுடன் வீறுகொண்டு வெளிக் கிளம்பும் சந்திரனைக் கண்டு சூரியன் நடுநடுங்கி மேற்கேயுள்ள மலைகளுக்கு ஓட்டம்பிடித்தான். எமது அஞ்சா நெஞ்சம் படைத்த புகைவண்டி நெற்றிக் கண்ணை (மின்சார விளக்கை)த் திறந்து, பன்மடங்கு வேகத்துடன் கானகத்தில் சென்றுகொண்டிருந்தது.

சில ஸ்டேஷன்களைக் கடந்ததும் மணி பத்து அடித்தது. ஆகாரம் புசித்து அமர்ந்திருந்தோம். கண்ணிமைகள் சோர்ந்து மூடிக்கொள்ள ஆரம்பித்தன. எங்களை அறியாமலே தூங்கிவிழுந்தோம். என் தலை பலகையில் அடிபடவே விழித்துத் தலையைத் தடவிக்கொண்டேன். மறுபடியும் என்னை யறியாமல் அடுத்தவர் மேல் சாயவே அவர் மிகவும் கோபித்துக்கொண்டார். ஐயோ! விதியே! என விசனப்பட்டுக்கொண்டேன். நமது ரயில்வேக் கம்பெனியார் படுக்கத் தனியான அறைகள் ஏற்படுத்தினு லென்ன? ஓரிரண்டு பலகைகள் மட்டும் தொங்கவிட்டிருக்கின்றனர். அதை இளைஞர்கள் வயப்படுத்திக்கொள்கின்றனர். என் போன்றவர்கள் பாடு திண்டாட்டமே! தூக்கத்தை ஜிலேபி, லட்டு வாங்கித் தருகிறேன்; இப்பொழுது மட்டும் வராதே என்றால் கேட்கிறதா?

மணி ஒன்று அடித்ததும் நாங்கள் இறங்கவேண்டிய இடம் வந்தது. தூங்கிவிட்டோம் என நினைத்துவிடாதீர்கள். தூங்கவே வசதி யில்லாதபோது எங்ஙனம் தூங்குவது? 'அப்பாடா'வென இறங்கினோம். இறங்கினதுதான் தாமதம்! நடக்கவேண்டிய சிரமமில்லாமல் கூட்டமே எங்களைத் தள்ளிக்கொண்டுபோய்ச் சேர்த்தது.



டிக்கட் கொடுத்துவிட்டு அண்ணாந்து பார்த்தேன். அது பெரிய ஸ்டேஷன். எங்கும் விளம்பர மயமாகவே யிருந்தது. ஸ்டேஷனில் இருக்கிறேனு? அல்லது வியாபார ஸ்தலத்தில் இருக்கிறேனு? என்ற சந்தேகம் தோன்றியது. நல்ல விளம்பரங்களாக வாவது இருக்கலாகாதா! 'அசல் பட்டணம் பொடி,' 'நயம் பீர்,' 'உயர்தர சிகரட்டுகள்' என்பவைகளே காணப்பட்டன. நல்ல குடிகார ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தோம் என நினைத்துக்கொண்டே வெளியே வந்தோம்.

சில கீழ் வகுப்புப் பிரயாணிகள் மூட்டை முடிச்சுகளுடன் 'ஜில்'லென்றிருந்த தரையில் உட்கார்ந்திருந்தனர். குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. உடம்பில் போதிய ஆடையின்றி நடுநடுங்கிக்கொண்டிருந்தனர். அவர்களைக் காணக் கோரக் காட்சியாயிருந்தது. மேல் வகுப்புப் பிரயாணிகளுக்குத் தங்க வசதியான இடமுண்டு. ஆனுல் ஏழைகள் பாடோ! அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!!

ரயில்வே கம்பெனியாருக்குக் கீழ் வகுப்புப் பிரயாணிகளே அதிகப் பணம் கொடுக்கின்றனர். 1929—30-ம் வருடத்திய ரயில்வே நிர்வாக யாதாஸ்தில் குறிப்பிட்டுள்ளபடி மொத்த வருமானம் 38 கோடியே 27 லட்சம் ரூபாய்கள். அதில் 3-வது வகுப்புப் பிரயாணிகள் மூலம் கிடைத்தது மட்டும் 34 கோடியே 11 லட்சம் ரூபாய்கள். இங்ஙனமிருக்க, 3-வது வகுப்புப் பிரயாணிகளைக் கொடூரமாய் நடத்துவதை யார்தான் சகிக்க முடியும்!

எனது ரயில்வேப் பயணம் போதும் போதும் என்ருகிவிட்டது. பிறகு நண்பருடன் வீடு வந்து சேர்ந்தேன்.


---

# அறிக்கை.

## பர்மாவில் "பாரதி" பிரதிநிதி.

நமது "பாரதி"க்கு நண்பர் திரு. கண்ணன் அவர்களை பிரதிநிதியாக நியமித்திருக்கின்ருேம். பர்மா அன்பர்கள் அவரிடம் சந்தாச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்வார்களாக.

# 'பாரதி'யின் குறுக்கெழுத்து பந்தனம் 2.



இடம்—வலம்:—

1. பிரதிவாதி, 3. கலைமகள், 6. வழி, 7. தாமரை, 9. ஓர் மரம், 11. வேகம், 14. தர்மம், 15. செய், 17. மூப்பு, 18. இடி, 22. அசுவம். 23. நாச காலம், 24. நாயன்மாரிலொருவர், 26. பசு, 27. விரதன், 29. வெண்மை, 31. கடல், 33. பெண், 34. செங்கிடை, 35. புறச் சமயம் ஆறினிலொன்று, 37. அம்மை, 38. மேலும் மேலும், 40. அநீதி, 41. எறும்பு, 42. வேங்கைத் தோல், 33. ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மேல்—கீழ்:—

1. ஓர் எண், 2. தீது, 3. மாலை, 4. காந்தம், 5. இனிப்பு, 6. வைஷ்ணவ நூல், 8. பாயிரத்தினிலொன்று, 10. ஓர் நக்ஷத்திரம், 12. வீரம், 13. தூது, 16. சுகானுபவம், 18. நமன், 19. மகா நதி, 20. நன்மை, 21. சூரியன், 25. சுறவு, 26. சிவன், 28. ஓவியம், 30. கஷ்டம், 32. கொடுக்க, 33. ஐவர் மனைவி, 36. நெஞ்சம், 37. நாள், 39. புருஷன், 40. கீழ்.

விடைகளை ஏற்றுக்கொள்ளும் கடாசி நாள் ஆவணிமீ 25உ (9-9-32)



நிபந்தனைகளும் பரிசு விபரமும்:—

பாரதியின் விகட வகுத்தலில் குறிப்பிட்டுள்ளவைகளே இதற்குமாகும். ஒருவரே இக் குறுக்கெழுத்து பந்தனத்திற்கும் விகட வகுத்தலுக்கும் விடை தரலாம். விடை ஒவ்வொன்றுக்கும் ½ அணா தலைப் பில்லைகள் 4 அணாவுக்கு அனுப்பி வைத்துள்ளவர்தம் விடைகளையே ஒப்புக்கொள்ளப்படும்.

---

## 'பாரதி' குறுக்கெழுத்து பந்தனம் 1-ன் விடை.

இடமிருந்து வலம்.

1. சமாதி, 4. தவசு, 7. இரசவாதி, 9. நவசக்தி, 11. குலிசம், 12. ருகன், 14. விகிருதி, 16. மிகும், 17. அவாவின்மை, 20. இன்மை, 22. கடி; 25 இசைமகள், 28. பசாசு, 29. மிலாறு, 34. இன், 36. ருசி, 38. தகுதி. 40. சகாதேவன், 41. தவிர, 43. சவிதா, 44. மருதம், 45. தாட்டிகம், 48. சில்வி, 49 புதும்.

மேலிருந்து கீழ்.

1. சரசம், 2. மாசம், 3. திவா, 4. தவ, 5, வசவி, 6. சுக்கிரை-சுக்கிலை, 7. இலிகுசம், 8. திருவாதிரை, 10. திருமகள், 11. குமிழ், 13. கவின், 15. திருடி, 18. மை, 19. தஞ்சாவூர், 21. கமலாசனி, 23. சுபம், 24. விசுளி, 26. சைமினி, 27. கறுவு, 30. சென்குப்தா, 31. இதிகாசம், 32 தசாவதாரி—மாயாவதாரி, 33. இருவிதம். 34. இதம், 35. மாதேவி, 37. சிரம், 39. திரட்சி, 41. தருமம், 42. குடில், 44. மதகு, 46. கவி, 47. வபு.

விடையில் கலந்துகொண்டவர்கள் நால்வரில்

சரியான விடை யனுப்பியவர்கள்:— 1. கண. கதிரேசன் செட்டியார், தேவகோட்டை, 2. R. M. நாராயணன் செட்டியார், தேவகோட்டை, 3. R. திருமலை ஜக்கையா, கோம்பை.

பரிசு பெற்றவர்:— R. திருமலை ஜக்கையா.

---

# பெண் கல்வி.

ஸ்ரீமதி வி. எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்கள்.

## சுதந்திர தாகம்



பெண்ணடிமை கொள்வதில் நமது இந்தியா முன்னணியில் நிற்கிறது. சில நூற்றாண்டுகளாக அடிமையில் வீழ்த்தப்பட்டுக் கிடந்த ஆண்களின் அர்த்த பாகமாகிய பெண்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில் திடீரென விழிப்படைந்து உண்டாக்கிய சுதந்திரக் கிளர்ச்சியானது இமயம் முதல் குமரிவரை இரு கடல்கள் எல்லையாக உள்ள நாட்டில் எங்கணும் பரவியிருக்கிறது. வீரப் பெண்மணிகள் அஞ்சா நெஞ்சுடன் மேடை யேறி "நாங்கள் அடிமைத் தளையை அறுப்போம்; விதி என்ற சொல்லை வெட்டித் தகர்ப்போம்; பெண்ணடிமைக்கு ஆதரவளிக்கும் பாடல்களைச் சுட்டுக் கொளுத்துவோம்; மாதர்களைத் தூஷணையாகப் பாடும் புலவர்களுக்கு வாய்ப் பூட்டுப் போடுவோம்; பாரதியைப்போன்ற செந்நாப் புலவரைத் தேடுவோம்; ஆடவர்களுக்கு வாழ்நாளில் ஏற்படும் சுக துக்கங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்பதே எங்கள் பிறப்பின் கடமை. அப்படியிருக்கத் துணைபுரியத் தோன்றிய எங்களை அடிமையில் வைப்பது ஆண்களுக்கு அழகல்லவே!" என்று வீர கர்ஜனை புரிகிறார்கள். பத்திரிகாசிரியர்கள் பெண் மக்கள் பகுதியைப் பொன் மையினால் எழுதுகிறார்கள். பல ஆயிரக் கணக்கான வருஷங்களாய்ப் பெண்களை விபரீதப் போக்கில் நடத்திவந்த ஆடவர்கள் இனிப் பெண்மக்களின் உரிமை வேட்கையை வெறும் மிரட்டல்களால் அடக்கிவிட முடியாது என்பதைத் தெரிந்துகொள்வார்களாக. இக்காலத்துப் பெண்கள் மேனாட்டு நடை உடை பாவனைகளில் பற்றுதல் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். மேனாடுகளிலேயே பெண்களின் போக்கு பொறுத்தமில்லாதிருக்கையில், அந்த நிலைமை நமது பெண்களிடம் வந்துவிடுமோ என்று சிலர் அஞ்சுகிறார்கள். வரம்பு கடந்த உரிமை கேட்பதாக நினைக்கக்கூடாது. பாரத தேவியின் உண்மைப் புத்திராகிய காலஞ்சென்ற லாலாஜி அவர்கள், 1924-ம் வருஷம் இந்து மஹாசபையில் சொன்னதாவது:—"நாடு தற்காலம் அடைந்திருக்கும் சீர்கேட்டிற்குக் காரணம், ஆடவர் பெண்களுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாதிருப்பதே" என்று கூறிய உண்மையை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன்.



## ஆண் பெண் வித்தியாசம்

தீண்டப்படாதார் முன்னேற்றத்திற்கு வைதீகம் எப்படி ஹிமாசலத்தைப்போல் குறுக்கிடுகிறதோ அதுபோல் பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடை ஆடவர் என்றுதான் சொல்லவேண்டும். உதாரணமாக ஒரு குடும்பத்தில் பத்து வயதுள்ள ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இருக்குமாகில் அதன் பெற்றோர்கள் பெண்ணைவிட ஆணுக்கே அதிக அன்பைச் செலவிடுகிறார்கள். இதைக் கண்டு அயலார் ஒருவர், "என்ன ஐயா! ஒரு வயிற்றிற் பிறந்த இரு பிள்ளைகளிலும் ஆணை ஒரு விதமாகவும் பெண்ணை ஒரு விதமாகவும் பாவிக்கிறீர்களே? பெண்ணை ஏன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பக்கூடாது? படிப்பு வராதா? அறிவும் ஆற்றலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றுதானே. தேக அமைப்பில்தானே சிறிது மாறுதல் அடைந்திருக்கிறது. பால்மணமாறாத சிறு குழந்தையிலிருந்தே ஒரு பாலுக்கொரு நீதியா?" என்று கேள்வி பிறந்துவிட்டால், "ஆமாம் ஐயா, ஆண் பிள்ளைகளுக்குத்தான் பிறந்த வீட்டில் சுதந்திரம் இருக்கிறது. அவைகளை நன்றாகப் படிக்கவைக்க வேண்டும். தொழிலோ, உத்தியோகமோ, வியாபாரமோ சம்பாதித்துக் கொடுத்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்தால்தானே எங்கள் பிற்கால வாழ்க்கைக்கு ஆதரவளிக்கும். எங்களுக்குக் கொள்ளிக்குப் பாத்தியப்பட்டவன் ஆண்பிள்ளைதானே. பெண்ணைப்பற்றி எங்களுக்கு என்ன சாஸ்வத மிருக்கிறது? பெண்ணை எப்படி வளர்த்தாலும் அயல் வீட்டுக்கு அனுப்புவதுதானே. பெண் படித்து என்ன உத்தியோகம் பார்க்கவேண்டும்? பெண்ணைப் படிக்கவைப்பது கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலை சொறிவதுபோலாகும்."

## பெண் கல்விக்கு ஆட்சேபனைகள்

"இன்னும் சேளுங்கள், மேலத்தெருவு ஜெகநாதன், தனது மகள் அம்புஜத்தை படிக்கவும் வைத்தார். பாடவும் வைத்தார். வயதும் 14 ஆகிறது. அப் பெண்ணுக்குக் கல்யாணம்செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். மாப்பிள்ளைக்கு 20 வேலி நிலம் இருக்கிறது; 10,000 ரூபாய் லேவாதேவி யுண்டு; வீடு மாடி வீடுதான்; அவருக்கு முதல் தாரம் வாணியம்பாடியில் இறந்து விட்டது; வயது அவ்வளவு அதிகமாய் விடவில்லை; 50 அல்லது 53 தான் இருக்கும்; 4, 5 கள்ளுக்கடை குத்தகை எடுத்திருக்கிறார்; நல்ல வரும்படி யுண்டு; அவரைப் பற்றி அதிகம் குறை கூறுவதற்கில்லை; ஆனால் தலை மயிர் கொஞ்சம் நரைத்திருக்கிறது; பல் மட்டிலும் இரண்டு விழுந்து விட்டது; ஆள் கருப்பாய் இருந்தாலும் தகுந்த புஜம் உள்ளவர்; அவர் கண்ணிலுள்ள அம்மைத் தழும்பு பிறருக்கு அவ்வளவு நன்றாய்த் தெரியாது; அவர் மிதக் குடிப்பழக்கம் ஆனதால், குடிகாரன் என்று பிறருக்குக் காட்டிக் கொள்ள மாட்டார்; படிப்பு இல்லையென்று மட்டும் குறைகூறலாம்.

படிப்பிருந்து இக்காலத்தில் அவ்வளவு பிரயோஜனம் என்ன? பி. ஏ. வரையிலும் படித்து விட்டு, 15 ரூபா சம்பளத்திற்கு எத்தனை பேர் தாளம் போடுகிறார்கள். என்னமோ இது நல்ல இடந்தான். பெண்ணைக் கொடுத்தால் நன்றாகப் பிழைப்பாள். பெண் அதற்குச் சம்மதப்பட மாட்டேனென்கிறாள். தான் இன்னும் படிக்க வேணுமென்றும், தையல் வேலை சித்திர வேலை பழக வேண்டுமென்றும், தொந்தரவு செய்கிறாளாம். கல்யாணம் இன்னும் 4, 5 வருஷத்திற்கு வேண்டாமாம். தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும் மாப்பிள்ளை நன்கு படித்த அறிவாளியாயும், யௌவனமும் அழகும் உள்ளவராயும், வியாதி இல்லாதவராயும், சொற்ப வரும்படியாய் இருந்தாலும், நல்லவழியில் சம்பாதிப்பவராயும், ஜனங்களின் மேல் அன்பு உள்ளவராயும் இருக்க வேண்டுமாம் என்று இப்படியெல்லாம் சிறிதும் வெட்கமில்லாமல் எல்லோர் முன்னிலையிலும் தாராளமாகச் சொல்கிறாள். இது கலிகால விந்தை அல்லவா? பெண்கள் படித்ததின் பிரயோஜனம் தெரிந்ததா?'' என்று இப்படிப் பொருத்தமற்ற பதிலைச் சொல்லி வாயை அடைத்து விடுகிறார்கள்.

ஆண்கள் தான் இம்மாதிரி எண்ண முள்ளவர்களென்றால், பெண்ணைப் பெற்ற தாயுக்காவது பிள்ளையின் அருமை தெரிய வேண்டாமா? ''வாழும் பிள்ளையைத் தாயார் கெடுத்தாள்'' என்ற பழமொழிக்கு அனேகர் பின்னமில்லாமல் நடக்கிறார்கள்.

## எனது அனுபவம்

நான் ஒரு உபாத்தினி ஆனதாலும், அனேகமாய்க் கிராமாந்தர வாழ்க்கையில் இருப்பதாலும், நேரில் கண்ட சிலவற்றைக் கூறுதல் மிகையாகாதென்று நினைக்கிறேன். நான் சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் இல்லம் சென்று பாடசாலைக்குக் குழந்தைகளை அழைப்பது வழக்கம். அதுசமயம் பிள்ளைகளின் தாய்மார்கள், ''என்னங்க வாத்தியாரம்மா! எங்கள் பிள்ளைகள் படித்து உங்களைப்போல் வாத்தியார் வேலைக்கு வரப்போகிறதா? பொட்டச்சிகள் படித்து என்ன பிரயோஜனம்? பள்ளிக்கூடம் போய் வருவதற்கு வீட்டிலிருந்தாலும், வீட்டு வேலையையாவது செய்யும். படிப்பையா அவள் புருஷன் கேட்கிறான்? (படித்த பெண்களையே கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்று ஒவ்வொரு வாலிபரும் விரதம் பூண்டால், பெண் சமூகம் இவ்வளவு சீர்குலைந்து இருக்குமா?) வீட்டு வேலை செய்யவேண்டும். புருஷன் வார்த்தையைத் தட்டாமல் நடக்கவேண்டும். அதுவே போதும். படிப்பை என்ன செய்கிறோம்? படிக்கவைத்தால், புருஷனிடம் எதிர்த்து வாதாடுவாள். கள்ளக் காதலனுக்குக் கடிதம்கூட எழுதும்படியாய் ஏற்பட்டுவிடும்'' என்று அசம்பாவிதமான வார்த்தைகளை யோசனையின்றி உரைத்துவிடுகிறார்கள்.



## இவ்வித ஆக்ஷேபனைகளுக்குச் சமாதானங்கள்

இதற்கு நாம் சாத்மீகமாகவே, ''என்னம்மா இப்படிச் சொல்லுகிறீர்கள்? 100-க்கு ஒரு படித்த பெண் கெட்ட நடத்தை உள்ளவளாக இருந்தால், அதை உதாரணமாக எடுத்துக்கொண்டு, 99 பேர் படிப்பினால் நன்மை அடைந்து வருவதைச் சிறிதும் கவனியாமல் இருக்கலாமா? கூரை வீட்டில் அடுப்பு மூட்டினால், தவறி வீட்டில் தீப் பிடித்துக்கொண்டால் என்ன செய்வது? பட்டினி கிடப்பதா? ஒருவன் சாப்பிடும்போது சாதம் விக்கிப்போய் இறந்துவிட்டானென்றால், அதைக் கேட்டுச் சாப்பிடாமல் இருப்பாருண்டா? உங்கள் பிள்ளைகளுக்கு உத்தியோகப் படிப்பு வேண்டியதில்லை, சுகாதாரத்தைப்பற்றியும், குடும்பத்திலுள்ள மாமன், மாமி, நாத்தி முதலியவர்களிடத்தில் மரியாதையாயும் அன்பாயும் நடந்துகொள்ளவேண்டிய சிறந்த முறையைப்பற்றியும், இல்லற தர்மத்தைப்பற்றியும் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்தானே'' யென்று இன்மொழி கூறிப் பள்ளிக் கனுப்பும்படி செய்யவேண்டியது கடமையாய் இருக்கிறது. சிலர் வீட்டு வேலையை முன்னிட்டுப் பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை; இன்னும் சிலர் குழந்தைகளுக்கு நகை போட்டிருப்பதால், துணையின்றிப் பள்ளிக்கு அனுப்பச் சாத்தியமில்லை என்கிறார்கள். குழந்தைகளின் அறிவை வளர்க்கும் கல்வியைச் சிறிதும் கவனியாமல் நகையிட்டு அழகு செய்து கொண்டிருக்கும் சீமாட்டிகளும், வீட்டுவேலை செய்யச் சக்தியற்றுப் பள்ளிக்குப் போகும் பெண்களை நிறுத்தி, வேலை செய்யும் இயந்திரமாக ஏற்படுத்திக் கொள்ளும் சோம்பேறிப் பெண்களும், கல்வி கற்பதனால் விபசாரத்திற்கு இடம் ஏற்படக் கூடும் என்று சொல்லி சந்தேகப்படும் பெண்களும் உள்ளவரை, பெண்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை இருந்தே தீரும். தேர், திருவிழா, சந்தை முதலிய கட்டிடங்களில் ஆண், பெண் பேதமின்றிக் கலந்து திரிகிறார்கள். ஒரு ருதுவான பெண், பெண் உபாத்தினி யிருக்கும் பாடசாலைக்குப் போவதைக் கண்டு, எள்ளி நகையாடுகிறார்கள்! இன்னோர்களைச் சீர்திருத்த ஏற்பட்ட பிரசங்க மேடைகளையாவது பார்த்துவர சிறிது நேரத்தைச் செலவிட மனமில்லாத நாணமுற்ற பெண்கள், அசம்பாவிதமான பாடல்களைப் பாடவும் நடிக்கவுமிருக்கும் நாடகசாலைக்குப்போகத் தவறுகிறார்களில்லை! பண்டைக் காலத்துப் புலவர்கள், ''சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று திகைப்பரே'' யென்றும், ''பேய் கொண்டாலும் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாது'' என்றும், ''மங்கையர் சொல் கேட்போரையெல்லாம் உலகத்தோர் நகைப்பார்'' என்றும் இது போன்ற வசைக் கவிகள் மக்களின் அறிவைக் கெடுக்கும் தாய்மார்களுக்கே உரியதாகும்.

ஔவையார், ஆண்டாள், காரைக்கால் அம்மையார், வெள்ளி வீதியார், மங்கையர்க்கரசியார் முதலிய வித்வ சிரோன்மணிகள் இருந்த நம் தமிழகத்தில் மழைக்கேனும் பள்ளியில் ஒதுங்கியறியாத பாவையர்கள் எத்தனைபேர்? பெண்கள் படித்து உத்தியோகத்திற்கா போகிறார்கள்? என்று சிறிதும் கவனமின்றிக் கேட்டு விடுகிறார்கள் பாழும் அடிமை உத்தியோகத்திற்குப் போவதாக நினைக்கத் தேவையில்லை. வாசுகி, கண்ணகி, தமயந்தி சாவித்திரி, ஆண்டாள், காரைக்கால் அம்மையாராகிய கிருகலக்ஷ்மிகளைப் பின்பற்றுதற்குரிய கல்விகளைக் கற்க வேண்டியதே உசிதமாகும். நிராதரவுள்ள பெண்மணிகளுக்கு உத்தியோகம் ஏற்றதாய் இருக்கின்றது. இப் பிரபஞ்சத்தில் ஆறறிவுபெற்ற மனித வர்க்கத்தில் ஆண் பெண் இரண்டு வகுப்பில், பெண்களே அதிகக் கஷ்ட நஷ்டங்களில் ஈடுபடவேண்டியதாய் இருக்கின்றார்கள். ஒரு குடும்பத் தலைவன், அந்தக் குடும்பப் பாதுகாப்பிற்கு வேண்டிய வரும்படி சம்பாதிக்கும் கடமை ஒன்றுதான். அந்தக் குடும்பத் தலைவி செய்ய வேண்டிய காரியமோ எண்ணில. மாதர்களுக்கோ, பிறந்த அகத்தில் கல்வி யில்லை; சொத்துரிமை யில்லை; இஷ்டமான மணமில்லை; கணவன் இறந்தால் மறு விவாகம் இல்லை. இவ்விதமாகவே, பெண்களுக்கு சுதந்திரம் சிறிதும் இல்லை. சிறு வயதில் தாய் தந்தையர்கள் காவல்! யௌவனத்தில் கணவன் காவல்! அந்தியத்தில் மக்கள் காவல் என்று சொல்லும் ஐதீகத்தை ஒத்துக்கொள்ளலாம். ஆனால் அந்த இளமையில் பாதுகாத்திடும் தந்தையும், யௌவனத்தில் பாதுகாத்திடும் கணவனும், அந்தி காலத்தில் பாதுகாக்கும் மக்களும் அவரவர் போஷணையில் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறுவோர்களை மா பாதகர்களென்று சொல்லிவிடலாமல்லவா? அமெரிக்காவில் ஐயறிவுள்ள குரங்குகளுக்குப் பகுத்தறிவு உண்டாக்க முயற்சிக்கும் இக்காலத்தில், இந்தியாவில் மனித வர்க்கத்தை மிருகத் தன்மையில் பாவிப்பதென்றால் என்ன விபரீதம்! ஆணுக்கோ, பெண்ணுக்கோ அறிவை வளர்க்க இன்றியமையாதது கல்வியாகும். அந்தக் கல்வியைப் படிப்பதற்கு பால்ய வயதே சிலாக்யமாகும். பால்ய வயதை வீணாகக் கழித்தால் பிற்காலத்து வாழ்க்கையானது அலைகடல் துரும்புபோலாகும். தங்கள் மக்கள் புனிதமான வாழ்வு வாழவேண்டுமென்று கோடி திரவியம் சம்பாதித்து வைத்திருந்தாலும், அதை விருத்திபண்ணவோ, பாதுகாக்கவோ, வாழ்க்கை நடத்தவோ தகுந்த அறிவில்லாதிருப்பின் அத்திரவியங்களனைத்தும் விழலுக்கிறைத்த நீராகுமல்லவா? நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு லட்சுமி யென்றும், சரஸ்வதி யென்றும், வேதவல்லி யென்றும் பெயரை வைத்துக்கொண்டு எழுத்தென்ற அக்ஷரமறிவிக்காது வைத்திருக்கிறீர்களே? கல்விக்கு உடையவள் சரஸ்வதி யென்றும், செல்வத்துக்குடையவள் லட்சுமி யென்றும் போற்றிப் புகழும் நீங்கள், வானத்திற்கும் பூமிக்கும் எவ்வளவு வித்தியாசமோ



அவ்வளவு வித்தியாசம் பெண்ணுக்கும் கல்விக்கும் இருப்பதாகப் பாவிக்கிறீர்கள்! சரஸ்வதி, லட்சுமி இன்னதென்றுணராத அமெரிக்காவில் நூற்றுக்கு 98 பேர் படித்திருக்கிறார்கள்; அந் நாடு செல்வத்திலும், நாகரீகத்திலும் தலைசிறந்து விளங்குகின்றது. நம் இந்தியாவிலோ அநேக வீடுகளில் லட்சுமி, சரஸ்வதி என்ற பெயர்களை வைத்துக்கொண்டிருந்தும் 100-க்கு சுமார் 15 பேர்கள்தான் படித்திருக்கிறார்கள். 35 கோடி மக்களில் பத்துக் கோடி மக்கள் ஒரு வேளை யுண்டால், மறு வேளை கஞ்சிக்கில்லையே என்ற கவலை பீடிக்கப்பட்டவர்களா யிருக்கிறார்கள். இதற்குக் காரணமென்ன? நமது நாட்டில் படங்களின் மூலமாய்த் தெய்வங்களைப் பூஜிக்கிறோமே யொழிய முயற்சி தெய்வத்தை முற்றிலும் புறக்கணித்துவிடுகிறோம் "தெய்வத்தா லாகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரு"மென்னும் மந்திரத்தை மேல்நாட்டார் அனுஷ்டிக்கிறார்கள். அந்தந்த நாடுகளில் பெண்மணிகள் சிறுவயதில் கல்வி பயின்று வியாபாரம், உத்தியோகம், கைத்தொழில் முதலியவற்றில் விருத்தியாகிப் பலவிடங்களுக்குச் சென்று வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆனால் நமது நாட்டிலோ பெண்கள் கடைகளுக்கும் சந்தைகளுக்கும் சென்று காய்கறி வாங்கி வரவுங்கூட சாமர்த்தியமில்லாத நிலைமையிலிருக்கிறார்கள். மேல் நாடுகளில் ஆண்களுக்கு எத்தகைய கல்வி போதிக்கப்படுகிறதோ அதேமாதிரி பேதமின்றிப் பெண்களுக்கும் கல்வி கற்பிக்கப்படுகிறது. நமது நாட்டில் பெண்களுக்கு அவ்வளவு கல்வி அவசியமில்லையெனக் கருதுகிறார்கள். ஒரு மனிதனுக்கு இரண்டு கைகளும் சரியாயிருந்தாலொழிய ஒரு கைப் பலத்தினால் வேலை செய்வது கடினமல்லவா? அதுபோல் இந்தியா ஒரு கைப் பலத்தால் முன்னேற்றமடைய முடியுமா?

நமது நாட்டுப் பெண்களுக்குக் கால தேச வர்த்தமானத்தை அனுசரித்த கல்வியே தேவையாயிருக்கிறது. தற்காலம் போதிக்கப் பட்டுவரும் கல்வியானது அவ்வளவு சிறந்ததென்று சொல்வதற்கில்லை. மாதர்களுக்குக் குடும்ப நிர்வாகத்தில் ஏற்ற ஆற்றலும், ஒழிந்த வேளைகளில் கைத்தொழில்களின் மூலம் சிறிது வருவாயும் கிடைக்கத் தகுந்த கல்வியைக் கற்பிக்கவேண்டிய தவசியமாகும்.

ஆண்களைப்போல் பெண்களுக்கு அறிவும் ஆற்றலுமில்லையென்று கூறிவிடமுடியாது. சுயநல ஆடவர்களால் அதற்குப் பங்கமுண்டாகிறது. அக்காலத்தில் அல்லி, பவளக்கொடி முதலிய பெண்மணிகள் ஆட்சிபுரியவில்லையா? தமிழ் நாட்டை அரசாண்ட மங்கம்மாளின் அனுகூலங்கள் இன்னும் துலங்கிவருகின்றன. அதை மறுத்தாலும் விக்டோரியா ஆளுகையில் இருந்த அமைதியும், சீரும், சிறப்பும் இப்பொழுதிருக்கிறதா? திருவனந்தபுரம் மகாராணி ரீஜெண்டு அவர்கள் ஆளுகையின் பெருமை இந்தியா அறிந்த விஷயமே. சுண்

# மஹா கவி ஷேக்ஸ்பியர்.

திரு. S. R. A. ஐயர் அவர்கள்.

### பிறப்பு

வில்லியம் ஷேக்ஸ்பியர் (William Shakespeare) இங்கிலாந்தில், வாரிக்ஷயரில் ஏவான் நதிக் கரையிலுள்ள ரம்மியமும், புராதனமும், நாட்டுப்பாங்குமான ஸ்ட்ராட்போர்டு (Stratford on-Avon) என்னும் ஊரில் கி. பி. 1564-ம் வருஷம் ஏப்ரல் மாதம் இருபத்திரண்டு அல்லது இருபத்து மூன்றாந் தேதியில் பிறந்தார்.

### கவியின் முன்னோர்களைப்பற்றிய விவரங்கள்

வாரிக்ஷயரிலுள்ள ஸ்ட்ராட்போர்டு ஒழிந்த கிராமங்களுக்கு ஸம்பந்தப்பட்ட பதினைன்காம் நூற்றாண்டுக் குறிப்புகளில் ஷேக்ஸ்பியர் என்ற பெயர் விசேஷமாகக் காணப்படுகிறது. ஆனால் ஸ்ட்ராட்போர்டுக்கு ஸம்பந்தப்பட்ட குறிப்புகளில் மாத்திரம் அது காணப்படுவதில்லை. நமது கவியின் தந்தையான ஜான் ஷேக்ஸ்பியர் என்பவர்தான் (John Shakespeare) அவ்வூரில் குடியேறிய ஷேக்ஸ்பியர் வர்க்கத்தினரில் முதல்வர். அவர் 1550 அல்லது 1551-ம் வருஷத்தில் தமது தந்தையான ரிச்சர்டு ஷேக்ஸ்பியர் (Richard Shakespeare) குடித்தனம் செய்துவந்ததும், ஸ்ட்ராட்போர்டுக்கு வடகிழக்கில் நான்கு மைல் தூரத்திலுள்ளதுமான ஸ்நிட்டர்பீல்டு (Snitterfield) என்னுங் கிராமத்திலிருந்து அவ்வூருக்கு வந்தவர். ஜான் ஷேக்ஸ்பியர் கையுறை (gloves) செய்து, விற்று ஜீவனம் செய்துவந்ததாகச் சொல்லுவார்கள். அவர் ஆடு மாடு வியாபாரமும், தானிய வியாபாரமுங்கூடச் செய்து வந்ததாக ஊஹிக்க இடமிருக்கின்றது. அவர் வியாபாரத்தில் பெருத்த லாபம் சம்பாதித்துச் செழித்துத் தமது ஊருக்கு வடமேற்கே சிறிது தூரத்திலுள்ள வில்ம்கோட் (Wilmecote) என்னும் கிராமவாசியான தனமிகுந்த நாட்டாண்மைக்காரனின் செல்வப் புத்திரியும் ஏக சந்ததியுமான மேரி ஆர்டன் (Mary Arden) என்னும் மாதை 1557-ம் வருஷத்தில் மணம்புரிந்துகொண்டார்.

1556-ம் வருஷத்தில் அவர் ஸ்ட்ராட்போர்டில், ஹென்லி வீதியில் (Henly Street) ஒரு வீட்டையும் தோட்டத்தையும், கிரீன் ஹில் வீதியில் (Green Hill Street) ஒரு வீட்டையும் அதற்கடுத்தாற்போலுள்ள தோட்டத்தையும் வயலையும் விலைக்கு வாங்கினார். இந்த வீடுகள் ஒன்றில்தான் மஹாகவி பிறந்தார். இவ்விரண்டு வீடுகளும் இன்னும் நல்ல ஸ்திதியிலிருக்கின்றன. அவை ஷேக்ஸ்பியர் கலாநிலயமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### இளம்பருவம்

ஷேக்ஸ்பியரின் இளம்பருவத்தைப்பற்றி விசேஷமாய் ஒன்றும் அறிய முடியவில்லை. 1568-ம் வருஷத்தில் ஜான் ஷேக்ஸ்பியர் ஸ்ட்ராட்போர்டில் அமீனா ஸ்தானத்தை வகித்துவருகையில், இங்கிலாந்து இராணியின் நாடக சபையார் அவ்வூருக்கு வந்து நாடகங்களாட அனுமதி பெற்றனர். அடுத்த வருஷமும் அவர்கள் அதே காரியமாக அவ்வூருக்கு வந்தனர். அப்போது நமது கவி ஐந்து வயதுள்ளவராயிருந்ததினால் அவர்களது ஆட்டங்களை அவர் நிச்சயமாய்ப் பார்த்திருக்கலாம். ஏழாம் வயதில் அவரை அவரது பெற்றோர்கள் தங்களது வீட்டுக்குச் சில வீதிகளுக்கப்பாலிருந்த திருச்சிலுவைத் தரும கிரந்த பாடசாலைக்குக் (The Free Grammar School of the Holy Cross) கல்வி பயிலுமாறு அனுப்பினார்.

---

ணகி பாண்டிய ராஜனோடு வாதாடியதாயும், சாவித்திரி எமனுடன் வாதாடியதாயும் எழுதிவைத்திருக்கும் கதைகளில் நம்பிக்கை யில்லாவிட்டாலுங்கூட இப்பொழுது சுதந்திரப் போரினால் சிறையிலிருந்து வரும் கவி அரசி ஸ்ரீமதி சரோஜினிதேவியாரென்ற வீரப் பெண் சிங்கத்தை நோக்குங்கள். இன்னும் இதுபோன்று எத்தனைப் பெண்மணிகள் அறிவிலும், ஆற்றலிலும், ராஜீய ஞானத்திலும் நிகரற்று விளங்குகிறார்கள்! சிந்தியுங்கள்!! இதையெல்லாம் யோசியாமல் எடுத்ததற்கெல்லாம் சாஸ்திர விரோதமென்று முட்டுக்கட்டை போட்டுவந்தால் நாடு முன்னேற்றமடைவது எப்படி? இப்பொழுது பெண்களுக்கேற்பட்டிருக்கும் உணர்ச்சியானது மிதமீறி மேல்நாட்டுப் பெண்மணிகளிடம் தோன்றியுள்ள அதிகப்படியான சுதந்திரமும் சாத்வீகமுமற்ற குணமும் ஏற்பட்டு அமைதியற்ற வாழ்க்கையை யுண்டாக்கிவிடும் என்று அச்சமுறவேண்டியிருக்கிறது. ஆதலால் நிலைமை மாறுபடுமுன் அறிவாளிகளும், தேச சீர்திருத்தக்காரர்களும், தொண்டர்களும் நமது நாட்டுப் பெண்கள் முன்னேற்றத்திற்குரிய வழிகளைத் தேடவேண்டும். அன்றே, மிஸ். மேயோவைப்போன்ற அன்னிய நாட்டுப் பெண்கள் நம்மைப்பற்றிக் கேவலமாக எழுதியுள்ள தூஷணைகளுக்குச் சரியான பதில் தந்தவர்களாவோம் என்பதை அறியவேண்டும்.

தாம் முதன் முதலாக எழுதிய காதலர் கஷ்டத்தின் கொடுமை (Love's Labour's Lost) என்னும் நாடகத்தில் ஷேக்ஸ்பியர் எழுதியுள்ளபடியே அவரது பிரதம குருவும், அந் நாடகத்தில் வரும் பாத்திரங்களில் ஒருவரான ஹாலோபர்னீஸைப்போல் (Holofernes) கடின ஸ்வாபவமின்றியும், கல்விச் செருக்கு நிறைந்தும் இருந்தார் என்று நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

1568-ம் வருஷத்தில் ஸ்ட்ராட்போர்டு நகரத்துப் பிரதம நியாயாதிகாரி ஸ்தானம் வகித்துச் செழிப்பாயிருந்த ஜான் ஷேக்ஸ்பியரின் அதிர்ஷ்டம் சில வருஷங்களுக்குப் பின் குன்றத் தொடங்கியது. அவர் 1578—79-ல் வில்ம்கோட்டிலும் ஸ்நிட்டர்பீல்டிலும் தமது மனைவிக்குச் சொந்தமாயிருந்த சில சொத்துக்களை விற்கும்படி நேர்ந்தது. 1586-ல் கடன்காரரால் வெகுவாக நெருக்கப்பட்டுப் பின் தமது நகர் காவல் அதிகாரத்தையும் இழக்க நேர்ந்தது. இத்தியாதி கஷ்டங்களால், ஷேக்ஸ்பியரின் பள்ளிக்கூடப் படிப்பும் தடைப்பட்டு, அவர் அப்போது தமக்கு இளையவர்களாகவிருந்த நாலைந்து குழந்தைகளுள்ள குடும்பத்தைக் காப்பாற்றும் நிமித்தமாக தமது பதின்மூன்றும் பிராயத்திலேயே தமது தகப்பனாருடன் சேர்ந்து உழைக்க நேரிட்டது.

## விவாகமும் இல் வாழ்க்கையும்

மற்றுஞ் சில வருஷங்களுச்குப் பின், அதாவது 1582-ல் ஷேக்ஸ்பியர் ஸ்ட்ராட்போர்டுக்கு அப்பால் மேற்குப் புறமாகவுள்ள ஷாட்டரி (Shottery) கிராமவாசியான ஒரு குடியானவனுடைய மகள் ஆன் ஹாத்தவே (Anne Hathaway) என்பவளைக் கலியாணம் செய்துகொண்டார். இந்தப் பெண் ஷேக்ஸ்பியரைவிட எட்டு வருஷம் வயதில் பெரியவள். ஷேக்ஸ்பியர் இந்தக் கலியாணத்தை ஆத்திரப்பட்டுத்தான் செய்துகொண்டாரென்றும், அப்படிச் செய்ததற்குப் பின்பு வருந்தினாரென்றும் அறிய போதுமான ஆதாரங்களிருக்கின்றன. அவருக்கு 1583-ல் ஸூஸன்னா (Susannah) என்று ஒரு பெண்ணும், 1585-ல் ஹாம்நெட்; ஜூடித் (Hamnet, Judith) என்னும் ஆணும் பெண்ணுமான இரட்டைக் குழந்தைகளும் பிறந்தன.

## இலண்டனுக்கு வந்தது

இந்தச் சமயத்தில்தான், அதாவது 1585-ல் ஷேக்ஸ்பியர் ஸ்ட்ராட்போர்டை விட்டு லண்டன் மாநகரத்திற்கு வந்து சேர்ந்தார். அதற்குப் பின் பதினொரு வருஷங்கள்வரையில் அவரது குடும்பத்தாருக்கு அவரது யோகக்ஷேமங்கள் ஒன்றுமே தெரியாதிருந்தன. ஏவான் நதிக் கரையில் ஸ்ட்ராட்போர்டுக்குமேல் சில மைல்களுக்கப்பாலுள்ள சார்லிகோட் (Charlecote) காடுகளில், ஷேக்ஸ்பியர் சொந்தக்காரனுடைய அனுமதியின்றிப் பிரவேசித்தாரென்றும், அதனால் விளையக்கூடிய தண்டனைக்குத் தப்பவேண்டி அவசரமாய்த் திடீரென்று சொந்தவூரை விட்டு அகன்றாரென்றும் கர்ண பரம்பரையான கதையொன்றுண்டு. இந்த சம்பவங்களை மனதில் வைத்துக்கொண்டுதான் தமது நாலாவது ஹென்றி (Henry IV.) அரசன் என்னும் நாடகத்தில் வரும் நுனிப்புல் மேயும் நியாயாதிபதி (Justice Shallow) ஆகிய பாத்திரத்தின் மூலமாகவும், 'விண்ட்ஸர் நகரத்து விசாரமற்ற ஸ்திரீகள்' (Merry Wives of Windsor) என்னும் நாடகத்தில் வரும் பாத்திரங்களின் மூலமாகவும் ஷேக்ஸ்பியர், மஹா ஆடம்பரமும் விவேகமும் நிறைந்த சார்லிகோட் தனவான் ஸர் தாமஸ் லூஸி (Sir Thomas Lucy) என்பவரைக் கேலிசெய்கிறார் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.



## லண்டன் வாசமும் உத்தியோக சம்பாத்தியமும்

ஷேக்ஸ்பியர் லண்டனுக்கு வந்தபொழுது அங்கு இரண்டு நாடகசாலைகள்தான் இருந்தன. அவை யிரண்டும் நகர்க் கோட்டைக்கு வெளிப்புறமான ஷோர் டிச் (Shore Ditch) என்னுமிடத்தில் இருந்தன. அவற்றிற்கு நாடகக் கொட்டகை (The Theatre) என்றும், திரைச்சீலை (The Curtain) என்றும் பெயர். அவர் லண்டனை யடைந்தவுடனேயே இந்த நாடகசாலைகள் ஒன்றில், ஜீவனோபாய நிமித்தம் குற்றேவல் செய்யும் ஊழியக்காரனாக அமர்ந்தார். இதன்பின் வெகுகாலங் கழியுமுன் அவர் எல்லாரும் கொண்டாடும்படித் தேர்ந்த நடிகனாக விளங்கினார். 1594-ம் வருஷம் கிறிஸ்மஸ் பண்டிகை சமயத்தில் அவர் அக்காலத்து நடிகர்களில் மிகப் பிரசித்தி பெற்றவர்களான பர்பேஜ் (Burbage), கெம்ப் (Kemp) என்பவர்களது கோஷ்டியில் சேர்ந்து, கிரீனிச் (Greenwich) அரண்மனையில் இராணியின் முன் நடித்தார். இதனாலேயே அவர் அதி தீவிரத்தில் தேர்ந்த நடிகனாக விளங்கினார் என்பது விளங்கும்.

1599-ம் வருஷத்தில் ஸௌத்தார்க் (Southwark) என்னுமிடத்தில் பாங்குஸைடில் (Bankside) முன் சொல்லிய நாடகசாலைகளைவிட மிகப் பெரியதாக குளோப் (Globe) நாடகசாலை கட்டப்பட்டது. அதில் ஷேக்ஸ்பியர் நடித்துவந்ததுமன்றி, அதன் சொந்தக்காரரில் ஒருவருமாக இருந்துவந்ததினால், அதினின்றும் பெருத்த லாபமடைந்துவந்தார்.

## கவியின் நாடகங்களின் பிரதம தசை

ஷேக்ஸ்பியர் முதன் முதலாக எழுதிய நாடகம் காதலர் கஷ்டத்தின் கொடுமை (Lou's Labour's Lost) என்றே சொல்லலாம்.

அது 1591ல் எழுதப்பட்டதென்று ஊஹிக்கப் பல ஆதாரங்கள் உள. அதில், அக்காலத்திலிருந்த டம்பாச்சாரிக் கோலங்கொண்டு ஆடம்பரமாய்க் காலங் கழித்த சீமான்களது நடை யுடை பாவனைகளும், விசேஷமாக "யூப்பியூயிஸ்ம்" (Ephuism) என்னும் மணிப் பிரவாளமான விசித்திர வசனங்களை வழங்குவதில் தாம் சமர்த்தர் என்று அவர் கொண்டிருந்த பெருமையும் உள்ளபடியே வருணிக்கப்பட்டிருக்கின்றன. ஷேக்ஸ்பியர், இடையிடையே, தாம் ஸ்டார்ட்போர்டில் நேராகக் கண்ணுற்றதும், தமது ஞாபகத்திலிருந்ததுமான கிராம வாசிகளின் வாழ்க்கையையும், நடை யுடை பாவனைகளையும் வெகு வேடிக்கையாய் வருணித்திருக்கிறார். இதை யெழுதி வெகு நாளாகுமுன், மாறுட்ட மங்களம் (The Comedy of Errors), விரோனு நகரக் கனவான்கள் இருவர் (The Two Gentlemen of Verona) என்னும் நாடகங்களையும் எழுதினார். நடுவேனிற் கனவு (A Midsummer Night's Dream) ரோமியோ ஜூலியத் (Romeo and Juliet) என்று பெயருள்ள அழகான வேறு இரண்டு நாடகங்களும் அவரது இந்த இளம் பருவத்துக்கே சேர்ந்தவை.

இதே காலத்தில், நாடகத் தலைவர்கள் சிலர், ஷேக்ஸ்பியரைக் கொண்டு, பழைய நாடகங்களை, அக்கால வழக்கத்திற்குத் தக்கபடி புது மாதிரியில் எழுதுவித்தனர். அவரும் தானாகவோ, அல்லது தம் காலத்திலேயே வாழ்ந்துவந்த மார்லோ (Marlowe) என்னும் புலவருடன் சேர்ந்தோ உழைத்து, இப்போது நமது காலத்தில் வழங்கிவரும் மூன்று காண்டங்கள் கொண்ட ஆறுவது ஹென்றி அரசன் (The Three parts of Henry VI) என்ற நாடகத்தை இயற்றினார். அதற்குப் பின், அவர், மூன்றாம் ரிச்சார்டு (Richard III), இரண்டாம் ரிச்சார்டு (Richard II) என்னும் நாடகங்களை மார்லோவின் நடையைத் தழுவியே எழுதி வெளியிட்டார்.

1593ல் ஷேக்ஸ்பியர், வெனுஸும் அடோனிஸும் (Venus and Adonis) என்ற காவியத்தை யியற்றி, அக் காலத்தில் வித்வான்களை ஆதரித்துவந்த பிரபுக்களில் முக்கியமானவர்களில் ஒருவரும் எலிசபெத், ராணியின் சபை யங்கத்தினரில் ஒருவராகவு மிருந்த, தனம், பெருந் தன்மை, இளமை முதலிய பெருமைகள் வாய்க்கப் பெற்றவருமான ஸௌத்தாம்ப்டன் பிரபுவுக்கு (The Earl of Southampton) அர்ப்பணம் செய்தார். அடுத்த வருஷத்தில் தாம் இயற்றிய "லுக்ரியின் அபஹரணம்" (Rape of the Lucree) என்ற காவியத்தையும் அவருக்கே அதிவிசேஷ விநயத்துடன் அர்ப்பணம் செய்தார். "தங்களுக்கு நான் அர்ப்பணம் செய்யும் அன்பு முடிவில்லாதது. நான் இதுவரை எழுதியிருப்பவையும், இனிமேலும் எழுதக் கூடியவையும், யாவும் தங்களுடையதே" என்றார். இந்தப் பிரபு ஷேக்ஸ்பியரின் உயிர்த்தோழனும் உபகாரியுமாவர். ஷேக்ஸ்பியர் ஒருசமயம் ஒரு வீட்டை விலைக்கு வாங்கிய பொழுது, அவரது கையில் வீட்டின் விலை முழுவதையும் கொடுக்கப் பணமில்லாமலிருந்ததை யறிந்து, இந்த ஸௌத்தாம்ப்டன் பிரபு, அந்த வியாபாரத்தைத் தீர்க்க ஷேக்ஸ்பியருக்கு ஆயிரம் பவுன் கொடுத்து உதவினார்.



## சில குடும்ப ஸம்பவங்கள்

1596-ல் ஷேக்ஸ்பியரின் மகன் ஹாம்நெட் இறந்து போனான். அப்பொழுது அவர் தமது ஊருக்குச் சென்று வந்தார். தாம் முதன் முதல் அங்கு விட்டு அகன்றதின்பின் அதுவரை அவர் அங்கு போயிருந்ததாகத் தெரியவில்லை.

இக்காலத்தில் ஷேக்ஸ்பியரது தகப்பனாரின் தரித்திர தசையும் நீங்கிற்று. அவர் தமக்கு ஒரு பிருதுப்பட்டயம் (Goat of Arms) வேண்டுமென்று, பிரவர ஸபையாருக்கு (Herald's Court) மனுச் செய்து கொண்டார். அந்தப் பட்டயம் அவருக்கு 1599-ம் ஆண்டில் அளிக்கப்பட்டது.

1597-ல் நமது கவி, ஸ்ட்ராட்போர்டிலுள்ள மிகப் பெரிதான புதுமனை (New Place) என்ற வீட்டை விலைக்கு வாங்கினார். சில வருஷங்கள் கழிந்த பின், ஊரோரமாக நூறு ஏக்கராக்களுக்கு அதிகமாக நிலங்களை வாங்கியது மன்றி, நூற்றுக்குப் பத்து வீதம் வருமான முள்ள ஒத்தி, அடமானங்களிலும் விசேஷமான பணத்தை வட்டிக்குப் போட்டார்.

## கவியின் நாடகங்களின் இரண்டாம் தசை

இதன் மத்தியில், லண்டனில், அவருக்குப் பெரிய நாடக கவியென்ற கியாதி விருத்தியாய்க் கொண்டே வந்தது. அவர் முதன் முதல் எழுதிய நாடகங்கள் மற்றையோர் எழுதியவைகளைப்போன்றே யிருந்தாலும் அவை அவற்றினும் சிறந்தவையாகவே யிருந்தன. இப்போது அவர், வீர ரஸமும், தமது சொந்த யுக்திகளும், கற்பனைகளுமிகுந்த நாடகங்களை ஸ்வயமாகவே இயற்ற ஆரம்பித்தார். ரோமாபுரி போப் அரசரின் (The Pope of Rome) அதிக்கிரமத்தை வெட்டெனக் கண்டிக்கும் கருத்துகள் நிறைந்துள்ள ஜான் அரசன் (King John) என்ற நாடகம் 1595-ல் வெளியாயிற்று. அதன் பின் ஒன்று அல்லது இரண்டு வருஷங்களுக்குப் பின் ஹென்றி அரசன்

என்ற நாடகத்தின் (King Henry IV) இரண்டு பாகங்களும் வெளியாயின. நாலாவது ஹென்றியில் நடித்த ஒப்பற்ற பால்ஸ்டாப் (Falstaff) என்னும் வீரனைக் கண்ணுற்ற எலிஸபெத் இராணி அடங்கா மகிழ்ச்சியடைந்து, இந்த வீரன் காம வலையிலகப்பட்ட பொழுது எவ்வாறு நடந்தானென்று நடித்துக் காட்டும்படிக் கட்டளையிட, அக்கட்டளைக் கிணங்கியே, ஷேக்ஸ்பியர் "விண்ட்ஸர் நகரத்து விசாரமற்ற ஸ்திரீகள்" என்ற நாடகத்தை எழுதினாராம். ஐந்தாம் ஹென்றி (Henry V) யென்ற நாடகம் 1599-ம் வருஷத்திலோ, அதற்குக் கொஞ்சம் முன் பின்னாகவோ வெளியாயிற்று. அத்துடன், ஷேக்ஸ்பியர் இங்கிலாந்து தேச சரித்திர சம்பந்தமாகக் கெம்பீரமான நடையில் எழுதிய நாடகங்களும் முடிவுக்கு வந்தன. எட்டாம் ஹென்றி (Henry VIII) யென்ற நாடகம் கொஞ்ச காலத்துக்குப் பின் வெளியாயிற்றென்றாலும், அது முழுவதும் அவர் எழுதியதல்ல. அதில் ஒரு பாகம் மாத்திரமே அவரால் எழுதப்பட்டது.

இதே காலத்தில்தான், அதாவது இந்தப் பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில், ஷேக்ஸ்பியர் தமது அதிமனோகரமான வெனிஸ் வணிகன் (The Merchant of Venice), வீணுக்குப் பட்ட பெரும்பாடு (Much Ado about Nothing), உன் இஷ்டப்படி (As you like it), பன்னிரண்டாம் இரவு (Twelfth Night), நன்றாய் முடிவது எல்லாம் நன்று (All is well that ends well) என்ற நாடகங்களை இயற்றினார். "உன் இஷ்டப்படி" என்ற நாடகத்தில் வரும் வன வர்ணனையைக் கவனித்தால், அதில், அவர் தமது இளமையில் தாம் சுற்றித் திரிந்த வாரிக்ஷயர் வனங்களையே சிறப்பித்துக் கூறியிருக்கின்றார் என்று தோன்றுகின்றது.

1593 அல்லது 1594-ல் தான் அவர் தமது சீட்டுக்கவிகள் (Sonnets) அனைத்தையுமோ, அல்லது அவற்றில் பெரும்பான்மையானவையையோ எழுதியதாக, அவரது நூல்களை ஆராய்ந்தவர்கள் நிர்மாணித்திருக்கின்றனர்.

இந்த அழகான சிறு பாடல்களில், நமது கவி, தமது ஜீவிய சம்பந்தமான இரஹஸ்யங்களையும், தம்மனதில் உதித்த கருத்துக்களையும் வெளிப்படையாய் எல்லாரும் அறியச் சொல்லியிருக்கின்றார் என்று ஒரு சாரார் அபிப்பிராயப்படுகின்றனர். வேறொரு சாரார் ஷேக்ஸ்பியர் தமது மனதில் தோன்றிய கற்பனைகளுக்கு உயிரும் உடம்பும் அளித்து, தமது நாடகங்களில் நிகழ்ந்தனவாகத் தாம் கூறிய ஸம்பவங்களைப் போல், இவையும் நிகழ்ந்தனவாக எழுதியிட்டதாகக் கருதுகின்றனர் அவற்றில் அனேகம் இளம்பிராய



மும், கலியாணமாகாமலிருந்தவரும், ஷேக்ஸ்பியரின் வள்ளலுமான ஸௌத்தாம்ப்டன் பிரபுவைப் புகழ்ந்து பாடியவை யென்பதில் ஐயமில்லை. அவ்வாறு அவரைப் புகழ்ந்து பாடுகையில், கவியானவர் தமது நிலைமையையும் ஓரோரிடங்களில் சூசனையாய்க் குறித்துக் காட்டியிருக்கலாமென்றும் தோன்றுகின்றது.

## கவியின் நாடகங்களின் மூன்றாம் தசை

அடுத்த நூற்றாண்டின் துவக்கத்தில் ஷேக்ஸ்பியர், மஹத்தான கஷ்டங்களும், துக்க சம்பவங்களும் மலிந்துள்ள மிகச் சிறந்த ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar), ஹாம்லெட் (Hamlet), ஒதெல்லோ (Othello), மாக்பெத் (Macbeth), லியர் (Lear), கரியோலானஸ் (Coriolanus) முதலிய நாடகங்களையும் வேறு நாடகங்களையும் அதிநுட்ப புத்தி சாமர்த்தியங்களுடன் எழுதினார். ஷேக்ஸ்பியருக்கு முன்னிருந்த ஆங்கிலப் புலவர்கள் ஒருவராவது, அவர் மேல் குறித்த நாடகங்களில் எழுதியுள்ளபடி ஊழ்வினையின் கொடுமையினால் ஏற்படும் ஏற்றத் தாழ்ச்சிகளையும், மனிதரது மனோரதங்கள் நிறைவேறாமல் வீணாய்ப் போவதையும் அவ்வளவு சாதுர்யமாக எழுதியிருக்கவில்லை. உலக வாழ்க்கை ருசியற்றது என்றும், மனித வாழ்க்கையில் அப்போதைக்கப்போது நிகழும் நடவடிக்கைகளை உள்ளபடி ஆராய்ந்தறிந்து அவற்றை அடக்கியாள மனிதன் சக்தியற்றவன் என்றும் தாம் அனுபவஸித்தமாகக் கண்டதையே கவி இந் நாடகங்களில் எழுதியிருப்பதாகத் தோன்றுகின்றது.

## கடைசியாக இயற்றிய நாடகங்கள்

இந்த மனவிருள் நாளடைவில் நமது கவியை விட்டு அகலவும் அவர் கடைசியாக ஸிம்பலின் (Cymbaline), பிரசண்டமாருதம் (The Tempest), கார்காலக் கதை (The Winter's Tale) என்னும் நாடகங்களை எழுதினார். இந் நாடகங்களில் காணும் இளம் வெயில்போன்ற மனோல்லாசமானது, லியர், மாக்பெத், ஹாம்லெட் என்னும் நாடகங்களில் காணப்படும் கோரமான கொடுமைகளுக்கு முற்றும் மாறாயிருக்கின்றது.

கடைசியாக எழுதிய இந்த நாடகங்களில், நமது கவி கொடிய தீமைகளையும் மன்னிப்பது எவ்வளவோ உத்தமமான காரியம் என்று வெகு அழகாக வருணித்திருக்கின்றார். நெடுநாள் விரோதித்துப் பிரிந்திருப்பவர் வேற்றுமையொழிந்து நேசங்கொள்வதையும், கலைந்துபோன குடும்பங்கள் திரும்பச் சேர்வதையும் அவர் வருணித்திருப்பது வெகு அழகாகவிருக்கின்றன.

ஸிம்பலினிலும், பிரசண்ட மாருதத்திலும் வரும் இமோஜனும் (Imogen), மிராண்டாவும் (Miranda) ஷேக்ஸ்பியர் வருணித்துள்ள உத்தம ஸ்திரீகளில் இருவராவார்கள். கார்காலக் கதையில் வரும் பெர்டிடா (Perdita) புஷ்பமுங் கையுமாய் வரும் வருணனைக்கும் உயர்ந்த வருணனையும் உண்டோ?

## இலண்டனை விட்டகன்றது

கார்காலக் கதையும், பிரசண்டமாருதமும் 1610 அல்லது 1611-ல் எழுதப்பட்டன. அப்போதோ அல்லது அதற்குக் கொஞ்சம் முன் பின்னாகவோ, ஷேக்ஸ்பியர் நாடக மேடையிலிருந்து விலகித் தம் அந்திய காலத்தைத் தமது பிறந்த ஊரில் கழிக்க வந்துவிட்டார். ஏற்கனவே சொல்லியபடி இதற்குப் பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன், ஷேக்ஸ்பியர் அவ்வூரின் பழைய உபகாரிகளில் ஒருவராகிய ஸர் ஹியூ கிளாப்டன் (Sir Hugh Clopton) என்பவருடைய புது மனை யென்னும் பாழடைந்த மாளிகையை வாங்கியிருந்தார். அவர் அதைப் பழுதுபார்த்துச் சீர்படுத்தி, அதைச் சேர்ந்த தோட்டத்தில், அடுத்த நூற்றாண்டின் மத்திவரை வாழ்ந்துவந்த, பிரசித்திபெற்ற முசுக்கட்டை மரத்தையும் (Mulberry) நட்டார்.

புது மனை என்னும் வீடு அழிந்துபோய் வெகு காலமாயிற்று. என்றாலும், அது நின்ற நிலமும், அதைச் சுற்றியிருந்த தோட்டமும் மஹா ஜனங்களால் விலைக்கு வாங்கப்பட்டுப் பொதுஜன உபயோகத்திற்காகக் காக்கப்பட்டு வருகின்றன.

புது மனைக்குச் சிறிது தூரத்தில்தான், அற்றைக்கு (1610) நாற்பது வருஷங்களுக்கு முன் நமது கவி கல்வி பயின்ற திருச்சிலுவைச் சபையாரின் பஜனைக் கூடமும் (Guild Chapel of the Holy Cross), அதே ஸபையாரின் கிரந்த பாடசாலையும் இருந்தன. அவைகளுக்குக் கொஞ்ச தூரத்துக்கு அப்பால், நதியின் கரையோரமாயிருந்த மரங்களினிடையில் கம்பீரமும் விசாலமுமான ஸ்ரீ திரிமூர்த்தி ஆலயம் (The Church of the Holy Trinity) ஆகாயத்தை அளாவிக் கொண்டு விளங்கி நின்றது.

ஊருக்கு வெளியே அவரது தாய் தனது இளம் பருவத்தைக் கழித்த வில்ம்கோட் என்னும் கிராமமும், அவரது பழைய விரோதியின் போன் பூபதியாய் வாழ்ந்து வந்த சார்லிகோட் என்னும் கிராமமுமிருந்தன. இவற்றிற்கும் ஸ்ட்ராட்போர்டுக்கும் வெகு தூரம் இருக்கவில்லை.

# ஆராய்ச்சி மேடை.

இத்தலைப்பின் கீழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, சமஸ்கிரதம், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் வரும் புத்தகங்களுக்கு மட்டும் மதிப்புரை எழுதப்படுகிறது. மதிப்புரை விரும்புவோர் பிரதி ஒவ்வொன்றிலும் 2 வீதமாக அனுப்பவேண்டும்; அன்றேல் கவனிக்கப்படமாட்டாது.

## வேள் பாரி.

ஆசிரியர்: திரு. மு. க காந்திதாசன் அவர்கள், பர்மா.

முல்லைக்குப் பொற்றேர் தந்து அதன் வளர்ச்சியில்கூடக் கவலை செலுத்தி ரக்ஷித்த கடையெழு வள்ளல்களில் ஒருவரும், பறம்பு நாட்டை ராஜதானியாக அமைத்து சீரும், சிறப்பும், வளமும், தர்மமும் நிலவக் கோலோச்சி, தன்னுயிரையே தானமாக வளங்கி, நிரந்தரமான புகழ் படைத்து, தனக்குத் தானே உவமையான கொடையாளி பாரி மன்னனின் சரிதையைச் சுருக்கி விளக்கி யெடுத்தோதும் இச் சிறு நூல்.

இதனைத் தமிழர்கள் ஆவலுடன் வாசிக்க வேண்டிய தென்போம். முன்னோர்களின் தீரம், வீரம், தியாகம், சத்தியம் முதலிய உத்தம குணங்கள் அறிவதற்கு இவ்விதமான நூல்களே சிறந்த சாதனமாயிருக்கின்றன. இஃது எளிய நடையில், முறைபட எழுதியிருப்பதால் விசேஷமாக மாணவர்களும் இளைஞர்களும் இதனைக் கற்பது அவஸ்யம்.

விலை. அணா 8. கிடைக்குமிடம்:

நவீன கதா புத்தகசாலை, 215, மங்கமாரி வீதி, ரங்கூன்.

## தேஹவியோகம்

இந்த ஒதுக்கான இடத்தில் ஐந்தாறு வருஷம் தமது மனைவி, பெண்களுடனும் ஒரு பேத்தியுடனும் தமது காலத்தைக் கழித்து, தமது 53-ம் பிறந்த நாளில், அதாவது 23-4-1616-ல் ஷேக்ஸ்பியர் தேஹவியோகமாயினர். எனினும் அவர் அறிஞர்களிடத்தில் இன்னும் இறக்காதவர் போன்றே இருந்து வருகின்றார் அறிஞர்க்குச் சாவேது. அவர்களது பூதவுடம்பு நீங்கினும் புகழுடம்பு நின்று அவர்தம் பணியைத் தொடர்ந்து ஆற்றிவருமன்றோ.

## பழனி ஸ்தல மகத்துவம்.

ஆசிரியர்: திரு. சி. கு. நாராயணஸ்வாமி முதலியார் அவர்கள்,
கோயமுத்தூர்.

ஸ்ரீ முருகக் கடவுள் திருக்கோயில் கொண்டிருக்கும் ஸ்தலங்களுள் திருவாவினன்குடியென நூல்களில் சொல்லப்பெற்றுவரும் பழனியம்பதியிலுள்ள குன்று தோறாடும் குமரன் கோயிலே, பெருமைக்கும் மகிமைக்கும் தற்போது உதாரணமாக இருந்து வருகின்றதென்பது பக்தர்கள் அனுபவம்.

தமிழ் மக்கள் இக் கோயிலுக்குத் திருப்பணி நிறைவேற்றத் திரள் திரளாகச் சென்று தங்கள் கோரிக்கையை நிறைவேற்றி வருவதைப்பற்றிக் குறிப்பிட வேண்டியதில்லை. ஆனால், கும்பல் கும்பலாகச் சென்று கூடி ஆடித் திரும்பும் குழாத்தினரே அதிகமாகும். இவர்களில், அங்கு அறிய வேண்டியவைகளைச் சிறிதும் அறிவதற்கு முடியாமலே சிரமமுற்று வரும் பிரயாணிகளின் தொகை மிக அதிகமென்றே சொல்லவேண்டும். பணத்தைச் செலவிட்டும் விஷயங்களை அறியாது திரும்பும் இவர்களைப்போன்ற மக்களுக்கு பழனி ஸ்தல மகாத்மியம் என்னும் இந் நூல் மிகவும் உதவியாயிருக்கிறது. இதில் அந் நகரினதும் கோயிலினதும் பூர்வோத்திரங்களும் பின்னர் அது சம்பந்தமான பிறவும் தெளிவாகவும் விரிவாகவும் பல சித்திரப் படங்களைக்கொண்டு வெளியிடப் பெற்றிருக்கின்றது. படங்கள் அனைத்தும் கோயில் கொண்டிருக்கும் மூர்த்தியும், அடியார்களும், வாவியும், கோபுரமும், மண்டபமும், மலைக் காக்ஷியும், நகரத் தோற்றமும் ஆகியவையேயாம்.

பழனி யாத்ரீகர்களுக்கு இந் நூல் மிகவும் அவஸ்யமாகும். இதன் உதவியை பிரயாணி ஒருவரே உள்ளவாறு சொல்லத்தக்க நிலைமையில், அத்தன்மையதான விளக்கத்துடன் எழுதப் பெற்றிருக்கிறதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

விலை அணா 12.

---

## கடோப நிஷதம்.

ஆசிரியர்: திரு. எம். ஆர். ஜம்புநாதன் அவர்கள்.

நெடுங்காலத்திற்கு முந்தியதும், மகரிஷிகளால் கொண்டாடப் பெற்று வருவதுமாகிய கடோப நிஷத் என்னும் சமஸ்கிரத நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகிய இதனை வரவேற்கின்றோம்.

இஃது சமஸ்கிரத ஸ்லோகங்களுடனும் தமிழ் அர்த்தத்துடனும் வெளியிட்டிருப்பது, தமிழ் தெரிந்தவர்களுக்கேயன்றி சமஸ்கிரதம் அறிந்தவர்களுக்கும் மிகுந்த பயன் தரத் தக்கதாம்.



வாசஸ்வார் என்னும் ரிஷியானவர், யாகம் செய்து, தானம் வழங்குங்கால், பயனற்றவையாகத் தோன்றியவைகளை வழங்கி வருவதைக்கண்ட மகனுசிய நசிகேதஸ், இதனைத் தந்தைபால் விரித்துக் கூறி, தன்னை யாருக்குக் கொடுக்க விருப்பமெனக் கேட்கவே, தந்தை சினமூண்டு 'எம ராஜனுக்கு' என ஓராது உரைத்துவிடவும், நசிகேதஸ், தந்தை சொல்லைக் கடவாது தர்மனின்பால் சென்று, தந்தையின் ஆக்ஞையைத் தெரியப்படுத்தித் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டவே, அஞ்சாமையும், நேர்மையும், தீரமும், தியாகமும், சத்தியமும் வாய்க்கப்பெற்ற நசிகேதஸினிடம் எமதர்மன் கருணை பூண்டு, அவனுக்கு வாழ்க்கை இரகசியங்களையுரைத்து, தந்தையிடம் அனுப்பிவைத்ததே கதையின் சாராம்ஸமாகும்.

தத்துவார்த்தம் நிறைந்து பொலிந்த இந் நூல், வாழ்க்கையின் உண்மையை உணர்த்துவதாயும், இகபர இரகஸியங்களைத் தெளிவு படுத்துவதாயு மிருக்கின்றது. இக் கடோப நிஷத் முன்னர் இம் முறையில் வந்ததில்லை யானதினால், ஒவ்வொருவரும் வாசிக்க முயலுவார்களாக.

உயிரைப் பெரிதும் மதித்து, அடிமையில் கிடந்து, அஞ்சாமை, வீரம், தீரம், தியாகம், சத்தியமாகிய செந்நெறி பற்றுதிருக்கும் இந்திய மக்களுக்கு இந் நூல் ஓர் நற்றுணையாகும்.

விலை: அணா 8. கிடைக்குமிடம்:

ஜம்புநாதன் புத்தகசாலை, 14, பள்ளியப்பன் தெரு,
சென்னை.

---

## மான விஜயம்.

பிரசுரித்தவர்:

திரு. வி. சூ. சுவாமிநாதன் அவர்கள்,
புத்தக வியாபாரம், மதுரை.

இஃது அகவற்பா, வெண்பா, விருத்தப்பா இவைகளால் ஆக்கப்பெற்ற சரித்திர சம்பந்தமான நாடக நூலாகும். இதனைக் காலஞ்சென்ற திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி (B. A.) அவர்கள் எழுதி, அவராலேயே முதற் பதிப்பு பிரசுரிக்கப் பெற்றது. இது போது வந்துள்ளது 2-ம் பதிப்பாகும். இதில் புதிதாக, அண்ணாமலை பல்கலை கழகத்தின் தமிழ்ப் பண்டிதர் திரு. ந. பலராமய்யர் அவர்களின் ஆராய்ச்சி முகவுரையும் குறிப்புரைகளும் சேர்த்திருப்பது சிலாகிக்கத் தக்கதாகும்.

விலை ரூ 1.

---

# அறிக்கை.

---

'பாரதி'யின் பிரதிநிதிகள்:

1. திரு. P. S. சுப்பராஜா அவர்கள், இராஜபாளையம்.
2. ,, R. சண்முகம் பிள்ளை அவர்கள், மதுரை.
3. ,, கா. செ. பொன்னழகர்சாமி செட்டியார் அவர்கள், வடுகபட்டி.
4. ,, P. சொர்னமணி அவர்கள், போடிநாயக்கனூர்.
5. ,, அ. அன்ன காமாக்ஷி செட்டியார் அவர்கள், தேனி.
6. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள், கூடலூர்.
7. ,, பெ. தா. வெ. தாசன் செட்டியார் அவர்கள், கம்பம்.
8. ,, R. திருமலைஜக்கையா அவர்கள், கோம்பை.
9. ,, K. இராஜகோபால் அவர்கள், தேவாரம்.

---

# பம்பாய் ஏஜெண்டு.

---

**MR. S. R. SUBRAMANYAM,**
**"SOBAN BHUWAN,"**
**MANCHERJI JOSHI ROAD,**
**PARSI COLONY, DADAR,**
**BOMBAY No. 14.**

மேற்கண்ட பிரதிநிதிகளிடமும் ஏஜெண்டிடமும் 'பாரதி'க்கு சந்தா செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், "பாரதி."

---

# ஆசிரியர் குறிப்புகள்.

## 'பாரதி'யின் தாமதம்

இந்த ஆனி—ஆடி மாதத்திற்குச் சேர்ந்து ஒரே பத்திரிகையாகப் பிரசுரிக்கச் சிறிதும் எண்ணினோமில்லை. இவ்வாண்டு வி. பி. அனுப்பும் பணியால், பத்திரிகையைக் குறிப்பிட்ட காலத்தில் வெளியிட முடியாது போனதினாலேயே இரண்டு மாதப் பத்திரிகையும் ஒன்றாக வெளியிட வேண்டியதாயிற்று. இனி அவ்விதமின்றி பிரதி மாதமும் தாமதியாது 'பாரதி' வெளிவந்து அன்பர்களை மகிழ்விக்குமெனவே உறுதி கூறுகின்றோம்.

## முகப்பில் மூவர்ணப் படம்

சென்ற 1932-ம் வருஷ ஜனவரி மீ முதல் மதுரையிலிருந்து, உருவிலும் வடிவிலும் பெரிதாக வெளிவரும் 'பாரதி'யின் முகப்புப் படத்தை மூவர்ணத்தில் பிரசுரிக்கவே எண்ணியிருந்தோம். காலநிலை ஒத்து வாராததால் அந் நினைப்பை விட்டுவிட நேர்ந்தது. எனினும் வர்ணப் படம் 'பாரதி'யை அழகு செய்வதாக விருப்பதால், இந்த வடிவிலேயே அந்த வர்ணப் படத்தைப் பதிப்பிக்கத் தீர்மானித்துள்ளோம். இதற்குப் பல சித்திர நிபுணர்களதும் அறிஞர்களதும் உதவி தேவையாயிருக்கின்றது.

இதுபோது நாமறிந்த சிறந்த சித்திர நிபுணர்கள் சிறைவாசமுற்று வருகின்றார்கள். ஆயினும், அறிஞர்களும் அனுபவசாலிகளும் சித்திர வல்லுனரும் தங்கள் கருத்தையும் முயற்சியையும் இதற்காகச் செலவிட்டு, ஓர் முடிவைத் தெரிந்தெடுக்க உதவுமாறு வேண்டுகின்றோம்.

இதுபோது அச்சிட்டு வரும் முகப்பு (Tital) பிளாக்கை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாகவே மூவர்ணப் படத்தை வெளியிடுவதாகவுள்ளோம். இந்த மூவர்ணப் படத்தில் இந்தியரின் கலை விளக்கமும், வீரப் பிரதாபச் சித்திரங்களும், ஞானத் தெளிவும், செல்வப் பெருமிதமும், வியாபாரச் செழிப்பும், தொழில் அபிவிருத்தி முதலானவைகளுடன் தேவிபாரதி தன்னருளொளிரு முகத்தினளாய் அலங்கார ரூபிணியாய் தேஜோ மயமாய், சர்வ மத சின்னங்களுடன் அன்னார்களுக்கு காக்ஷி நல்கும் விதமாக விளங்கும் நிலைமையில், இந்தியாவின் படத்தோடு சித்திரம் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். இஃ

தன்றி, அறிஞர்களானோர் இதனில், கூட்டியோ, குறைத்தோ, தங்கள் அறிவிப்பைஅல்லது முயற்சித்து ஆக்கிய சித்திரத்தை அனுப்பி வைப்பதாயினும் சரியே. ஆனால் சித்திரம் வரைவதற்கு முன்னர் திட்டம் செய்த விஷயத்தை இங்கு அறிவித்துச் செய்வதே உசிதமும் நலமுமாகும் என அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

இம் முகப்புப் படம் அருளும் அழகும் பிறவும் ஒளிரும் விதமாக அமைவதையே எதிர்பார்க்கின்றோம். இந்த முகப்புப் படம் என்றும் யாரும் விரும்பும் வண்ணமாக விளங்குவது மிக மிக அவஸ்யமெனக் கருதியே, தேசத்தாரின் தீர்மானத்திற்கு விட்டிருக்கின்றோம். இதன் முடிவு நாட்டாரின் விருப்பமாகையினால், தமிழர்களின் அறிவும் அனுபவமும் இந்த ஓர் படத்தின் மூலமாகத் தெரிவது—விளக்குவது விரும்பத் தக்கதாகும். இந்த எமது விருப்பத்திற்கு விற்பன்னர்கள் ஆதரவை விரும்பி, முயற்சியின் பயனை எதிர்பார்க்கின்றோம்.

## வெடி குண்டு வீச்சுகள்!

இந்தியாவில் புதிய தொல்லையாகவே வெடி குண்டு வீசிவரும் இயக்கம் பரவியிருக்கிறது. இது வெறுக்கத் தக்கதும் பெரு நஷ்டத்தை விளைவிக்கத் தக்கதுமாகும். போதிய ஆயுத பலமற்ற நிலையில் புரட்சியைக் கொள்வது ஆபத்தாகவே முடியும். சிறுவர்களும் தீவிரவாதிகளுமே இச் செயலைச் செய்துவரக் கூடுமென ஊகிக்கவேண்டும். இதனைச் சிறிதும் பரவ விடாமல் சர்க்காரும் வேண்டிய முயற்சிகளைக் கைக்கொண்டுதான் வருகிறது. ஆயினும் அவர்களின் முயற்சி மட்டும் நின்றபாடில்லை. இவ்விதத் தொல்லைகளினால் ஒன்றுமறியாதார், அழிவும் அலங்கோலமும், பெரும் பொருள் நஷ்டமு முறுகிறார்கள். நாட்டில் சமாதானம் நிலவும்படி செய்தால், சிறுவர்களின் தேச பக்தி இவ்வித விஷமத்தனமான செயல்களில் நாடாது, பல நிர்மாண வேலைகளில் முனைய வசதியாகும். ஒவ்வொன்றுக்கும் காரணம் இன்று இந்தியா கவர்ன்மெண்டாகவே இருக்கிறதென்ப திருக்க, புரட்சிச் செயலைக் கைக்கொண்டுள்ளோர் அறியவேண்டிய விஷயம் அனந்தம்; அவற்றில் ஒன்றுமட்டும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவஸ்யமாகும்.

நாட்டின் நிலைமைக்கும் மக்களின் போக்கிற்கும் ஏற்ற ஒரு காரியத்தைக் காலங்கண்டு செய்வதே அறிவுடைமையும் பயன்தரத் தக்கதுமாகும். அவ்வாறின்றி, தான்றோன்றித் தம்பிரான்களாகக் 'கண்டதே காக்ஷி; கொண்டதே கோல'மென நாட்டுக்கும் மக்களுக்கும் தம் சந்ததிகளுக்கும் ஒருங்கே தீமை பயப்பதான கொலை, கொள்ளை, வெடி குண்டு போடல் முதலியவை தேசாபிமானத்தைக் காட்டுவதாமோ? இதனை வெறிபிடித்தவர்களின் செயலுக்கே ஒப்பிடவேண்டியிருக்கின்றது.



இஃதன்றி புதிதாக தபால் நிலயங்களிலும் இன்னார்களின் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது விசனிக்கற்பாலதே. தபால் பெட்டிகளில் தீயிடுதல், அங்கும் குண்டு போடல் ஆகியவை செய்வதினால், என்ன பயன் விளைந்துவிடப் போகின்றதோ அறியோம். ஆனால், இவர்களின் இவ்விதமான செயல்களினால் பாமர மக்களும் ஒன்றுமறியாத இந்தியருமே அரசாங்கத்தின் சீற்றத்திற்கு ஆளாகவேண்டியிருக்கிறது. இவ்விதமாகவா அவர்கள் பயனை யெதிர்பார்க்கின்றார்கள்? அன்றி தேசத்தார் முனைந்து ஒருவழிபற்றிச் செல்லும் இயக்கத்தை மறுக்கின்றார்களா? என்றறிவது நலமாகும். அடிமையில் கிடந்துழலும் பாதகண்டத்தை மீண்டும் நன்னிலைமையில் காணவேண்டி, இன்று எத்தனைபேர் தம் பொருள்களையும், மனைவி-மக்கள், தாய்-தந்தையாகியவற்றையும், சுகபோகங்களையும் மறந்து சிறையிலும் வெளியிலும் வசித்து வருகின்றார்கள்! பயனற்ற விஷயங்களில் உயிரைத் திரணமாக அழித்து, என்றும் மாசு நிலவச் செய்வதாம் நிலமைக்கொவ்வாத இவ் விஷமச் செயலைச் செய்வதுதான் தேசாபிமானமா? நிலமை, சந்தர்ப்பம், தகுதி ஆகியவைகளை அறிந்தே இன்று செல்வமிழந்த—உரிமையற்ற இந்திய மக்கள் நாட்டுத் தொண்டை பொறுமையெனும் புதிய ஆயுதங் கண்டு பணியாற்றி வருகின்றார்கள். இதற்குத் துணையாக வில்லாவிடினும் எதிர்ப்புப்போன்ற நாசம் தருவதாகிய செயல் செய்யாமலிருப்பது பெரிதும் உபகாரமாகுமன்றோ?

அரசாங்கத்தைப் பயமுறுத்தச் செய்வதற்காகவே இவர்கள் இவ்வித கொடுஞ் செயல்கள் செய்வதாகச் சொல்லப்பட்டு வருகிறதென அறிகின்றோம். அரசாங்கம் அஞ்சினாலும் மிஞ்சினாலும் நமக்காவதென்ன? நம் கையே நமக்குதவி யன்றோ! சுயராஜ்யம் பிறரால் கொடுக்கப்பட்டு நாம் பெறக்கூடியதா? நமது முயற்சியாலும் நியாயமான தியாகத்தாலும், சத்தியமான நடத்தையாலுமே அஃது நம்மையடையத் தக்கதாகும். நமது நிலைமை சரியாக வந்துவிடில் அரசாங்கம் நம்முடையதாகவே இருக்கும். ஆத்திரமும் அவசரமும் நாசத்தையே தருவதால், தீவிர போக்கைப் பின்பற்றுவோர்கள், தங்கள் தவறையுணர்ந்து, வேகத்தைக் குறைத்து நாட்டுக்கு நலன்தரும் வழியைப் பின்பற்ற வேண்டுகின்றோம்.

## நமது சுற்றுப் பிரயாணம்

'பாரதி'க்குத் தாயகத்தில் விரும்பியவாறு ஆதரவு அதிகமில்லையென்பது வெளிப்படை. ஆனால் அவர்தம் ஆசிகளுக்கோ குறைவில்லையென்று சொல்ல ஒருவாறு மகிழ்ச்சி யடைகின்றோம். பிறந்து வளருமிடத்தில் சீரும் சிறப்புமுற்று வெளிவர, 'பாரதி'க்குக் காலம் இன்னும் வரவில்லையென்றாலும், தமிழகத்தில் அதன் வளர்ச்சிக்கு ஆதரவிருந்து வருவது கண்டேனும் ஆனந்தமடையவேண்டும்.

நாடுவிட்டு, வெளி நாடு சென்று, வாழ்க்கையில் வெற்றியும் புகழும் தேடிவரும் அயல்நாடுறையும் அனைவருக்கும் தேவியின் கிருபையும் அருளும் நிறைவதாக.

இன்று 'பாரதியின்' அன்பர்களில் அயல் நாடு சென்று வதியும் தமிழச் சோதரர்களே அபரிமிதமான சந்தாதார்களாயிருக்கின்றார்கள். இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் எத்தனையோ சிரமத்திற்கு மத்தியில், போராட்டத்தை நடத்திக்கொண்டும், வாழ்க்கைக்குப் பொருளீட்டிக்கொண்டுமிருக்கும் இவ்வன்பர்கள் தாயகத்தில் நடக்கும் நல்ல நல்ல துறைகளில் கலந்து வருவது போற்றத் தக்கதாகும். ஆனால் இந் நாடுகளில் பணப் பஞ்சமும், தொழிலற்றார் நிலையும் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருவதொன்றே வருந்தத்தக்க விஷயமாகும்.

தொழிலாளர் நாளுக்கு நாள் தாயகம் திரும்பும்போதும் பணப் பஞ்சம் மிகுந்து வரும்போதும், 'பாரதி'யின்பால் அன்புகொண்ட இந் நண்பர்கள், நம்மை அதன் விருத்திக்காக அழைத்திருப்பதுபற்றி மிகவும் மகிழ்ச்சி யடைகின்றோம்.

கஷ்டமும் பணப் பஞ்சமும் அதிகமாகவிருந்தாலும், 'பாரதி'க்கு இவை அவ்வளவு இடையூறு யிருக்காதெனக் குறிப்பிட்டுள்ள அன்பர்களின் அறிவிப்பை வரவேற்கின்றோம். எப்படியும் உதவி செய்ய முனைந்து, எதிர்பார்த்திருக்கும் இந் நேயர்களனைவருக்கும் நமது நன்றியும் வந்தனமும் உரியதாகும்.

தற்போது இங்குப் பல அவஸ்யமான வேலைகள் நடந்தேற வேண்டியிருக்கின்றதினால், கடல் கடக்கும் இப் பிரயாணத்தை உடனே ஆரம்பிக்க முடியாமலிருப்பதுபற்றி அன்பர்கள் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம். வரும் புரட்டாசி மாதம் முதல் வாரத்திற்குள் இப்பணிகள் யாவும் நடைபெற்றுவிடுமாகையினால், அதுசமயம் நமது வெளிநாட்டுப் பிரயாணத்தைக் கீழ்ச் கண்டவாறு ஆரம்பிப்பதாகத் தீர்மானித்திருக்கின்றோம்.

முதலாவது பர்மாவையும் பின்னர் சிங்கப்பூர், மலேயாவையும் பார்த்துக்கொண்டு, இலங்கை வந்து வருவதாக. இந்த 4 நாடுகளிலும் 2 மாதங்களுக்குக் குறையாத பக்ஷமும் 3 மாதங்களுக்கு மேல் போகாதவாறும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கே காலம் இடந் தருவதாயிருக்கின்றது. அன்பர்கள் இதுபற்றிய மேற்கொண்ட விஷயங்களைச் சாங்கோபாங்கமாக அறிவித்து, நமது பிரயாணத்தில் செய்யவேண்டிய உதவிக்கு ஆதரவு மிகத் தேடவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகின்றோம். 'பாரதி'யின்பால் வேட்கையுற்று அதன் வளர்ச்சியில் கருத்தைச் செலுத்தும் நண்பர்கள் மட்டுமன்றி, ஒவ்வொரு சந்தா நேயரும் இதுபற்றி முயற்சி யெடுத்துக்கொண்டு, தம் தம் ஆதரவையும் அன்



பையும் காட்டத் தனித்தனி நிருப வாயிலாக அறிவிப்பதை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

### கூட்டுத் தொகுதியின் விசேஷ தன்மை

இந்தியாவில் ஜாதிப் பிரிவினைக்கும், பாஷை மிகுதிக்கும், மத வேறுபாடுகளுக்கும் குறைவில்லை. மற்ற எந்த நாட்டைப் பார்க்கிலும் பரத கண்டத்தில்தான் இவைகள் மலிந்திருக்கின்றன. இவைகளாற்றான் நாட்டின் நிலைமை முழுதும் சீர்கெட்ட தென்போம். ஓர் சமூகம், ஓர் மதம், ஓர் பாஷையைப் பெற்றிருக்கும் நாட்டைக் கண்டு, இன்று தாராள மனதுடைய இந்தியர் பொறாமைகொண்டு, வருந்தி கண்ணீர் வடிக்கின்றனர். அவர்கள் நினைப்பு: இந்தியாவில் இவ்விதப் பாகுபாடுகளிருந்துவரும் பரியந்தம் ஒருவித பயனும் நிலை பெறாதென்பதே இதனை ஒருவாறு ஒப்புக்கொள்ளுவதாயிருந்தாலும், ருஷியாவில் எத்தனையோ ஜாதிகள் இருக்கத்தான் செய்கின்றது; பாஷைகளும் அவ்விதமே அதிகமாயிருந்து வருகின்றது. ஆயினும் என்ன நிகழ்ந்துவருகின்றது! கொடுங்கோல் முடியை வீழ்த்தி, மக்கள் மகிழ அரசாங்கம் நடைபெற்றுக்கொண் டிருக்கவில்லையா?

மன்னிப்பும், தாராள நோக்கமும், நம்பிக்கையும், விட்டுக்கொடுத் தலும் நம்மவர்களுக்குள் மிக அதிகமாக வளராததாலேயே, ஜாதி- மத-பாஷை இவைகளால் வில்லங்கம் மலைபோல் வளர்ந்து, ஒழிக்க முடியாத சங்கடமுற்றிருக்கிறது, அவநம்பிக்கை முற்றிலும் ஒழிய வேண்டும். சிறு குற்றமோ பெரியதோ ஆயினும் தாராளமாய் மன் னிக்கவேண்டும். எதனையும் விசால நோக்கத்துடன் பார்க்கவேண்டும். ஆசையுறும் தகுதியுள்ள ஒருவருக்கு மகிழ்ச்சியுடன் விட்டுக்கொடுக்க இசையவேண்டும். இவ்விதமெல்லாம் கைக்கொள்வோமாயின் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்பவை எவை?

இன்று, பிராமணர்-அல்லாதார், சுயமரியாதைக்காரர்கள்-மதவெறி பிடித்தோர், சீர்திருத்தக்காரர்கள்-வைதீகர்கள், இந்துக்கள்-இஸ்லாமியர், மகமதியர்-சீக்கியர் முதலிய கக்ஷிகள் தோன்றி எதைக்குறியாகக் கொண்டு பணிசெய்து வருகின்றன? மேற் குறிப்பிட்ட நற் குணங்கள் மக்கள் மனதில் பதியாததும், நடபடிக்கைகளில் கைக்கொள்ளாததாலுமே இந்தக் கக்ஷிகள் இருந்து வருகின்றன. நாட்டினர் தாராள நோக்கம் படைக்காதிருந்துவரும் வரை இந்தக் கக்ஷிகளைப் போல எண்ணிறந்த கக்ஷிகள் உண்டாகவேசெய்யும். கக்ஷிகள் பெருக் கடையவே அவைகளும் இப்போதுள்ள சாதி சமயம்போல் தனித் தனியானவையாக ஒதுங்கிவிட வேண்டிவரும் என்பது இந்தியாவின் க்ஷேமத்தில் கவலை செலுத்துவாரின் முடிபாயிருக்கின்றது.

மக்கள் ஓர் முகமான நிலைமையிலிருந்தால்தான் எவ்விதச் சீர் திருத்தமும் நடைபெற முடியும். உப்புக்கும் புளிக்கும் உதவாததான

திருத்தப்பெற்ற சட்டங்கள், திட்டங்கள் இன்று எந் நிலைமைக்கு வந்துவிட்டன! உதாரணமாக ஓட்டுரிமையையே யெடுத்துக்கொள்ளுவோம்:

பஞ்சாயத்து போர்டு முதல் ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, கார்பரேஷன் ஈறாகவும், சட்டசபை, அரசாங்கசபை, மற்றும் சில்லரையான சபைகள் முதலாக என்னிலைமையிலிருந்து தொண்டாற்றி வருகின்றன? அவைகளின் சுதந்திரமும், வேலைத் திட்டங்களும் எவ்விதமெல்லாம் மாற்றப்பட்டும் சிதைக்கப்பெற்றும் வருகின்றன? இவைகளில் கக்ஷிப் பிரதி கக்ஷிகள் வேறும்! நாட்டுக்கு உருப்படியான வேலையொன்றும் செய்ய முடியாத இச் சபைகளுக்கு, அங்கத்தினர்கள் பெரும்பணம் செலவுசெய்து, நாட்டை வறுமைக்குள் விடுத்து, போட்டியில் தீவிரமாய்க் கலந்து, அங்கம் பெற்று, என்னதான் சாதிக்கப்போகின்றார்களோ என்பதைப் பின்பே அறியவேண்டும்!

இத்துடனமையாது சென்ற வருடத்தில் ஓட்டுரிமைபற்றி மாற்றஞ்செய்த திருத்தத்தால், பொதுத் தொகுதியைப் புறக்கணித்து, மகமதியர்களுக்கென்றும், கிறிஸ்தவர்களுக்கென்றும், ஒடுக்கப்பட்டவர்களுக்கென்றும் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பெற்றதினால் பெருந்தொல்லைகளே சம்பவித்து வருகின்றன. இவைகளொவ்வொன்றிலும் போட்டிகள் சொல்லத் தரமல்லாத அவ்வளவு அதிகப்படியாக இருந்து, கடாசியில் ஒருவரே தெரிந்தெடுக்கப்படுகின்றார்கள். இது எவ்வளவு கேவலமென்பதைக் கவனியுங்கள்.

பிரத்தியேகப்படுத்திய ஸ்தானங்களுக்கு மட்டுந்தான் போட்டியென்பதில்லை. மற்ற இந்து பொதுத் தொகுதிக்கும் இவ்விதமே போட்டியிருந்து வருகின்றது. தனித் தொகுதி யானதினால்தான் இவ்விதம் போட்டி யிடுகிறார்கள், பொதுத் தொகுதியாயின் இவ்விதம் நிகழாதென்பதுமில்லை. எப்பொழுதும் போட்டி யிருந்துதான்வரும். ஆனால், ஜனங்களின் உண்மையான ஊழியர்களே இவ்வித நிலையங்களில் அப்பொழுது ஸ்தானம்பெற அருகராவர். அவ்விதமாயின் அவர்கள் செய்யக்கூடிய சொற்ப வேலைகளும் சிறந்ததாயிருக்கும். ஒற்றுமையும் சகோதரத்வமும் நிலவும். வேற்றுமை அறவே ஒழியும். இத்தனை நன்மைக்கும் பயனுக்கும் சிறப்புக்கும் பல்லோராலும் விரும்பப்படும் பொதுத் தொகுதியே சிறந்ததாகு மென்பதிலையமில்லை.

அறிஞர்களுக்கும் அநுபவசாலிகளுக்கும் தொண்டில் பற்று மிக்கார்க்கும் ஏற்ற ஸ்தானங்கள் தனித் தொகுதியால் கிடைப்பது கூடாமையால், திட்டமிட்ட வேலைகள்கூட நடைபெற முடியாது கூட்டங் கூடிப் பேசிப் போவதிலேயே காலங் கடந்துவிடுகின்றது. இவ்விதமல்லாது, யாவருக்கும் ஒன்றான பொதுத் தொகுதியானால் திறமை



சாலிகளுக்கெல்லாம் சந்தர்ப்பம் வாய்க்கும். அப்பொழுது மக்களின் போக்குக்கும் தேவைக்கும் ஏற்றதாகவே இவர்களின் செயல்கள் நடைபெறும். கக்ஷிப் பிணக்குகள், மனஸ்தாபங்கள், புதிய கக்ஷிகள் தோன்றாது மறையும்; நாட்டுக்கு மிகுதியான நலமே விளையும் என்பதில் சந்தேகம் உண்டோ?

## 'பாரதி'யின் மாற்றம், மதுரையிலா? சென்னையிலா?

'பாரதி'யை மாற்றும் யோசனையை இன்னும் விட்டதாகவில்லை. ஆனால், 'பாரதி'க்கு இவ்வாண்டு நாட்டார் எவ்வளவு அதிகமாக ஆதரவு காட்டுகின்றார்களோ அதனை யறிந்துகொண்ட பின்னரே காரியாலயத்தை மாற்றவேண்டி யிருக்கின்றது. நாட்டின் நிலைமையும் பொருளாதார நெருக்கடியும் விரும்பத் தக்கதா யில்லாததினாலேயே இவ்விதம் ஆதரவை எதிர்பார்க்கவேண்டிய அவஸ்யம் நேர்ந்திருக்கின்றது. அன்பர்கள் யாவரும், நகரத்திலிருந்து 'பாரதி' வெளிவருவதை ஆவலுடன் எதிர் பார்ப்பதாகத் தெரிகின்றோம். என் செய்யலாம்! ஒவ்வொரு விஷயத்தையும் ஆழ்ந்து ஆராய்ந்தே முடிவு செய்யவேண்டியிருக்கின்றது இக் காலத்தில். முன்போல் செல்வநிலை மேன்மையாயிருந்தால், சிறிதும் யோசிக்க வேண்டியதில்லை. என்றாலும் வியாபார நிலைமையும் தேச சமாதானமும் நன்னிலை பெறும் பரியந்தம் மாற்றுவதற்குக் காத்திருக்க வேண்டியதில்லை யெனவே மதிக்கின்றோம். ஆனால், 'பாரதி' மதுரைக்கா? சென்னைக்கா? மாற்றப்படும் என்று ஒன்றும் குறிப்பிட முடியாது. போதிய வசதிகளும் நலமும் எங்கு அதிகமாகக் கிடைக்கக்கூடுமோ-இருக்கின்றதோ அங்குதான் செல்ல வேண்டி நேரிடும். சின்னாள் சென்றபின்னர் இதனைப்பற்றி அறிவிக்கப்படும். அதுபரியந்தம் இதுபற்றி அன்பர்கள் கவலையெடுக்க வேண்டாமென அறிவித்துத்துக் கொள்ளுகின்றோம்.

## மிதவாதிகளின் விழிப்பு

'அடிப்பார் அடித்தால் அம்மியும் நகரும்' என்பது தமிழ் நாட்டின் சாதாரண பழமொழி. எல்லாவற்றையும் தாங்கி மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை யென்ற வண்ணம், காங்கிரஸின் தொண்டையும் கவர்ன்மெண்டின் அடக்குமுறையையும் ஓர் நிலைப்படச் செய்வதற்காக முனைந்து உழைத்து, முன் ஒரு சமயம் வெற்றியும் பெற்ற திரு. சாப்ரூ, திரு. ஜெயகர் இவர்கள்கூட இதுசமயம் மனமாற்ற முடையவர்களா யிருக்கிறார்க ளென்றால், இந்தப் பெருமையை யாருக்குத்தருவது? இந்தியா மந்திரியாகிய சர். கோருக்கே அந்த பாக்கியம் என்பதில் சந்தேகம் வேண்டாம். கள்ளங்கபடற்று மனதில் தோன்றியதை வாயில் சொல்லி, செயலிலும் அதுபோலவே நடத்தும் இயல்பு முன்னிருந்த மந்திரிகளைக் காட்டி

லும் இந்த மந்திரியாரிடமே அதிகம் காண்கிறோம். இதற்காகப் பிரத்தியேகமாக இந்தியர்களின் நன்றி இன்னாருக்குக் கிடைக்கக் கூடியதாகவே இருக்கிறது.

பிரிடிஷ் அரசாங்கத்திற்கு நன்றியைச் சேமித்துவைத்துத் தரக்கூடிய மிதவாதிகளனைவரும், சமீபத்தில், இந்தியா மந்திரி வெளியிட்ட அறிக்கையால், இவர்களெண்ணியிருந்த எண்ணத்தைக் கைவிட நேர்ந்துவிட்டதுபற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. எப்படியும் அவர்களின் தேகத்தில் இந்திய ரத்தமே ஊறிக்கொண்டிருக்கிறதென்பதை இந்தப்போதேனும் காட்டினார்களே, அதுவே அவர்களின் தீரச் செயல்களில் முதன்மையானதாகும்.

பார்லிமெண்டில் மாற்றம் வேண்டாத கக்ஷியோ, தாராள நோக்கங் கொண்ட லிபரல் கக்ஷியோ, தொழிலாளர்களின் வாழ்வில் கவலை செலுத்தி அவர்களுக்காகவே ஸ்தானம் வகிக்கும் லேபர் கக்ஷியோ எது வேண்டுமானாலும் அரசாக்ஷி நடத்தலாம். இவைகளில் ஒவ்வொன்றும் தாய் நாட்டு விஷயங்களை முதலில் பார்த்துக் கொண்ட பின்னரே மற்றதைக் கவனிக்கும். சென்ற [illegible] தொழிற் கக்ஷி அரசாங்கம் நடக்கும்போதுதான் மகாத்மா சிறைபுக நேர்ந்தது. இதுபோது மூன்று கக்ஷிகளாலும் கூட்டு அரசாங்கமாக பார்லிமெண்டை நடத்தி வரப்படுகிறது. செல்வத்திலும் செல்வாக்கிலும் பிடிவாதத்திலும் நிகரற்ற கன்சர்வேடிவ் கக்ஷியின் அங்கத்தவரிலொருவரே இந்தியாவின் மந்திரியாயிருக்கின்றார். இந்தக் கக்ஷிகளில் வரும் ஒவ்வொருவரும் பிற நாட்டு விஷயத்தில் தங்களது நினைப்பை வெள்ளையாகச் சொல்லிவரும் ஓர் சிறந்த குணம் படைத்தவராகும். உதாரணமாக இந்தியா மந்திரியாகிய சர். சாமுவேல் கோரை விட்டுவிட்டு, திரு. சர்ச்சிலைக் கவனிக்க வேண்டும். வாயாடிகளும் தந்திரசாலிகளும் கூடிய இச் கக்ஷியினரின் அதிகாரத்திற்குள்ளேதான், இன்று நடக்கும் தேசிய அரசாங்கமென்ற கூட்டுக்கக்ஷி அரசாங்கம் நடைபெற்று வருகிறது.

ஐரோப்பாவின் நிலைமை இவ்விதமிருக்கும்போதுதான், மிதவாதிகளின் மனம் பெரிதும் மாறுதலடைந்திருக்கின்றது. இவர்கள் இந்த முறையேனும் தங்களின் மானத்தையும் தேசாபிமானத்தையும் காப்பார்களா? என தேசம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஒன்று, என்றும்போல் தந்திர சாமர்த்தியத்தைக் கொண்டு இந்தியரின் கண்ணை மறைக்கவேண்டும்; அல்லால், ஆங்கில அரசாங்கத்தின் எண்ணத்தை மாற்றி வெற்றிகொள்ள வேண்டும். இரண்டில் ஒன்றே செய்யவேண்டிய நிலைமை சம்பவித்திருக்கிறது. மிதவாதிகள் கோரிக்கைக்கு சர்க்கார் இணங்காது போயின் வேறு எம்முறையைத்தான் பின்பற்றப் போகிறார்களோ? மிதவாதிகளை



வரும் இது சமயத்தில் ஒற்றுமையடைந்து வருவதாக அறிகின்றோம். இது ஒரு நற் சகுனமே. விரைவில் ஓர் முடிவுக்கு வருவார்களெனவே தெரிகிறது. நிகழ்ச்சியை வரவேற்போமாக.

## இரண்டு ரூபாயில் விளையும் இலாப நஷ்டம்!

‘பாரதி’ சிறந்த பத்திரிகை. அதன் இயல்புக்கு சந்தா மிகவும் குறைவு. இந்த 2 ரூபாய்க்கு அதிகமானால்தான் பத்திரிகை நடத்துவது இலகுவாயிருக்கும்’ எனப் பல அன்பர்கள் அடிக்கடி தெரிவித்து வந்துள்ளதை, அவர்களைப்போலவே யாமும் ஒப்புக்கொள்ளுகின்றோம். நாட்டின் செல்வ நிலை சீர்படவில்லை. மக்கள் யாவரும் தாராளமாகப் ‘பாரதி’யைக் கைக்கொள்ளவே ரூ. 2/- என சந்தாவை ஏற்படுத்தினோம். போஷகர்களின் உதவியாலும், நமது உடல் பொருள் ஆவியின் விளைவாலும் இந்த 2 ரூபாய்க்கே இந்த அளவில் வெளிவரும் பரியந்தம் பிரசுரிப்பதாகத் தீர்மானம். அதனால் பல துன்பங்களுடன் கஷ்ட நஷ்டத்தையும் சகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த ஒரு மாஸிகைக்கு நாட்டின் உதவி இவ்விதம் குறைவாக விருந்தால், எவ்விதம் பாஷை வளர்ச்சியோ தேச விருத்தியோ சரிவர நிறைவேறும்? வருடத்திற்கு இரண்டு ரூபா தருவதற்குத் தமிழர்களில் எத்தனை பேர் இன்று முன்வந்திருக்கின்றார்கள்! இந்தியனின் சராசரி வருமானம் தினசரி 0–1–3 எனச் சொல்லப்படுகிறது. இந்தக் குறைந்த அளவான வருவாயுடையவர்கள் பத்திரிகை இன்னதென்பதே அறிய முடியாதுதான். இவ்விதமல்லாத எத்தனை மக்கள் தமிழர்களில் இருக்கின்றார்களெனக் கூறலாம்!

நல்லனவற்றிற்கெல்லாம் நாடு ஆதரவு தரவேண்டியது அவஸ்யம். அன்றே க்ஷேமமும் புகழும் வளரும். இன்று ‘பாரதி’க்காகத் தங்களது உழைப்பையும் உடைமையையும் நல்கும் அன்பர்கள் எத்தனை பேர், இத் தொகையை விரல்விட்டு எண்ணிவிடலாம். நாட்டுக்காகவே தோன்றியுள்ள ஒன்றிற்கு இந் நிலையாயின் மற்றவற்றைப் பற்றி எழுதி யென்ன ஆவது! சின்னஞ் சிறு தொகை! சிலருக்கு விநாடியில் அழியும் பணம்! ஒரேயொரு 2 ரூபா கொடுத்து ஆதரிக்க வேண்டாமோ? வருடமெல்லாம் ஒருவரோ ஒரு சிலரோ இந்த ஒன்றின் உயிர்ப்பிக்காகவும் விருத்திக்காகவும் அல்லும் பகலும் அனவரதமும் ஓயாதுழைத்து உடலம் உருகுவதுதானோ முறை? சென்ற மூன்றாண்டிலுற்ற நஷ்டத்தைக் கவனியுங்கள்! மேலும் இவ்விதம் நிகழாதிருக்க உங்களது முயற்சியும் துணையும் வேண்டுகின்றோம். இந்த ஒரு சிறு உதவியை, வேண்டுகையின் மீதேனும் செய்வது உங்கள் கடமையல்லவா? உங்கள்பால் விரும்புவது இந்த ஒரு விருப்பமே எப்பாலுள்ளது. அதன் நிறைவில்தான் ‘பாரதி’யின் புதிய உயிர்ப்

பும், வளர்ச்சியும், மேன்மையும் சார்ந்திருக்கிற தென்போம். ஆகலான் மனமுவந்து உங்கள் பெரும் பொழுதில் சிறு பொழுதைச் சில நாட்களுக் கொதுக்கி முயற்சித்து, இன்றுள்ள 'பாரதி'யின் சந்தாதாரர்களின் எண்ணிக்கைக் குறைவை மிகு விரைவில் மாற்றி, நண்பர்களையும் அல்லாத அன்பர்களையும் சந்தாதார்களாகச் சேர்த்தளித்து, வீடுதோறும் அல்லாவிடினும் பதினாயிரம் பாரதியேனும் வெளிவரும் தன்மையில் மிகுதிசெய்து உதவுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். உங்கள் பணியும் பலனும் விரைவில் நிகழுமெனவும், எமது விருப்பம் அப்படியே ஒப்புக்கொள்ளப்பெற்று நிறைவேறுமெனவும் முழு மனதுடன் நம்பிக்கொண் டிருப்பதையும் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

## நபி நாயக ஜெயந்தி

இஸ்லாமிய மதம், உலகில் நிலைபெற உழைத்த திருத்தூதராம் முகமது நபிநாயகம் அவர்களின் ஜெனன தினமாகிய (17–7–32) பெருநாளை இந்தியாவின் பல பாகங்களில் விசேஷமாகக் கொண்டாடப்பெற்றது. இப் பெருநாளில் வட இந்தியாவில் யாதொரு போரும் நடைபெறாதது ஓர் நற்குறியாகும். தென்னிந்தியாவிலோ இந்நாளில் ஓர் ஒப்பற்ற செயல் நடைபெற்றதை அறிந்து மிகவும் ஆனந்தமடைகின்றோம்.

உலக மக்களின் மத்தியில் இன்று இஸ்லாமிய மதமே சகோதரத்வத்திற்கும் சமத்துவத்திற்கும் உதாரணமாக இருந்து வருகின்றது. அதன்பால் பற்றுக்கொண்டு அம் மதத்தினைப் பின்பற்றி வருவோர்களின் தொகை கோடிக் கணக்காகும். இந்தியாவில்மட்டும் இஸ்லாமியர் ஏழு கோடியினர் வசிக்கின்றார்கள். இவர்கள் மதத்தளவில்தான் இஸ்லாமியர். தாயகமோ இந்தியாதான். இந்த ஒரு விஷயத்தாலேயே ஒற்றுமையும் பரஸ்பரமும் நிலவி, கூடி வாழ வேண்டி யிருக்கிறது. இந்த உண்மையைக் கண்டு அனுஷ்டானத்தில் கைக்கொண்டுவரும் பெருமை இந்தியரில், தமிழ் மக்களுக்கே விசேஷமாக அமைந்திருக்கிறது என்பது தவறாகாது.

மகான் முகமது அவர்களின் ஜெயந்தியை இஸ்லாமியரும் தமிழர்களும் சேர்ந்து பல இடங்களில் கொண்டாடினார்களென்றும், இருசாராரும் சேர்ந்து பல கூட்டங்கள் கூட்டி நாயகப்பெருமானின் விசேஷங்களைப் பிரசங்க வாயிலாக மக்களுக்கு விளக்கினார்களென்றும் செய்தி வருகிறது. இவ்விதம் மத விஷயத்தில் கலந்து ஒற்றுமையுடன் நலந்தரும் செயல்களைச் செய்வதால், உண்மையன்பும் நட்பும் மிகுவதா யிருக்கிறது. தென்னிந்தியர் நெடுங்காலமாகவே ஒற்றுமையுடன் இருந்துவருகிறார்கள் என்பது அறியத்தக்கது. எனினும் ஓரோரிடங்களில் நிகழுஞ் சின்னஞ்சிறு கலகங்கள் பெரிதும் கவலையைத் தருவதா யிருக்கின்றது. இவைகளைப்



பொருட்படுத்தத் தக்கதல்லவெனத் தள்ளிவிடுவதற்கில்லை. சில பிடிவாதக்காரர்களாலேயே இத்தகைய செயல்கள் நடைபெறுகிறது. இதனை முளையிலேயே கிள்ளி, என்றும்போல் இந்து இஸ்லாமிய சோதர வளர்ச்சியைக் காப்பது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். இருசாராரும் ஒருமிக்க வாழ்வதற்கும் அன்பு, நேசம் பெறுவதற்குப் இரு பிரிவினரும் தாராளமாக இவ்விதமான நன்னாள் ஒவ்வொன்றிலும் மனமுவந்து கலந்து, பெரியோர் பெருநாளில் தங்கள் தங்கள் மனமாற்றத்தை நீக்கி, கவலையையும், கடுமையையும் விடுத்து, ஓர் தாயின் பிள்ளைகளென வளர, தக்கவிதமாக நடப்பது நாட்டின் நலனுக்கும் மக்களின் க்ஷேமத்திற்கும் பெரிதும் விரும்பத் தக்கதாகும்.

## சிறைச் சாலைகளில் இராஜீயக் கைதிகள்

இராஜாங்கத்தோடு எதிர்த்துச் சிறை புகுந்தவர்களெல்லாம் இராஜாங்கக் கைதிகளென்பது வெளிப்படையான விஷயம். அவர்களின் நலத்திற்கும் சுகத்திற்கும் சர்க்காரே பொறுப்பாளிகள். போரிலே பிடிக்கப்பட்ட எதிரிப் படைகளுக்கும் இவர்களுக்கும் ஓர் விஷயத்திலேயே மிகுந்த வித்தியாசம். எதிரிகள் ஆயுதங்களுடன் போராடியவர். இந்த இந்திய இராஜாங்கக் கைதிகளோவெனில் வெறுங் கையராய் வாய் வார்த்தை- சில சமயங்களில் அதுகூடவின்றி சர்க்கார் விருந்தினராகின்றனர். இவ்விதமாக எதிர்த்துச் சிறை சென்றவர்களை, சர்க்கார் என்ன செய்ய வேண்டும்? ஒன்று தம் வழியில் திருப்ப நியாயமும் மரியாதையுமான வழியைப் பின்பற்றி வெற்றிபெற வேண்டும். அன்றேல் அவர்களது தண்டனை காலம் முடியுமட்டும் க்ஷேமமாகவும் ஜாக்கிரதையாகவும் காப்பாற்றி வரவேண்டும். இவ்விதம் செய்வதே நியாயமும் முறையுமென உலகம் ஒப்புக்கொள்ளும்.

இவ்விதம் செய்யாது சின்னஞ்சிறு விஷயங்களுக் கெல்லாம் கூக்குரலும் கூப்பாடும் எழும்பும் நிலையில், சிறைச்சாலைகளில் நிகழ்வது சர்க்காருக்கே பெரும் நஷ்டமாகும். சிறையில் நடைபெறும் உணவைப்பற்றிய குறைபாடு, பிற அசௌகரியங்கள் விஷயமாக ஒன்றும் சர்க்காருக்குத் தெரியவராதெனப் பல தடவை சொல்லப்பட்டு வருகிறது. இதனை ஏன் இவ்விதம் மறைக்க வேண்டுமோ தெரியவில்லை.

உணவுப் பொருட்கள் இதுபொழுது சென்ற 1930–31-ம் வருடம் இருந்ததுபோ லில்லையெனத் தெரிகிறது. இவ்வித அற்ப விஷயங்களெல்லாம் நம் நாட்டுச் சிறைகளிலேதான் நடைபெறுவதாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. ஏன் இவ்விதம்?

சர்க்கார், உணவு விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்தி, இது போதுள்ள வகுப்புகளுக்கேற்ற செலவிலேயாயினும் தகுந்த விதம் நடைபெற்று வருகிறதாவென அறிந்து, பொது மக்களுக்கு அறிவிப்பது அவஸ்யம்.

அபராதம் வசூல் ஆகாதவர்களுக்கு அதிகப்பட விதித்திருக்கும் தண்டனையையே கொடுத்து வருவது சிலாக்கியம், அடிக்கடி மாற்றக்கூடாது. இதனால் வீண் பணச் செலவும் சிரமமும் நிகழ்வதுடன் கைதிகள் உடல் நிலைமையும் மோசமாகும். இஃதன்றிப் பெண் கைதிகளைப் பெண் சிறைச்சாலையிலேயே வைத்து, அவர்களை விசேஷ சலுகையுடன் கவனித்தும் வரவேண்டும்.

கைதிகளை, உற்றார் பார்க்க விரும்பினால், கைதிகளுக்கும் பார்ப்போருக்கும் இடையில் திரையிடும் வழக்கம் சமீப காலமாக அனுஷ்டிக்கப்பெற்று வருவதாகத் தெரிகிறது. சமீபத்தில் ஓர் சிறைக்கு விஜயம்செய்த, ஜெயில் சூப்பிரண்ட் ஜெனரலை இராஜீயக் கைதிகள், திரைச்சீலை யிடுவதைப்பற்றி வினவியபோது, 'இரட்டையாகவும் இடப்படு'மெனச் சொல்லப்பட்டதாக ஓர் செய்தி கூறுகிறது. இதுபற்றி நமது சென்னை சட்டசபையில் கேள்வி கேட்டபோது, சர்க்காருக்கு இது விஷயம் தெரியவாதெனவும் சொல்லப்பட்டது. இதனை யார் நம்பப்போகின்றார்கள்? இவ்விஷயம் நாகரீக உலகத்திற்கே மாறுபட்ட தென்பதைச் சொல்ல வேண்டாம். திரைச்சீலையிட்டுப் பேச எந்த சுயமரியாதையுள்ள கைதியும் சம்மதிக்கப் போவதில்லை. ஆகையினால் இதனை உடனே அகற்ற வேண்டுகின்றோம். இவ்விதம் செய்வதை பொது ஜனங்கள் எதிர்பார்க்கின்றனர். சர்க்கார் கவனிக்குமா? எதிர்பார்க்கலாமா இவ்வித சாதாரண சீர்திருத்தங்களை?

### பிறப்பால் ஏற்றத் தாழ்வு!

இந்தியாவில் பிறந்த எவனேயாயினும் அவன் இந்தியனாகவே பாவிக்கப்பட வேண்டும். அவனுக்கு எல்லாவித உரிமைகளும் இருக்க வேண்டும். அன்றே நாம் பூரண சுயராஜ்யம் பெற்றவர்களாவோம். அவ்வாறின்றி பிராமணன் அல்லாதவன், இந்து, முஸ்லீம், உயர்ந்தோன், ஒடுக்கப்பட்டோன் என்ற வித்தியாசம் இருந்து வரும் பரியந்தம், நாட்டுக்கு தீயோர்களால் ஒருமிக்கச் சேர்த்து வைக்கும் தீங்கைப்போல் பல்லாயிர மடங்கு சேமித்தவர்களாகவே கருதி, சபிக்கவேண்டியிருக்கும். ஏன் இவ்வித மடமையான செயலைக்கொள்ள வேண்டுமென்றால், சாத்திரம் இடங் கொடுக்கவில்லை; இந்து மதம் முழுகிப்போகுமெனவும் சொல்லப்படுகிறது. இது உண்மையான காரணமல்ல வென்பதை அவர்கள் அறிந்தே தான் சொல்லுகின்றார்கள். இவர்களிடம் மேலும் பேசுவோமா



னால், உண்மை வெளிப்பட்டுவிடுகிறது. பின்னர் வழக்கம் என்ற முறையைச் சொல்லி ஏமாற்றப் பார்க்கின்றனர். சத்தியத்திற்கும் தியாகத்திற்கும் மற்ற ஒவ்வொரு சிறந்த குணத்திற்கும் செயலுக்கும் நிலையாகவிருந்த புண்ணிய பூமியில், வேஷமும் சூதும் மோசமும் குடிகொண்டுவிட்டதை அறிஞர் அறியாதிருந்து வருவரா? அவர்களாலிடப்படும் சாபம், அன்று ரிஷிகளால் இடப்பட்டதைப் பார்க்கிலும்கடுமையாகவன்றோ விருக்கும்! ஏனோ ம்மதைகொண்ட இவர்கள் இதை அறியவில்லை!! தாழ்த்தப்பட்டோரும் நசுக்கப்பட்டோரும் மனங்கொதித்து எழுந்தால், இவர்களின் பிடிவாதமும் மானக்கேடானதுமான இவைபோன்றவை நிமிடத்தில் மறையாதோ! பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் பழக்கத்தை உடனே அகற்றவேண்டும். கட்டாயப்படுத்தாதபோது செய்வதே இருதிறத்தார்களுக்கும் நாட்டுக்கும் நலன் தருவதாகும். ஜப்பான் தேசம் மேன்மையுற்று வல்லரசுகளி லொன்றாகி யிருப்பதற்குக் காரணம், உயர்ந்த வகுப்பினர் என்போர் சமயமறிந்து, தங்கள் மடமையை நீக்கி, யாவருடனும் சமமாக—தாராளமாகக் கலந்து கொண்டதன்றோ? இதனை அறிந்தும் ஏன் தாமதம்?

இந்தியர், இந்தியாவிலுள்ள தங்கள் சோதரரைத் தாழ்ந்தோர்-தீண்டப்படாதோர் என்று பாவிக்கும்வரை, இந்தியர் உரிமை வேண்டிச் செய்யும் தியாகமும், பணியும், அனைத்தும் வேஷம் போன்றதாகி வீணேபோக நேரிடுமென அஞ்சி அறிவுறுத்துகின்றோம். நாம், தாழ்வாக நம்மவரை நமது நாட்டிலேயே நடத்தின குற்றத்திற்காக, உயர்ந்த வகுப்பாரை மட்டுமின்றி இந்தியர் அனைவரையும் வெளிநாட்டார் நம் நாட்டிலேயும் வெளி நாட்டிலேயும் கேவலம் அடிமைகளைப் போலவே நடத்துவது சகித்தற்காகுமோ? மிகுந்த அறிவுபடைத்த-செல்வம் மிகுந்த இந்தியனேயாயினும் இவ்விதமாகவே அயல்நாட்டில் கருதப்படுகின்றான்! இன்று இந்தியனாயிருப்பதைக்காட்டிலும் மற்றொரு நாட்டுரிமை கிடைப்பதாயின், அதற்கு உடனே அவன் மனம் இடங்கொடுக்கிறது. இவ்விதமாக எத்தனையோ இந்திய ரத்தினங்களை இழந்துவிட்டோம். இவ்வாறு இழந்தும் அழிந்தும் அறிவுடைமையைக் கொள்ளாவிடில், இந்துமதமென்பது எத்தனை வருடங்களுக்கு இன்னும் இருந்துவிடும்? ஒன்று உணர்ச்சிபெற்று சீர்திருத்தத்தை ஏற்கவும் ஆற்றவும் வேண்டும், அன்றேல் அழிவை விரும்பவேண்டும். இந்த இரண்டில் முன்னது சாத்தியமானதும் போற்றத் தக்கதுமாகும்.

இந்து மதம் பல பிரிவாகவும் விரிவாகவும் சமுத்திரம்போல் பரவி, யாவற்றிற்கும் முதன்மையாயிருப்பது. அதன் உயர்வும் அவஸ்யமும் மற்ற மதஸ்தர்கள் மதிப்பதிலிருந்தேனும் நாம் அறிய வேண்டாமா? நலஞ் செய்வதற்கு, தகுந்த காலமாகிய இதுபோது

முனைந்து, மதத்தின் உயர்வாலும் உண்மையாலும் தெளிந்து, அநியாயமான பழக்க வழக்கங்களையும் மாற்றங்களையும் ஒழியுங்கள். எதிர்பாராது வரும் சண்டமாருதத்தை எதிர்த்து நிற்க வழி இஃதொன்றே. இந்தியர் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாவன்றே, பாரதகண்டத்தின் க்ஷேமக்கால் நாட்டப்படும்; நன்மையும் வளர்ந்தோங்கும். அவ்விதம் செய்வதற்கு உயர்ந்தோர் என்னும் நீங்கள் முன்வருவீர்களா? வரத்தான் வேண்டும். அதுவே சுதந்திரம் விரும்பும் இந்தியாவின் விருப்பமும், வேண்டுகையும்.

## பர்மா பிரிவினை

பர்மாவானது இந்திய அரசாங்கத்தி லடங்கிய ஓர் மாகாணமாயிருந்து வருகின்றது. இதில் இந்தியர் பலர் விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூலி வேலை முதலியவற்றை பர்மியரைப் போலவே பூரண உரிமையுடன் செய்துவருகின்றனர். இதுபோது கூடாத ஓர் இயக்கம் அங்குத் தோன்றி, 'பர்மா, பர்மியருக்கே' என தீவிரமாக வேலை செய்துவருகின்றது. பர்மா பர்மியருக்கு ஆகும்போது, இந்தியா, இந்தியருக்குத்தான் என்பதை இந்த பர்மியர்கள் அறியாது பல சூழ்ச்சி செய்துவருகின்றனர். இப் பர்மியர்களுக்கு எதிரிடையாக, தேசியஞானமும் தேர்ந்த அறிவும்பெற்ற பல சிறந்த பர்மியர்கள், இந்தியாவுடன் பர்மா சேர்ந்திருப்பதினாற்றான் இலாபமும் க்ஷேமமும் பயக்கு மெனவும் பிரிந்தால் உதவியற்ற நிலையையடைய வேண்டியதுடன் இருக்கும் செல்வமும் நாளுக்கு நாள் அயல் நாட்டிற்கு-விசேஷமாக ஐரோப்பாவுக்குச் செல்ல வேண்டியிருக்கு மெனவும், அதனால் நாடு வறுமையுற்று நாசமடையு மெனவும் பொது மக்களுக்கு அறிவித்து வருகின்றனர். இந்த இருதிரத்தார்களுக்கும் இதுபற்றிக் கலகம் விளையக்கூடிய நிலைமை அனேக முறை சம்பவித்ததெனவும் தெரிகிறது.

இவ்விதம் பர்மா பிரிவினை நிகழ்வதானால், பர்மாவில் குடியேறியுள்ள இந்தியரின் கதி என்ன? அங்கு அவர்கள் போட்டிருக்கும் அளவற்ற செல்வத்திற்கு வழியெங்கே? தொழில் நிலைமையை வேண்டுமானாலும் ஒருவாறு மாற்றிக்கொள்ளலாம். பணத்திற்கு வழிவேண்டும்.

வனமும் வனாந்திரமுமாய்க் கிடந்த பர்மிய நாட்டை இந்தியரது செல்வத்தால் பொன்னாடாகச் செய்யப் பெற்றிருக்கிறது. அதுமட்டுமன்றி அவர்களின் மதமும் இந்தியாவினுடையதே. ஏதேனும் ஓர் வழியில் இந்தியர்களுக்கு, பர்மியர் நன்றி பாராட்டக் கடமைப் பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

ஊனும், உடையும், உடைமையையும் நல்கிய இந்தியர்களை, நாட்டைவிட்டுத் துறத்தவே பிரிவினை முயற்சி, அயலாரின் சொற்



கேட்டு நடைபெற்று வருகிறது. இன்று ஆசை வார்த்தை காட்டும் அந்நியர் நாளைவரும் கஷ்ட நிலைமையில் உதவுவரா? செல்வமும் அழகும் இருந்து வரும் பரியந்தம் இவர்களின் கும்பலுக்கும் பெருமிதத்துக்கும் குறைவிருக்காது! பர்மா பிரிவினை நிகழ்ந்து, அதன் பயனாக இந்தியர், பர்மாவை விட்டு வெளிப்படுவாராயின், வெளிப்பட்ட சின்னாளில் ஏங்கவே நேரிடும். அப்பொழுது ஒன்றும் செய்ய முடியாத நிலையே சம்பவிக்கும்.

அறிஞர்களின் அறிவிப்பை எதிர்க்கும் பர்மியர்களைப்பற்றி எண்ணுகையில் மிகவும் வருந்துகின்றோம். விளக்கில் விட்டில் பூச்சி விழுந்த கதைக்கொப்பவே இவர்களின் செயலென இவர்கள் அறியாதது விசனிக்கத் தக்கதாகும். நிற்க,

பர்மாவிலுறையும் பத்து லக்ஷம் இந்தியரிலே விசேஷமாகத் தமிழர்களும் தமிழ் நாட்டு முஸ்லிம் சோதரர்களுமே அதிகமென மதிக்கின்றோம். இந்த தமிழ் முஸ்லீம் சோதரர்களில், தனவைசியர் வட்டித் தொழிலையும், மற்றோர் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளையும் செய்துவருவது தெரிந்த விஷயமே. பர்மாவிலுறைவோர் இதுபோது முன்னிலும் அதிகமாக நாட்டன்பும், வலிமையும், திடனும்கொண்டு போராடவேண்டிய பரீக்ஷா சமயம் 2-வது சம்பவித்திருக்கிறது. இரண்டாண்டுக்கு முன்னர் நடைபெற்ற பர்மியர்—இந்தியர் கலகத்தில் எவ்விதம் ஒற்றுமையுடனும் தீரத்துடனும் சேர்ந்து வெற்றி பெற்றீர்களோ, அவ்விதமே பர்மா பிரிவினை எதிர்ப்பிக்கும் சேர்ந்து நல்லவிதமாக சாத்வீக முறையில் பணியாற்றுங்கள். உங்கள் பணமும் உழைப்பும் வீணிற் செல்லக்கூடியதல்ல! நன்றியை பர்மா மறந்துவிடுமாகில், நீங்கள் கவலைகொள்ள வேண்டியதில்லை. உங்கள் பணமும் பொருளும் இந்திய சர்க்கார் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அந்நிலைமை வரின் ஏற்கவேண்டியதே. அன்றியும் பர்மா பிரிவினை இலகுவில் ஆகக்கூடிய சாமான்ய விஷயமன்று. பெருமையும் ஆத்திரமுமுடைய சில அந்நியரின் வார்த்தைக் கிணங்கியே சாதுக்களாகிய பர்மியர்கள் இத்துறையிலிறங்கி யிருக்கின்றார்கள். ஆனால், இதுபற்றி வருந்துவதற்குப் பதிலாக நீங்கள் வீரமும் தீரமும் படைத்து ஒற்றுமைகொண்டு நிற்க வேண்டிய சந்தர்ப்பம் வாய்ந்திருக்கிறது. உங்கள் ஒற்றுமையை வலுப்படுத்துங்கள். அதினின்று வேண்டிய ஆக்க வேலைகளைச் செய்யத் தாமதியாது பிரவேசிக்க முயலுங்கள். அதுவே உங்களின் பிரதான கடமையாகும்.

## வி. பி. முறையில் விளையும் கேடு

'பாரதி'யைச் சென்ற சித்திரைமீ" வெளியிட்ட 4-வது முத மணியில் குறிப்பிட்ட வண்ணம், சந்தாவை மணியார்டரில் அனுப்

வைக்காத பெருவாரியான நேயர்களுக்கு வி. பி. பி. யில் 2-ம் மணியை அனுப்பி வைத்தோம். அனுப்பியுள்ளதில் 4ல் ஓர் பாகமே பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. மற்ற 3 பாகமும் திருப்பிவிடப்பட்டிருக்கிறது. இதனைக் கருதில் வருந்தாதிருக்க முடியவில்லை. சந்தாவை மணியார்டரில் அனுப்பிவிட்டால் 4 அணு இலாபமாவதுடன் வேலையும் குறைந்துவிடும். அவ்வாறு மணியார்டர் அனுப்பாதுபோயினும் வி. பி. பி. யையேனும் பெற்றுக்கொண்டிருந்தால், இக் குறிப்பு எழுதவேண்டிய அவஸ்யம் இல்லாமலே போய்விடும். இவ்விரு வழிக்கும் விருப்பமில்லாதார் தங்கள் சம்மதத்தைத் தெரியப்படுத்தி விடின், வி. பி. பி. அனுப்பும் செயலும் செலவும் நிகழாது; பெரு நஷ்டத்தைத் தடுக்கும் ஓர் நற்பணியையும் செய்தவர்களாவார்கள். நலன்தருமிவ்விரு வழியையுங்கொள்ளாது மிகுந்த நஷ்டத்திற்கே, சந்தாதார்கள் இவ்வாண்டு இடங் கொடுத்துவிட்டதிற்கு மிகவும் கவலையடைகின்றோம். ஆரம்ப நிலையிலுள்ள 'பாரதி'க்கு இந்த நஷ்டம்கூட மிகுந்த கஷ்டத்தையே கொடுக்குமென்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. எனினும், வி. பி. பி யில் அனுப்பிய பத்திரிகையைப் பெற்றுக்கொண்ட சந்தாதார்கள் சிந்திக்காது செய்த நஷ்டத்தைக் குறித்து வருந்திக்கொண்டே நமது நன்றியையும் வந்தனத்தையும் உரிமையாக்குகின்றோம்.

இதிலிருந்து 'பாரதி'யை வருட முடிவில் வி. பி. யனுப்பும் முறையைக் கைவிடுவதாகவே தீர்மானித்துவிட்டோம். எனினும் அதுசமயம் இதுபற்றி விளக்கமாக அறிக்கை வெளியிடப்படும்.

## கதைகளும் வர்த்தமானங்களும்

'பாரதி'யில், வெளிவரும் கட்டுரைகள் யாவும் ஆராய்ச்சி மிக்கவைகளே யென்றும், பல திறத்தாரும் பயிலத் தக்க முறையில் இலகுவான விஷயங்களுடன் கதைகளும், ஹாஸ்யங்களும், வர்த்தமானச் சுருக்கமும்., பந்தனங்களும் ஒருசிறிது வெளிவருவதும் வேண்டப்படுகின்றதென்றும் நண்பர் சிலரின் குற்றச்சாட்டாகும்.

'பாரதி' சிறிய வடிவில் 80 பக்கங்களைக்கொண்டே வெளிவருவதாலும், முக்கியமான விஷயங்கள் வெளிவரவேண்டியவை மிகுந்து குவிந்து இருந்து வருவதாலும், நண்பர்களின் விருப்பத்தைச் சரிவர நிறைவேற்ற முடியாமலே இருந்துவிட்டோம். இக் குறையை நிவர்த்திக்க வேண்டியதும் அவஸ்யமாகையினால், வரும மணி முதல் பகுதி பகுதியாக விஷயங்களை வெளியிட முயற்சித்துள்ளோம். ஆனால், என்றும் [illegible]ந்த கட்டுரைகள் வந்துகொண்டிருக்கும். சில பக்கங்களிற்றான் கதைகளுக்கும், ஹாஸ்யங்களுக்கும், மற்றவற்றிற்கும் இடம் கொடுக்கப்படுகிறது. ஆகையினால் 'பாரதி,' முன்னிலும் ஓரளவு பொலிவுடையதாகுமெனவே யெண்ணுகின்றோம்.

# “பாரதி”

## சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

நான்காம் ஆண்டு நடைபெறுகிறது.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியானைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு
தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாஸிகை

**“பாரதி” ஒன்றே யாகும்.**

உடனே சந்தாதார்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதார்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

**சந்தா விபரம்:**

போஷக சந்தா குறைந்தது ரூ **100/=**

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2/=** அல்லது **3** ஷிலிங்
வெளி நாடுகளுக்கு „ ரூ **3/=** „ **5** „

தனிப் பிரதி விலை அணு 4. அயல் நாடு அணு 5.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை எதிர்பார்க்கப்படுகிறது.
விபரத்திற்கு 2 அணு ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
**“பாரதி” ஆலயம்,**
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## தமிழபிமானிகளுக்குச் சிறந்த விருந்து

# 1. திருவாசகம்.

(உண்மை ஞான விளக்க உரையுடன்.)

'மனங் கரைந்து மலங் கெடுக்கும் வாசகம்' எனப் புலவர் புகழும் தமிழ் மறையின் பெருமையை உணராதார் தமிழுலகில் ஒருவருமே இரார். சைவ சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள திருவாசகம் என்னும் அரிய பெரிய நூலைத் தமிழராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் ஆர்வத்துடன் பிழையறப் படித்துப் பயன்பெற வேண்டும். இந் நூலின் உரையாசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்தரமாணிக்க யோகியார் அவர்கள் தமது முதிர்ந்த ஆன்ம ஞான அனுபவத்தினால் இந் நூலை வெறும் பக்தி நூல் அன்றெனவும், பிரம்ம சாதனைகள் நிரம்பிய ஆன்ம ஞானக் களஞ்சியம் எனவும் ஐயந்திரிபறத் தெளிந்து தாம் சென்னையில் நிறுவியுள்ள பிரம்ம வித்யா சங்கத்தின் உபயோகத்திற்காக இந் நூலுக்குச் சிறந்த உரையியற்றி யிருக்கின்றார்கள். இது டிம்மியளவில் 115 பாரத்தில் அமைந்திருக்கின்றது; உயர்ந்த பளபளப்பான தாளில் அழகாய் அச்சிடப்பெற்றுளது; சிறந்த காலிகோ பைண்டு செய்யப்பெற்றது.

விலை ரூபா 10—0—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

# 2. ஔவைக் குறள்.

(உரையுடன்.)

இந் நூல் வரகவிகளில் சிறந்த ஔவையார் அருளிய ஆன்ம ஞான நூல். இது திருக்குறளைப்போல் பண்டிதர்களும், பாவலர்களும் உரை யெழுதக்கூடியதன்று. இது ஆன்ம ஞான சாதனங்களைப் புகட்டும் நூல், ஆன்ம ஞான இன்பத்தை அளாவி அம் மெய்ச்சுகத்தில் ஈடுபடும் மெய்யன்பர்களுக்கே இது பெரிதும் பயன் அளிக்கும். ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்தமாணிக்க யோகியார் அவர்கள் தமது சிறந்த ஆன்ம ஞான அனுபவத்தினால் இந் நூலுக்குச் சிறந்த உரை எழுதியிருக்கின்றார்கள். இதுவும் உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பெற்றுளது.

விலை ரூபா 1—8—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பிரதிகள் கிடைக்கும் இடம்: வே. ஜ. முருகேச முதலியார்,

15, முத்துமுதலி தெரு, புரசைபாக்கம்,

வேப்பேரி, சென்னை.